# திருமறைத்தீபம்



BIBLE LAMP

திருமறைத்தீபம்

**Issue No: 4 of 2003**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகை யில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியை யும் எவ்விதத்திலும் பிரசுரிக் கக்கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor**: R. Bala
**Publisher**: Sovereign Grace Publications
**Address**: P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone**: 64 9 272 8061
**Fax**: 64 9 272 8032
**email**: blamp@ihug.co.nz
**Web site**: www.biblelamp.org

“கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத்தடங்கல் என்றுதான் கூறவேண்டும்.”

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

*ஊழியத்தைக் குடும்பச் சொத்து போல் பயன்படுத்தும் முறையை தமிழ்கூறும் நல்லுலகில் காணப்படும் கிறிஸ்தவ ஊழியங்களில் பரவலாகக் காணலாம். குலத்தொழில் முறை இருந்து வருகின்ற நமது இனத்தில் கிறிஸ்தவ ஊழியங்களிலும் இந்த முறை பின்பற்றப்பட்டு வருவது எந்தளவுக்கு உலகப்பிரகாரமான சிந்தனைகளும், எண்ணங்களும் கிறிஸ்தவத்தைப் பாதித்து, சபைகளையும், ஆத்துமாக்களையும் இருட்டில் வைத்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாலாம். கிறிஸ்தவ ஊழியங்களில் குடும்பச்சொத்துபோல் இருந்துவரும் இந்தக் குலத்தொழில் முறையின் ஆபத்தை அலசுகிறது இந்த இதழின் முதலாவது ஆக்கம்.*

*பத்திரிகை ஆரம்பித்த காலத்தில் ஆன்மீகக் குழப்பம் என்ற பெயரில் ஓர் நூலை வெளியிட்டிருந்தோம். அது இப்போது அச்சில் இல்லை. அது பத்திரிகையில் ஒருபோதும் வராத ஓர் ஆக்கம். எல்லோரும் வாசித்துப் பயன்படும் விதத்தில் அதைப் பலதிருத்தங்களோடு இந்த இதழில் வெளியிட்டிருக்கிறோம். தமிழினத்தின் மத்தியில் காணப்படும் இன்றைய கிறிஸ்தவத்தின் நிலையை அது மறுபடியும் நினைவூட்டும் ஆக்கமாக இருக்கின்றது.*

*பிரசங்கம் தயாரிப்பதில் பிரசங்கிகள் காட்டவேண்டிய கவனத்தையும், கவனிக்க வேண்டிய அம்சங்களையும் தொடர்ந்து இந்த இதழிலும் வாசிக்கலாம். இந்த வருடம் நாம் வெளியிட்டுள்ள புதிய நூலான “சீர்திருத்த விசுவாசத்தை” மூன்று நண்பர்கள் ஆராய்ந்து தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றையும் இந்த இதழில் வாசிக்கலாம்.வழமையாக வரும் சில ஆக்கங்களை இந்த இதழில் வெளியிட முடியவில்லை. புதிய வருடத்தில் அவை தொடரும்.*

*இந்த வருடத்தோடு ஒன்பது வருடங்களைக் கண்டிருக்கிறது திருமறைத்தீபம். பல நாடுகளில் வாழும் கிறிஸ்தவர்களின் இதயத்திலும், வாழ்க்கையிலும் ஓரிடத்தைப் பெற்றிருக்கிற “தீபம்” தொடர்ந்து வரப்போகிற பத்தாவது வருடத்திலும் தடையில்லாது வெளிவரவும், பலருக்கும் ஆசீர்வாதமாக இருக்கவும் வைராக்கியத்தோடு ஜெபியுங்கள். ஆத்துமாக்களை வேத அறிவில் வளர்த்து, அவர்களை மனித ஞானத்தின் பிடியில் இருந்து விடுவிக்கும் சீர்திருத்த ஊழியத்தை செய்யும் பெரு நோக்கத்துடன் ஆசிரியரும், இதழை வெளியிடுபவர்களும் தொடர்ந்துழைக்க தவறாது ஜெபிக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் - பத்திரிகை குழுவினர்*

# ஊழியம் குடும்பச் சொத்தாகலாமா?

தமிழகத்திலும், தமிழகத்திற்கு வெளியிலுள்ள தமிழ் பேசும் மக்கள் வாழும் நாடுகளிலும் காணப்படும் கிறிஸ்தவ சபைகளிலும், ஊழியங்களிலும் பல காலமாக போதக ஊழியத்திற்கும், ஏனைய ஊழியங்களுக்கும் வருகின்றவர்கள் பெரும்பாலும் ஏற்கனவே அந்த ஊழியங்களில் இருப்பவர்களின் குடும்ப அங்கத்தினர்களாக இருந்துவருவதைக் காணலாம். நேருவுக்குப் பின் அவர் மகள் இந்திரா பிரதமராகியதும், அவருக்குப்பின் ராஜீவ் காந்தியும், இனி சோனியாவோ அல்லது ராகூலோ, பிரியங்காவோகூட பிரதமராகிவிடலாம் என்ற குடும்பப்பாரம்பரிய அரசியல் இந்தியாவில் பின்பற்றப்பட்டு வருவதைப் பார்க்கலாம். தமிழ் இனத்தில் குடும்பப்பாரம்பரிய தலைமை முறை ஆதியில் இருந்தே இருந்துவந்திருக்கின்றது. நாடான்ற தமிழரசர்கள் தங்கள் பிள்ளைகளை அரசர்களாக்கிப்பார்த்து மகிழ்ந்திருக்கிறார்கள். சாதிக்கொடுமை நிறைந்த நம்மினத்தில் குலவழக்கத்தைப் பின்பற்றி தொழில்கள் செய்து வரும் முறை இன்றும் இருந்துவருகின்றது. பிராமணனின் மகன் குலத்தொழிலைத் தொடர்ந்து பின்பற்றுவதும், கோவில் பூசாரியின் மகன் அதே தொழிலைத் தொடர்வதும், சக்கிலியனின் மகன் அவனுடைய குலத் தொழிலைச் செய்வதும் தமிழினத்தின் பாரம்பரிய குலவழக்கத் தொழில் முறை அமைப்பு. இது கர்த்தர் ஏற்படுத்திய வழிமுறையல்ல, மனிதன் தன் சுயநலத்தின் காரணமாக ஏனையோரை சுரண்டிப் பிழைப்பதற்காக ஏற்படுத்திக் கொண்டுள்ள தவறான வழிமுறை. இது சிறுபான்மையினரான ஓரினம் ஏனைய இனங்களை ஆண்டுப் பிழைப்பதற்கு சமுதாயத்தில் வழிவகுத்து இன்றும் பல இனங்கள் தாழ்வான நிலையில், தாழ்வுமனப்பான்மையோடு தொடர்ந்தும் வாழ்ந்துவர வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்தத் குலத்தொழில்முறை சமுதாயத்தில் ஒரு சில இனங்கள் தங்களுடைய அதிகாரத்தையும், பணபலத்தையும், ஆதிக்கத்தையும் தொடர்ந்து நிலைநாட்டிக் கொள்வதற்கும் வழிவகுக்கிறது.

இது தமிழினத்தில் நாம் தொடர்ந்து பார்த்துவரும் ஓர் சமுதாய இழுக்கு, தீங்கு. இது எப்படி கிறிஸ்தவ சபைகளுக்குள்ளும், ஊழியங்களுக்கும் நுழைந்திருக்கிறது என்பதைத்தான் நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்று தமிழ் நாட்டில் சுகம் தீர்க்கும் ஊழியம் செய்து வரும் ஒரு பிரபலமான மனிதரின் மகன், மனைவி, மகள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் வரிசைக்கிரமமாக அந்த ஊழியத்தில் ஈடுபட்டு ஊழிய வர்த்தகத்தை நடத்தி வருகிறார்கள். இது பலரும் அறிந்த குடும்பவாரிசு ஊழியமுறை. அதேநேரம் நம் கண்களுக்குத் தெரியாமல் சபை சபையாகவும், சபைக்கு

வெளியிலும் ஊழியங்களில் இந்த முறை நிர்த்தாட்சன்யமாக பின்பற்றப்பட்டு வருகின்றது. சமீபத்தில் ஒரு போதகர் தன்னுடைய பதினைந்து வயது மகனை இறையியல் கல்லூரிக்கு அனுப்பத் தீர்மானித்தார். ஏனெனில், மகனும் தன்னைப்போல போதக ஊழியத்தில் நுழைந்து குடும்ப வழக்கத்தைப் பின்பற்றி தனக்குப்பின்னால் சபையையும் காத்துக்கொள்ள வேண்டும் என்ற நப்பாசைதான். பெரும்பாலான போதகர்கள் இதே போக்கைத்தான் பின்பற்றி வருகிறார்கள். எனக்குத் தெரிந்த இன்னொரு சபையில் போதகர் திடீரென கர்த்தரின் பாதத்தை அடைய நேரிட்டது. அவர் வாழ்ந்த காலத்தில் தன் சபையில் எந்தவொரு உழியத்திற்காகவும் அவர் எவரையும் தயார் செய்யவில்லை, செய்யவும் விடவில்லை. அவர் இறந்தபிறகு சபையை அவருடைய உறவினர் ஒருவர் இன்றும் நடத்தி வருகிறார். தன்னுடைய மகன் ஊழியத்திற்கு வந்து போதகனாகி சபையைத் தொடர்ந்து கொண்டு நடத்த வேண்டும் என்ற ஆசையில் செயல்படாத போதகர்களை இன்று காண்பது அரிது.

இதில் என்ன தவறிருக்கிறது? உலகத்தில் ஏதோவொரு வேலையைச் செய்து பத்து காசு சம்பாதிப்பதைவிட, கர்த்தருக்காக என் மகன் உழைப்பது எத்தனை உத்தமமான காரியம். அதைப்போய் தவறு என்கிறீர்களே என்று சிலர் கேட்கலாம். உண்மைதான், போதகர் ஒருவரின் மகன் போதகனாக வருவதில் எந்தத் தவறுமில்லை. சபை வரலாற்றில் எத்தனையோ போதகர்களின் மகன்கள் போதக ஊழியத்திற்கு வந்திருப்பதை வாசிக்கலாம். அது கர்த்தர் அனுமதிக்கும் காரியம்தான். ஆனால், ஒவ்வொரு போதகனின் மகனும் நிச்சயம் ஊழியத்திற்குத்தான் வர வேண்டும், வேறு வேலைகளைச் செய்யக்கூடாது என்று நாம் வேதத்தில் எங்குமே வாசிக்க முடியாது. தாவீதையும் அவன் மகன் சாலமோனையும் உதாரணம் காட்டுவார்கள் சிலர். அதற்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இவர்கள் உணர்வதில்லை. வேதம் இதைப்பற்றி என்ன சொல்கிறது என்பதை இனி ஆராய்வோம்.

**1. உடலை வருத்தி உழைக்கக்கூடிய நியாயமான எந்தத் தொழிலும் நன்மையானதே என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.**

நம்மைப் படைத்த கர்த்தர் நாம் உழைப்பவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். ஆகவே, மனிதர்கள் எல்லோரும் ஏதாவதொரு தொழிலைச் செய்ய வேண்டும். அது போதகர்களுடைய பிள்ளைகளுக்கும் பொருந்தும். சில போதகர்கள், ஊழியக்காரன் உழைத்துச் சம்பாதிப்பது தவறு, அது ஊழியம் செய்பவனுக்கு இழுக்கு என்ற தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். இது வேதத்தைப் படித்ததால் ஏற்பட்ட சிந்தனை அல்ல, அவர்கள் தாங்களாகவே வளர்த்துக்கொண்ட கற்பனை. எல்லா இடங்களிலும் எல்லாப் போதகர்களும் முழு நேர ஊழியம் செய்து சபையில் இருந்து ஊதியம் பெற வேண்டும் என்றால் முடியுமா? புதிதாக உருவாகின்ற சபைகளும், சிறு சபைகளும் போதகர்களுடைய எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றி வைக்கும் அளவுக்கு பணவசதியைக் கொண்டிருப்பதில்லை. அத்தகைய சபைகளைப் போதகர்கள் நிராகரித்து விடமுடியுமா? சபையால் பணம் கொடுக்க முடியவில்லை

என்பதால் ஊர் பேர் தெரியாதவர்களிடமெல்லாம் பணம் கேட்டு அலைய முடியுமா? நிலமைக்கு ஏற்றபடி சபை வளர்ந்து தங்களுடைய தேவைகளை நிறைவேற்றி வைக்கும்வரை ஊழியத்தோடு வேறு ஒரு வேலையை செய்வது வேதபூர்வமான செயல். அதை இழுக்கு என்று சொல்பவர்களுக்கு ஊழியம் என்றால் என்னவென்று தெரியவில்லை என்றுதான் அர்த்தம். ஊழியக்காரன் வேலை செய்தால் ஊரில் தவறாகப் பேசுவார்கள், நம்மை மதிக்கமாட்டார்கள் என்று ஒரு ஊழியக்காரர் ஒருதடவை சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். இத்தகைய எண்ணங்கள் நாமாக வளர்த்துக்கொண்ட எண்ணங்கள். உண்மையில் தன் சொந்தக்கையை நம்பி உழைத்துப் பிரசங்கிக்கிறவர்களை ஊர் மக்கள் நிச்சயம் மதிப்பார்கள்; கர்த்தரும் ஆசீர்வதிப்பார்.

இதற்காக நான் எல்லாப் போதகர்களும் ஒரு வேலையைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. பெரிய சபைகளைக் கொண்டிருப்பவர்களுக்கு போதிப்பதற்கும், ஆத்துமாக்களுடைய தேவைகளைக் கவனிப்பதற்கும் நேரம் தேவை. பெரிய சபைகளால் போதகர்களுடைய வசதிகளை நிறைவேற்றக்கூடியதாக இருக்கும். ஆனால், சிறு சபைகளாலும், புதிய ஊழியத்தை ஆரம்பிப்பவர்களும் அத்தகைய வசதிகளை ஊழியத்தில் எதிர்பார்க்க முடியாது. ஊழியம் வளரும்வரை அவர்கள் தங்கள் தேவைகளைக் கவனித்துக்கொள்ளும் வகையில் வேலைசெய்வது நியாயமானது. ஐந்து, ஆறு ஆத்துமாக்களை மட்டும் வைத்துக்கொண்டு சிறு ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிற மனிதன் நியாயமாக ஒரு தொழிலைச் செய்து தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளப் பார்க்க வேண்டும். சபைகளால் தனக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தரமுடியாத நிலை இருந்தபோது பவுல் அப்போஸ்தலன் தனக்குத் தெரிந்த கூடாரம் செய்யும் பணியைச் செய்து தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டான் என்று வேதம் சொல்கிறது. பவுல் உடலை வருத்தி உழைப்பதற்கு தயங்கவில்லை. உழைப்பது எவருக்கும் இழுக்காகாது. உழைக்க மறுக்கிறவன்தான் சமுதாயத்துக்கு தீங்கானவன். இன்று பலர் உழைப்பதற்கு தயங்குவதாலும், வெட்கப்படுவதாலும் ஊழியத்தை வாய்க்காலாகப் பயன்படுத்தி வளர முயல்வது நமக்குத் தெரியாததல்ல.

போதகர்களே, உழைப்பதில் தவறில்லை என்று இருக்கும்போது, அவர்களுடைய பிள்ளைகள் உழைப்பதில் என்ன தவறிருக்க முடியும்? போதகர்கள் தங்களுடைய பிள்ளைகள் படித்து அவர்களுக்கு எதில் திறமை இருக்கிறதோ அந்தத் தொழிலை செய்ய அனுமதிக்க வேண்டும். அவர்கள் அவசியம் ஊழியத்துக்குத்தான் வர வேண்டும் என்று வேதம் எங்குமே போதிக்கவில்லை. உடலை வருத்தி உழைப்பது ஊழியத்தைவிட தரத்தில் குறைவானது என்ற தவறான எண்ணத்தை அனேகர் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக அனேக ஊழியக்காரர்கள் தங்கள் பிள்ளைகள் ஊழியத்தில் ஈடுபட வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். இது தவறான செயல். ஊழியம் என்பது கர்த்தர் சிலரை அழைத்துக் கொடுக்கும் பணி. அதில் நினைத்தவர்கள் எல்லாம் நுழையப்பார்ப்பது தவறு. ஊழியம் செய்வதற்கென்று பல தகுதிகள்

இருக்கின்றன. அந்தத்தகுதிகள் இருந்து சபைகளால் அங்கீகரிக்கப்பட்ட-வர்களே எந்த ஊழியத்திலும் ஈடுபட வேண்டும். இது கர்த்தர் சபைகளில் ஏற்படுத்தியிருக்கும் வழிமுறை. ஊழியத்திற்கு வராதவர்களை கர்த்தர் தனது இராஜ்யத்தில் இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருதுவதில்லை. ஊழியம் செய்பவனையும், உலகத்தில் வேறு தொழில்களைச் செய்கிற விசுவாசியையும் கர்த்தர் ஒரேவிதமாகத்தான் நேசிக்கிறார். இருவரும் தங்கள் தங்கள் பொறுப்புக்களை கர்த்தருக்கென்று விசுவாசமாக செய்ய வேண்டும். ஊழியம் செய்கிறவர்களுக்கென்று பரலோகத்தில் விசேட வசதிகள் கிடைக்கப்போவதில்லை. ஊழியம் செய்கிறவர்களை ஆத்துமாக்கள் மதிக்கவேண்டியது அவசியம்தான். ஆனால், அவர்களை அதிசயப் பிறவிகள் போலவும், இராஜாக்கள் போலவும் நடத்த வேண்டும் என்று வேதம் போதிக்கவில்லை. ஊழியக்காரர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பை கர்த்தருக்கு முன்பும், ஆத்துமாக்களுக்கு முன்பும் உண்மையோடும், விசுவாசத்தோடும் செய்யாமல்போனால் அவர்களைத் தொடர்ந்து மதிக்க வேண்டும் என்று வேதம் போதிக்கவில்லை. ஊழியத்தை விசுவாசத்தோடு உழைத்து நடத்தாதவன் உண்மையான ஊழியக்காரனாக இருக்க முடியாது.

**2. ஊழியத்தில் குடும்ப வாரிசு முறையையும், குடும்பத்தலைமை முறையையும் வேதம் எந்தவிதத்திலும் அங்கீகரிப்பதில்லை.**

போதகப்பணிக்கு நியமிக்கப்பட்டிருக்கின்ற மனிதனுக்குதான் போதக ஊழியம் கொடுக்கப்பட்டிருக்கின்றதே தவிர அவனுடைய முழுக்-குடும்பத்திற்கும் அல்ல. சபை அந்தக் குடும்பத் தலைவனை மட்டுமே போதகனாக நியமித்திருக்கிறது. அதைப்பயன்படுத்தி போதகன் தன் மகனைத் தான் செய்கின்ற தொழிலுக்கு வாரிசாக உருவாக்க ஆசைப்படுவது அடாவடியான செயல். வேதம் போதிக்கின்ற ஊழியக்காரனுக்குரிய தகுதிகளில், ஊழியக்காரன் போதகனின் மகனாக இருக்க வேண்டும் என்று எழுதப்படவில்லை. பலர் தங்களுடைய முழுக்-குடும்பத்தையுமே அந்தப்பணிகளில் ஈடுபடுத்தி விடுகிறார்கள். இதை சபைகள் சகித்துக் கொண்டிருப்பதுதான் பெரிய ஆச்சரியம். சபையாருக்கு இதுபற்றிய வேதபோதனைகள் போதிக்கப்படாததாலும், நமக்கேன் வம்பு என்று பலர் பேசாமல் இருந்துவிடுவதாலும்தான் பல போதகர்கள் குடும்ப வாரிசு முறையை சபைகளில் ஏற்படுத்தி விடுகிறார்கள்.

எல்லா ஊழியக்காரர்களுக்கும் இருக்க வேண்டிய தகுதிகளைப் போதிக்கும் புதிய ஏற்பாட்டுப் பகுதிகள், 1 தீமோத்தேயு 3-ம், தீத்து 1-ம் தான். இந்தப் பகுதிகளில் கொடுக்கப்பட்டிருக்கும் தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே போதக ஊழியத்திற்கும், பிரசங்க ஊழியத்திற்-கும், மூப்பர்களாகவும், உதவியாளர்களாகவும் வருகிறவர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்தப்பகுதிகளில் குடும்ப வாரிசு முறையோ, குடும்பத்தலைமை முறையோ போதிக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்துவோ, அப்போஸ்தலர்களோ குடும்ப வாரிசு முறையை சபைகளில் ஏற்படுத்த-வில்லை. தங்களுடைய குடும்ப அங்கத்தவர்களை அவர்கள் ஊழியத்திற்-குள் நுழைத்ததாகவும் நாம் வேதத்தில் வாசிப்பதில்லை. தங்களுடைய

குடும்ப அங்கத்தவர்கள் விசுவாசிகளாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்களே தவிர, ஊழியத்திற்கு தங்களுடைய வாரிசுகளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை.

**3. குடும்ப வாரிசு ஊழியமுறை வேதத்தின் மூலம் கர்த்தர் வெளிப்படுத்தியிருக்கின்ற சபை அமைப்பை முற்றாக நிராகரிக்கிறது.**

வேதம், சபை அமைப்பு முறை பற்றி மிகத் தெளிவான போதனைகளைக் கொடுத்திருக்கும்போது ஓர் போதகனுடைய அல்லது ஊழியக்காரனுடைய குடும்ப அங்கத்தவர்களை சபை ஊழியங்களில் அவர்கள் இருக்கும்போதோ அல்லது அவர்களுக்குப்பிறகோ ஈடுபடுத்துகிறபோது, சபை அமைப்பு பற்றிய வேத போதனைகள் நிராகரிக்கப்படுகின்றன. உலகப்பிரகாரமான முறைகள் இதன் மூலம் சபைகளுக்குள் நுழைகின்றன. குடும்ப வாரிசு முறையைப் பின்பற்றும் சபைகள் வேதஞானமில்லாத சபைகளாக மட்டுமல்லாமல், வேதபோதனைகளை நிர்த்தாட்சன்யமாக புறக்கணிக்கிறவைகளாகவும் இருப்பதைப் பார்க்கலாம். முக்கியமாக தனி ஊழியங்களை நடத்துகிறவர்கள் மத்தியில் இத்தகைய குடும்ப வாரிசு ஊழியமுறை அதிகமாகக் காணப்படும். அதை நடத்துகிறவர்கள் குடும்பச்சொத்தைப் பாதுகாப்பதுபோல் தங்கள் ஊழியங்கள் எப்போதும் குடும்பத்துக்கு சொந்தமாக இருக்க வேண்டும் என்ற ஆசையில் இம்முறையைப் பின்பற்றுவார்கள். எனக்குத் தெரிந்த ஒரு கிறிஸ்தவ ஊழியத்தை நடத்துகிறவர் மரணமானதால் இப்போது அவருடைய மனைவியார் அந்த ஊழியத்தை நடத்த ஆரம்பித்திருக்கிறார். தமிழ் கிறிஸ்தவ உலகில் இது இன்று சாதாரணமாகவே நடந்துவருகின்றது.

குடும்ப வாரிசு முறையை ஊழியங்களில் ஏற்படுத்துவதால் வேதம் எந்தவகையில் நிராகரிக்கப்படுகின்றது என்பதை ஆராய்வது அவசியம். உதாரணத்திற்கு அந்த முறை சரிதான் என்று நம்புகின்ற ஒரு சபையை எடுத்துக் கொள்வோம். அந்த சபைப் போதகனின் மனைவி ஏற்கனவே பல ஊழியங்களில் சபையில் ஈடுபட்டிருப்பார். பெண்கள் ஊழியம், ஏன், உதவியாளர்களாகவும், போதகர்களாகவும் கூடப் பல போதகர்களின் மனைவிமார் இன்று இருந்துவருகிறார்கள். அந்தப்போதகனின் மகன் ஆரம்பத்தில் இருந்தே ஊழியத்திற்கு வர வேண்டும் என்று குடும்பம் தீர்மானித்திருக்கும். இது சகஜம்தான் என்று ஏற்றுக்கொள்ளும் மனநிலை கொண்டதாகத்தான் சபையும் இருக்கும். இது சரியல்ல என்று சிந்திக்கிறவர்கள் அத்தகைய சபைகளில் இருக்கமாட்டார்கள். இந்தக் காரியங்களில் வேத சிந்தனைகள் எல்லாம் கொண்டிருக்கும் விதத்தில் அந்த சபை ஆத்துமாக்கள் வளர்க்கப்பட்டிருக்க மாட்டார்கள். அடுத்தபடியாக வளர்ந்து வருகின்ற போதகனின் மகன் இறையியல் கல்லூரிக்கு, அவன் 15, 16 வயது இருக்கும்போதே அனுப்பி வைக்கப்படுகிறான். படிப்பு முடிந்து வந்ததும் தன் தகப்பனுக்கு உதவிப் போதகனாக இருப்பான். தகப்பன் இறந்த பிறகு தானே போதகனாக வந்துவிடுவான். இதுதான் குடும்ப வாரிசு தலைமை முறை. இதேபோல் அவனுடைய முழுக்குடும்பமும் சபை ஊழியங்களில் ஏதொ ஒன்றிற்குள் நுழைந்திருக்கும். இதுபற்றி சபையில் எவரும் கேள்வி கேட்க முடியாது.

இனி இதில் இருக்கும் தவறை ஆராய்வோம். முதலில், சபையில் எந்த ஊழியத்திற்கும் யார் வர வேண்டும் என்ற தீர்மானத்தை குடும்ப அடிப்படையில் தீர்மானிக்க கர்த்தர் அனுமதிக்கவில்லை என்பதைப் பார்த்தோம். அதற்கு முரணாக 15, 16 வயது இருக்கும் ஒரு வாலிபன், அவன் விசுவாசியாக சபையில் அங்கத்தவனாக இருந்து, வளர்ந்து முதிர்ச்சியடைந்து, சபை ஆத்துமாக்கள் எல்லோரும் அறிந்திருக்கும்படியாக ஊழியத்திற்கான அழைப்பையும், தகுதிகளையும் கொண்டிருப்பதற்கு முன்பாக இறையியல் கல்லூரிக்கு (பெரும்பாலும் வேதபோதனைகளையே தராத கல்லூரிகளுக்கு) அனுப்பி வைக்கப்படுகிறான். இந்த முறை வேதத்தில் எந்தப்பகுதியில் போதிக்கப்பட்டிருக்கிறது? சபைப் போதகனுடைய மகன் என்ற ஒரே தகுதியைத் தவிர (அது தகுதியே அல்ல) அந்த வாலிபனுக்கு வேறு எந்தத் தகுதியும் இருக்காது. குலோத்துங்க சோழனின் மகன் அரச கட்டில் ஏறியே ஆக வேண்டும் என்ற போக்கில் போதகனுடைய மகனும் போதகனாக வேண்டும் என்ற குடும்ப வாரிசு முறை இப்படியாக சபையில் ஆரம்பமாகிறது. புதிய கிறிஸ்தவர்களும், வாழ்க்கையிலும், கிறிஸ்தவ அனுபவங்களிலும் முதிர்ச்சி இல்லாதவர்களும் ஊழியக்காரர்களாக இருப்பதற்கு தகுதி இல்லை என்பது வேத போதனை. இதற்கெல்லாம் முரணாக அந்த வாலிபன் போதகனுடைய மகன் என்ற காரணத்திற்காகவும், குடும்ப வாரிசு முறையை சபையில் உருவாக்குவதற்காகவும் ஊழியத்திற்குள் நுழைக்கப்படுகிறான். அதேநேரத்தில் சபையில் கிறிஸ்துவை அறிந்திருந்த, கிறிஸ்தவ அனுபவங்களில் வளர்ந்து பல வரங்களையும் பெற்றிருக்கின்றவர்களெல்லாம் மறக்கப்படுகிறார்கள். அவர்களைப்பற்றி யாரும் சிந்திப்பதும் கிடையாது. ஒருவேளை சிந்தித்தாலும் போதகனின் மகனாக இல்லாத குறையால் அவர்கள் போதக ஊழியம் தவிர்ந்த ஏனைய ஊழியங்களுக்கு மட்டுமே அங்கீகரிக்கப்படுவார்கள். இத்தனைக்கும் மத்தியில் இதுபற்றி வேதம் என்ன சொல்கிறது என்ற சிந்தனையே ஒருவருக்கும் இருக்காது. வேதம் நிர்த்தாட்சன்யமாக இங்கே நிராகரிக்கப்படுகிறதைப் பார்க்கிறோம்.

அத்தோடு, போதகனின் மகனான அந்த வாலிபனுக்கு சிறுவயதில் இருந்தே ‘ஊழியப்பால்’ ஊட்டப்பட்டிருக்கும். அவனுடைய ஆசாபாசங்களையும், விருப்பு வெறுப்புகளையும் ஒருவரும் நினைத்தும் பார்க்க மாட்டார்கள். அவனுக்கு சொந்தமாக சிந்திக்கும் அனுமதியும் இருக்காது. போதகனாக வருமுன்பே எதிர்காலப்போதகன் என்ற முறையிலேயே சபையும் அவனை நடத்திவரும். இதையெல்லாம் எந்த வேதப்புத்தகத்தில் நாம் வாசிக்கிறோம்? இதுவே இன்று தமிழ் சபைகளையும், ஊழியங்களையும் பிடித்திருக்கும் ஒரு சாபக்கேடு.

**4. குடும்ப வாரிசு ஊழியமுறை சபையை அல்லது ஊழியத்தை ஒரு குடும்பத்தின் அதிகாரத்தின் கீழும், ஆதிக்கத்தின் கீழும் கொண்டு வருகின்றது.**

இந்தக்குடும்ப வாரிசு முறையால் சபைகளும், ஊழியங்களும் சில குடும்பங்களின் ஆதிக்கத்தின் கீழும், அதிகாரத்தின் கீழும் கொண்டு வரப்படுகின்றன. ஆத்துமாக்கள் கர்த்தரின் வசனத்தின்படி வளர்த்தெடுக்-

கப்படாமல் ஒரு குடும்பத்தின் வேதத்திற்குப்புறம்பான ஆதிக்கத்தில் அகப்பட்டு வளர வேண்டியிருக்கிறது. இந்தக் குடும்ப வாரிசு முறையைப் பின்பற்றுகிறவர்களெல்லாம் தாங்கள் செய்யும் அநியாயங்களுக்கும், தவறுகளுக்கும் கர்த்தரையும் சாட்சியாக இழுத்துக் கொள்வார்கள். ஊழியத்திற்கு குடும்பத்தோடு வருமாறு தங்களைக் கர்த்தர் அழைத்திருக்கிறார் என்று சொல்கின்ற எத்தனைபேரைப்பற்றி நாம் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறோம்.

சபைகளும், ஊழியங்களும் குடும்பங்களால் ஆட்சி செய்யப்படும்போது தவறுகள் அடுக்கடுக்காக ஏற்படும். அந்தக் குடும்பங்களின் விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்றவிதத்தில்தான் சபைகளில் அனைத்துக் காரியங்களும் நடைபெறும். அந்தக்குடும்பங்கள் செய்யும் தவறுகளைத் தட்டிக் கேட்பதற்கும் திருத்துவதற்கும் ஒருவரும் இருக்க மாட்டார்கள். அப்படி தட்டிக்கேட்பவர்கள் தொடர்ந்தும் சபைகளில் இருக்க முடியாதபடி அந்தக்குடும்பங்கள் பார்த்துக் கொள்ளும். சபை ஊழியங்கள் பற்றிய எல்லா முடிவுகளும் அந்தக் குடும்ப அங்கத்தவர்களால் எடுக்கப்படுவதால் கர்த்தரின் பேச்சுக்கு சபையில் இடம் இருக்காது. சபைப் பணவிடயங்கள் எல்லாம் அந்தக்குடும்பத்தின் அதிகாரத்தில் இருக்கும். அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே பெரிய படிப்புப் படிக்கப் போவார்கள்; சபைகளிலும், சபைக்கு வெளியிலும் பெரும் பதவிகளில் இருப்பார்கள்; அவர்கள் மட்டுமே கர்த்தரின் பணத்தை வைத்து தங்களை வளர்த்துக் கொள்வார்கள். கேள்வி முறை இல்லாமல் அவர்கள் பணத்தைக்-கையாளுவதைக் கேட்பதற்கு ஒருவருக்கும் அதிகாரம் இருக்காது. இவர்களும் இவர்களுடைய குடும்பங்களும் அரசியல்வாதிகள் வளர்வதுபோல் வளர பாமர நாட்டு மக்கள் அப்படியே இருந்த நிலையி-லேயே எப்போதும் இருப்பதுபோல ஆத்துமாக்களும் இருந்துவருவார்கள். வேதத்திற்குப் புறம்பான இத்தனை அநியாயங்களையும் கர்த்தரின் பெயரில் சபைகளில் இருக்க அனுமதிக்கலாமா?

இதைக்குறித்து ஆத்துமாக்கள் செய்ய வேண்டியது என்ன? குடும்ப வாரிசுமுறை நடக்கும் சபைகளும், ஊழியங்களும் இருக்கும் இடத்திற்கே நீங்கள் போகக்கூடாது. வேதம் போதிக்காத செயல்கள் நடக்கும் இடத்திற்குப் போவதால் நமது ஆத்மீக வாழ்க்கைக்குத்தான் ஆபத்து ஏற்படும். அத்தகைய குடும்ப வாரிசுமுறையைப் பின்பற்றும் எந்த ஊழியத்திற்கும் பணம் கொடுக்கக்கூடாது. கர்த்தரின் அனுமதியில்லாத அந்த முறையால் வேதபோதனைகளை மீறி எந்த நன்மையும் ஏற்பட்டுவிட முடியாது. இது இன்று நமது மக்களையும், ஊழியங்களையும் பிடித்திருக்கும் கொடிய ‘சார்ஸ்’ வியாதி. நாம் வேதத்தைப் படிக்காமலும், ஆராயாமலும், அதன்படி சிந்திக்க மறுப்பதாலுமே இந்தகைய கொடுமைகள் கர்த்தரின் பெயரில் கிறிஸ்தவ சபைகளிலும், ஊழியங்களில் நடந்து வருகின்றன. அவர்கள் செய்யும் அநியாயங்களைக் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று எண்ணி நாம் அமைதியாக இருப்பதை கர்த்தர் விரும்பவில்லை. இத்தகைய அநியாயங்களுக்கு துணைபோகும் எந்தக்காரியத்தை நாம் செய்திருந்-தாலும் நமக்கும் நியாயத்தீர்ப்பு நாளில் தண்டனை கிடைத்தே தீரும்.

# பிரசங்கம் தயாரித்தல்-11

கடந்த இதழில் பிரசங்கம் தயாரித்தலின்போது பிரசங்கி எடுக்க வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகளை ஆராய்ந்தோம். இந்த ஆரம்ப நடவடிக்கைகள் பிரசங்கத்தை ஆவிக்குரிய விதத்தில் தயாரிக்க அவசியமானவை. இனித் தொடர்ந்து பிரசங்கம் தயாரித்தலில் நாம் அடுத்தபடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்வோம்.

பிரசங்கத்திற்கான பொருளை முடிவு செய்தபின், அந்தப் பிரசங்கப் பொருள் காணப்படும் சந்தர்ப்பத்தின் அடிப்படையில் அதனை இலக்கண, இலக்கிய, வரலாற்றுபூர்வமாக நிதானித்து ஆராய்ந்து அதில் கொடுக்கப்பட்டுள்ள மையப் போதனை என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஏற்கனவே பார்த்தோம். இது முதலில் செய்ய வேண்டிய அவசியமான பணி. இதைச் செய்யாவிட்டால் அந்தப்பகுதியைப் பயன்படுத்தி பிரசங்கம் செய்ய முடியாது. இந்தப்பணியைப் பாடுபட்டு செய்து முடிக்கும்போதுதான் கர்த்தர் அந்தப்பகுதியில் எதைப்போதிக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

## மையப்போதனையை விளக்கும் துணைச் சத்தியங்கள்

அதன்பின் அந்த மையப்போதனையை விளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள துணைச் சத்தியங்களை நாம் கருத்தோடு ஆராய வேண்டும். இந்தத் துணைச்சத்தியங்கள் மையப்போதனையை விளக்குவதாகவும், வலியுறுத்திக்கூறுவதாகவும் அமைந்திருக்கும். கீழே எபேசியர் 1:3-14 வரையிலான வேதப்பகுதியின் மையப்போதனையையும் அதை மேலும் விளக்கும் துணைச் சத்தியங்களையும் படிமுறையாகத் தந்திருக்கிறேன்.

*கிறிஸ்து இலவசமாக நமக்குத் தந்துள்ள இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் (எபேசியர் 1:3-14)*

*1. உலகத்தோற்றத்திற்கு முன்பே கர்த்தர் நம்மைத் தெரிந்து கொண்டார். (4)*

*2. அவருடைய சுவீகாரப்புத்திரராகும்படி நாம் முன்குறிக்கப்பட்டுள்ளோம். (5-6)*

*3. கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்குக் கிடைத்தது. (7-8)*

*4. தன்னுடைய சித்தத்தின் இரகசியத்தை அவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். (9-10)*

*5. கிறிஸ்துவுக்குள் சுதந்திரராகும்படி நாம் தெரிந்துகொள்ளப்பட்டோம். (11-12)*

*6. பரிசுத்த ஆவியினால் முத்திரை போடப்பட்டிருக்கிறோம். (13-14)*

*இந்த உதாரணத்தில் அந்த வேதப்பகுதியின் மையப்போதனையையும் அதை மேலும் விளக்கும் பல துணைச்சத்தியங்களையும் பார்க்கிறோம். இந்தப்பகுதி பவுலின் நிருபங்களில் ஒன்றில் இருந்து எடுக்கப்பட்டிருப்பதால் இதை மேலும் விபரமாக படிக்க வேண்டியது அவசியம். இங்கே நான் தந்திருப்பது ஒரு சுருக்கமான குறிப்பு* (brief outline) *மட்டுமே. மையக்கருத்தை மேலும் விளக்கும் இந்தத் துணைச்சத்தியங்களை ஆராயும்போது எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள வேதப்பகுதியின் இலக்கண அமைப்பை மனதில் கொள்வது அவசியம். எபேசியர் 1:3-14-வரையிலுள்ள வேதப்பகுதி தொடர்ச்சியாக, முற்றுப்புள்ளி இல்லாமல் போய்க்கொண்டிருக்கும் ஒரு பகுதி. அதில் காணப்படும் பல சத்தியங்களையும் இணைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள இணையிடைச் சொற்களைக்* (Conjuction) *கவனத்தோடு ஆராய்ந்து கருத்தில் கொள்ள வேண்டும். அந்த இணையிடைச் சொற்களே அந்தப்பகுதியில் காணப்படும் துணைச்சத்தியங்களை இணைப்பவையாக இருக்கின்றன. இங்கே இலக்கண அறிவு வேதத்தை ஆழமாகப் படிப்பதற்கு இன்றியமையாததாக இருப்பதைக் கவனிப்பது அவசியம்.*

### பிரசங்கம் தயாரிப்பதற்கான ஆரம்பக்குறிப்புகள் (Basic Outline)

*எபேசியர் 1:3-14 வேதப்பகுதியைப் பயன்படுத்தி நாம் பிரசங்கிப்பதாக இருந்தால், இதுவரை நாம் செய்திருப்பதெல்லாம் அந்த வேதப்பகுதியின் மையப்போதனையையும், அதை விளக்கும் துணைச்சத்தியங்களையும் தெரிந்துகொண்டிருப்பது மட்டும்தான். இதுவே பிரசங்கமாகிவிடாது. இது பிரசங்கத்திற்கான வெறும் ஆரம்பம் மட்டுமே. பிரசங்கத்தைத் தயாரிப்பதில் இனிச் செய்ய வேண்டிய வேலைகள் அனேகம் இருக்கின்றன. இதை ஒரு ஓவியக்காரன் ஓவியத்தை வரைய ஆரம்பித்திருப்பதற்கு உதாரணமாகக் கூறலாம். அவன் பலகையில் சில கோடுகளைப் போட ஆரம்பித்திருக்கிறான். அவனைப் பொறுத்தவரையில் ஓவியம் ஆரம்பமாகிவிட்டது. அதன் இறுதி முடிவைக்கூட அவனால் ஓரளவு பார்க்க முடிகின்றது. பக்கத்தில் நின்று கொண்டிருப்பவர்களுக்கு அவை வெறும் கோடுகளாக மட்டும் தான் தெரியும். ஏனெனில் ஓவியம் இன்னும் முடிவடையவில்லை. ஓவியக்காரனின் நிலையில்தான் இப்போது பிரசங்கி இருக்கிறான். சுருக்கக்குறிப்பு ஓவியக்காரன் தீட்டியுள்ள சில கோடுகள் போன்றது.*

*நாம் மேலே பார்த்தபடி பிரசங்கத் தயாரிப்பின் ஆரம்பத்திலேயே ஒரு சுருக்கக் குறிப்பை நாம் எழுதி வைத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். குறிப்பெழுதி வைத்துக் கொள்ளும் வழக்கம் அனேக பிரசங்கிகளுக்கு இல்லை. சமீபத்தில் ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கும் ஒரு புத்தகத்தின் தலைப்பு "பிரசங்கக் குறிப்பில்லாமல் பிரசங்கிப்பதெப்படி?" இந்தப் புத்தகத்தை வாசிக்க வேண்டிய அவசியமேயில்லை. பிரசங்கக் குறிப்பில்லாமல் செய்யப்படும் பிரசங்கங்கள் பெரும்பாலும் வெறும் வார்த்தை ஜாலங்களாகத்தான் இருக்கும். சாதாரணமாக எல்லாப் பிரசங்கிகளும் ஜீனியசாக இருப்பதில்லை. சரீரத்தில் பலவீனங்களையும், குறைந்தளவான ஞாபக சக்தியையும், மறக்கும் தன்மையையும்*

கொண்டவர்களாகவே இருப்பார்கள். நாற்பத்தைந்து நிமிடம் பேச இருக்கும் பிரசங்கி பிரசங்கக் குறிப்பில்லாமல் தெளிவான பிரசங்கத்தைச் செய்துவிட முடியாது. பிரசங்கக் குறிப்பில்லாமல் பிரசங்கிப்பதை சில பிரசங்கிகள் பெருமையாகக் கருதுவார்கள். அதுபற்றி தம்பட்டம் அடித்துக் கொள்கிறவர்களும் உண்டு. ஆனால், உண்மையில் அவர்களைப் போன்ற சோம்பறிகள் இல்லை என்றுதான் கூற வேண்டும்.

### விரிவான அடிப்படைப் பிரசங்கக் குறிப்பு (Expanded Basic Outline)

பிரசங்கிக்க எடுத்துக் கொண்டுள்ள வேதப்பகுதியின் போதனைகளை சுருக்கமாகக் குறிப்பெடுத்துக் கொள்ளவேண்டுமென்று இதுவரை பார்த்தோம். அந்த ஆரம்பக்குறிப்பின் அடிப்படையில் பிரசங்கம் இனி வளர வேண்டும். கட்டடத்துக்கு அடித்தளம் அமைந்தாய் விட்டது. இனிக்கட்டடத்தின் சுவர்கள் கட்டப்பட வேண்டும். அதற்கு கூரை போட வேண்டும். ஆகவே, பிரசங்கமாகிய கட்டடத்தின் அடித்தளமாகிய சுருக்கக் குறிப்பின் அடிப்படையில் அதை விரிவாக்குகின்ற நடவடிக்கைகளில் இனி பிரசங்கி ஈடுபட வேண்டும்.

இந்த இடத்தில் நடைமுறைக்கு அவசியமான ஒரு ஆலோசனையைத் தர விரும்புகிறேன். பிரசங்கிகள் பிரசங்கம் தயாரிக்க கட்டுக்கட்டாய் பேப்பரும், பேனாவோ அல்லது பென்சிலோ வைத்திருப்பது அவசியம். எழுதுவதற்கு தேவையான உபகரணங்கள் இல்லாமல் பிரசங்கத்தைத் தயாரிப்பது சுலபமல்ல. கணனி வசதியுள்ளவர்கள் அதைப்பயன்படுத்தி இதைச் செய்ய முடியும். அத்தோடு ஒரு நாளில் இவ்வளவு நேரம் என்று பிரசங்கத் தயாரிப்புக்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி வைக்க வேண்டியதும் அவசியம். ஒவ்வொரு நாளும் தகுந்த நேரத்தைக் கொடுக்கமால் ஆவிக்குரிய பிரசங்கங்களைத் தயாரிக்க முடியாது.

சுருக்கக் குறிப்பின் அடிப்படையில் விரிவான பிரசங்கக்குறிப்பு தயாரிக்க மறுபடியும் பிரசங்கிப்பதற்காக எடுத்துக் கொண்டுள்ள வேதப்பகுதியை ஆராய்தல் அவசியம். ஏற்கனவே கடந்த இதழில் நாம் சுட்டிக்காட்டியபடி அந்தப்பகுதியை ஆழமாக நிதானித்துப் படித்திருந்தால் அதில் காணப்படும் சத்தியங்களைக் கொண்டு விரிவான அடிப்படைக் குறிப்பைத் தயாரிக்க முடியும். இதைச் செய்யும்போது அந்தப்பகுதியில் காணப்படுகின்ற சத்தியங்களைத் தவிர வேறு எதுவுமே குறிப்பில் இடம்பெறக்கூடாது. இதைப் பிரசங்கி தனது இலட்சியமாகக் கொண்டு உழைக்க வேண்டும். அந்தப் பகுதி இதைத் தான் சொல்கிறது என்று நாமே கற்பனை செய்யக்கூடாது. இதைத்தான் இன்று பல பிரசங்கிகள் செய்து வருகிறார்கள். பிரசங்கிக்க எடுத்துக் கொண்டுள்ள வேதப்பகுதியை ஆழமாக ஆராய்ந்து படித்தால் அந்தப்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கின்ற சத்தியங்களை எவராலும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அதற்கு விசேடமான வேறு எந்தத் தகுதியும் தேவை இல்லை. சில சோம்பேரிப் பிரசங்கிகள் வேதத்தைப் படித்து ஆராய்வது ஆவிக்குரிய செயலல்ல என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேதசத்தியங்களை ஆராய்ந்து படிக்காதவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் எந்த சத்தியங்களையும்

ஒருக்காலும் வெளிப்படுத்தப் போவதில்லை என்பதை இவர்கள் உணர்வதில்லை.

இனி எபேசியர் 1:3-14 வரையுள்ள வசனங்களுக்கான விரிவான அடிப்படைக் குறிப்பைக் கீழே பார்க்கலாம்.

## கிறிஸ்து இலவசமாக நமக்குத் தந்துள்ள இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் (எபேசியர் 1:3–14)

*1. உலகத்தோற்றத்திற்கு முன்பே கர்த்தர் நம்மைத் தெரிந்து கொண்டார். (4)*

*- தமக்கு முன்பாக அன்பில் பரிசுத்தமுள்ளவர்களாகவும் குற்றமில்லாதவர்களுமாக இருப்பதற்காக*

*2. அவருடைய சுவீகாரப்புத்திரராகும்படி நாம் முன்குறிக்கப்பட்டுள்ளோம். (5-6)*

*- தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக*
*- தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியாக*

*3. கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்குக் கிடைத்தது. (7-8)*

*- அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி*
*- அவருடைய இரக்கத்தினாலே*

*4. தன்னுடைய சித்தத்தின் இரகசியத்தை அவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். (9-10)*

*- தமக்குள்ளே தீர்மானித்திருந்தபடி*
*- தம்முடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படி*

*- வெளிப்படுத்தப்பட்ட சித்தம் - "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருகிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள் கூட்டப்படும்"*

*5. கிறிஸ்துவுக்குள் சுதந்திரராகும்படி நாம் தெரிந்துகொள்ளப்பட்டோம். (11-12)*

*- அவருடைய மகிமையின் புகழ்ச்சிக்காகவும்*
*- அவருடைய சித்தத்தின் ஆலோசனையின்படியும், எல்லாவற்றையும் நடப்பிக்கிற தீர்மானத்தின்படியும்*

*6. பரிசுத்த ஆவியினால் நாம் முத்திரை போடப்பட்டிருக்கிறோம். (13-14)*

*- சத்திய வசனத்தைக் கேட்டு அவருக்குள் விசுவாசிகளானபோது*

*- பரிசுத்த ஆவியானவர்*

*- வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர்*
*- நம்முடைய சுதந்திரத்துக்கு அச்சாரமாயிருக்கிறார்.*

*பிரசங்கத் தயாரிப்புக்கான விரிவான அடிப்படைக் குறிப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான மேலும் சில உதாரணங்களைப் பார்ப்போம்.*

**சங்கீதம் *1:1–3***

*மையப்போதனை: கர்த்தருக்கு விசுவாசமாக இருக்கின்ற மனிதன் பாக்கியவானாயிருப்பான்.*

*விரிவான அடிப்படைப் குறிப்பு:*

**பாக்கியவான் யார்?**

*1. அவனுடைய வாழ்க்கையில் பார்க்க முடியாத செயல்கள்:*

*- பாவிகளுடன் ஒருபோதும் தொடர்பு வைத்திருக்க மாட்டான்*

*- துன்மார்க்கரின் ஆலோசனைக்கு இடம் கொடான்*
*- பாவிகள் இருக்கும் இடங்களில் இருக்க மாட்டான்*
*- பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் அமர மாட்டான்*

*2. அவனுடைய வாழ்க்கையில் பார்க்கக்கூடிய செயல்கள்:*

*- கர்த்தருடைய வேதத்தை அனுதினமும் படிப்பான்*

*- கர்த்தருடைய வேதத்தில் அதிக அக்கறை காட்டுவான்*
*- இரவும் பகலும் அதில் தியானம் செய்வான்.*

*3. அவன் எப்படிப்பட்டவனாய் இருப்பான்:*

*- கனிகொடுக்கும் நல்ல மரத்தைப் போல இருப்பான்*

*- அது எப்படிப்பட்ட மரம்?*
*- நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டிருக்கும்*
*- தகுந்த காலத்தில் நல்ல பலன்களை அளிக்கும்*
*- இலையுதிராயிருக்கும்*

*- கர்த்தருக்கு விசுவாசமாயிருக்கிறபடியால் அவன் செயல்கள் பலனளிக்கும்*

*இந்த விரிவான அடிப்படைக் குறிப்பை வைத்து நாம் பிரசங்கத்தைத் தயார் செய்ய வேண்டும். இந்தக் குறிப்பை நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் அதில் காணப்படும் அத்தனை அம்சங்களும் சங்கீதம் 1:1-3-ல் இருந்து மட்டுமே பெறப்பட்டவையாக இருப்பதை உணரலாம். சங்கீதம் 1-ஐ ஆராய்ந்து இந்தக் குறிப்பை வரைந்திருக்கிறோம். இதற்குப் பிறகுதான் அந்த வசனங்களை மேலும் ஆராய்ந்து பிரசங்கத்தைத் தயாரிக்க வேண்டிய பெரிய வேலை இருக்கிறது.*

*இங்கே சங்கீதத்தைப் படிக்கும்போது அதற்கே உரிய சில சிறப்பான இலக்-*

*கண அம்சங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியம். அதைத் தெரிந்து கொள்ளாமல் சங்கீதங்களை விளங்கிக் கொள்ள முடியாது; அவற்றிலிருந்து பிரசங்கிக்க முடியாது. சங்கீதங்களைப் பொறுத்தவரையில் அவை ஒரே உண்மையைத் திரும்பவும் சொல்லுகிற ஓர் தன்மையைத் தம்மில் கொண்டிருக்கும். இதை முழுமையாக இங்கு விளக்குவதற்கு வசதியில்லை. இருந்தாலும் இந்த முதலாம் சங்கீதத்தில் இருந்து அந்த உண்மையை விளக்குகிறேன்.*

*முலாம் சங்கீதத்தின் முதல் வசனம், பாக்கியவான் பாவகரமான செயல்களில் ஈடுபடமாட்டான் என்பதை உணர்த்துகிறது. ஆனால், அந்த உண்மையை சங்கீதக்காரன் மூன்று தடவைகள் அந்த வசனத்தில் விளக்குகிறான். அதாவது, ஒரே உண்மையை வலியுறுத்திக் காட்டுவதற்காக, சங்கீதங்களுக்கே உரிய அழகுடன் மூன்று தடவைகள் அந்த உண்மையைக் கூறுகிறான். பாவகரமானவர்களோடு பாக்கியவான்களுக்கு தொடர்பு இருக்காது. ஆனால், பாவகரமானவர்கள் யார்? அவர்கள் துன்மார்க்கர், பாவிகள், பரியாசக்காரர்கள். பாவகரமானவர்களுடைய மூன்று குணாதிசயங்களைச் சுட்டிக்காட்டி அத்தகையவர்களோடு பாக்கியவானுக்குத் தொடர்பிருக்காது என்கிறான் சங்கீதக்காரன். ஆகவே, ஒரே கருத்து மூன்று விதங்களில் வெவ்வேறுவிதமாக இங்கு சொல்லப்பட்டிருப்பதைக் கவனித்தல் அவசியம். இதையே 2-ம் வசனத்திலும் காண்கிறோம். கர்த்தருக்கு விசுவாசமானவன் வேதத்தை அனுதினமும் தியானம் செய்கிறவனாக இருப்பான். ஆனால், அதை சங்கீதத்திற்கே உரிய அழகோடு சங்கீதக்காரன் எப்படிச் சொல்கிறான் என்பதைக் கவனியுங்கள்.*

> *அவன் கர்த்தருடைய வேதத்தில் <u>பிரியமாயிருந்து</u>*
> *இரவும் பகலும் அவருடைய வேதத்தில் <u>தியானமாயிருப்பான்</u>.*

*இந்த வரிகள் சொல்லும் சத்தியம் ஒன்றுதான். ஆனால், அந்த சத்தியத்தை வலியுறுத்திக் கூறுவதற்காகவும், அழகுணர்ச்சிக்காகவும் இரு தடவைகள் அது சொல்லப்பட்டிருக்கின்றது. முதலாம் சங்கீதத்தைப் போலவே வேதத்தில் காணப்படும் அத்தனை சங்கீதப்பகுதிகளிலும் இந்த அம்சத்தைப் பார்க்கலாம். ஆகவே, நாம் அவற்றை கூடுதலாக ஆராய்ந்து படிக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது. சங்கீதங்களில் ஒரே சத்தியம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சொல்லப்பட்டிருக்கலாம் என்ற உண்மையைப் புரிந்து கொள்ளாவிட்டால் அவற்றிற்கு வெவ்வேறு விளக்கங்களை அளித்து வேதத்தையே நாம் குழப்பிவிடக்கூடிய ஆபத்து இருக்கின்றது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.*

*இன்னும் ஒரே ஒரு உதாரணத்தோடு இந்தப்பகுதியை முடிக்க விரும்புகிறேன்.*

### *யோவான் 3:1–15*

*மையப் போதனை: மறுபடியும் பிறக்க வேண்டியது அவசியம்*

*விரிவான அடிப்படைக் குறிப்பு:*

*1. மறுபடியும் பிறக்க வேண்டியதன் அவசியம் (1-3)*

*-மறுபடியும் பிறக்காமல் ஒருவனும் தேவனுடைய இராஜ்யத்தைக் காண முடியாது.*

2. மறுபடியும் பிறத்தல் என்றால் என்ன? (3:4-8)

- மறுபடியும் குழந்தையாக இந்த உலகத்தில் பிறப்பது அல்ல (4)
- அதற்கு ஜலத்தாலும், ஜீவனாலும் பிறக்க வேண்டும் (5)
- இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை, ஏனெனில், இது ஆவியால் பிறக்கும் வாழ்க்கை (6, 7)
- இதை ஊனக் கண்களால் காண முடியாது, ஆனால், உணர முடியும் (8)
- இது ஆவியின் வல்லமையான கிரியையினால் ஏற்படுவது (8)

3. மறுபடியும் பிறப்பது எப்படி (3:10-15)

- மனுஷ குமாரனான இயேசு மட்டுமே இதைக் கொடுக்க முடியும் (10-13)
- இயேசுவின் கல்வாரிப் பரிகாரப்பலியின் மூலம் இந்த வாழ்க்கைக்கான வித்திடப்பட்டிருக்கிறது (14)
- இயேசுவை விசுவாசிப்பவர்களுக்கு மட்டுமே இந்த வாழ்க்கை (15)

மேலே நாம் பார்த்தது யோவான் 3:1-15 வரையிலான வசனங்களுக்கான ஒரு ஆரம்ப அடிப்படைக்குறிப்பு. இதைப் பிரசங்கிகள் தங்களுடைய வசதிக்குத் தகுந்தபடி மாற்றி அமைத்துக் கொள்ளலாம். இதை மேலும் விரிவுபடுத்தி ஒன்றுக்கு மேற்பட்ட பிரசங்கங்களைக்கூட இதிலிருந்து தயாரிக்கலாம். எது இருந்தபோதும் இப்படியாக வேதப்பகுதியை ஆழமாகவும், நிதானமாகவும் ஆராய்ந்து வாசித்துப்பார்த்து குறிப்பெடுத்து வைத்துக் கொள்ளாமல் பிரசங்கங்களைத் தயாரித்து விட முடியாது. ஏற்கனவே, பழமுறை நான் சுட்டிக் காட்டியது போல் இந்தக் குறிப்பின் அடிப்படையிலேயே பிரசங்கத்தை நாம் தயாரிக்க ஆரம்பிக்க வேண்டும்.

பிரசங்கத்திற்கான ஆரம்பக்குறிப்புகளும், அதன் அடிப்படையில் நாம் தயாரிக்கின்ற விரிவான அடிப்படைக் குறிப்புகளும் நமக்கு வழிகாட்டி. வழிகாட்டி இல்லாமல் ஒருவரும் எங்கும் பிரயாணம் செய்ய முடியாது. விரிந்து கிடக்கும் கடலில் கப்பல் சரியான இடத்தை நோக்கிப் போக கப்பலை ஓட்டுகிறவனுக்கு வழிகாட்டி தேவை. வழிகாட்டியைப் பயன்படுத்தி போகுமிடத்திற்கான வழியைக் கணித்து, கப்பலை ஓட்டுவான் கப்பலோட்டி. அடிக்கடி அவன் வரைபடத்தில் கோடுகளைப் போட்டு போக வேண்டிய பாதையைத் தீர்மானிப்பான். இதைப்போலத்தான் நாம் வேதப்பகுதியை கவனமாக வாசித்து குறிப்புகளை எழுதி நமது பிரசங்கப் பாதையை நிர்ணயிக்கிறோம்.

அனேக பிரசங்கிகள் தங்களுடைய பிரயாணத்தை பிரசங்க மேடையில்தான் தீர்மானிப்பார்கள். அவர்கள் பிரசங்கப் பிரயாணத்திற்கான எந்த வேலையையும் அங்கு வருவதற்கு முன் செய்யவில்லை என்பதை ஐந்து நிமிடம் அவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்டாலே தெரிந்துவிடும். இதெல்லாம் பிரசங்கமாகாது. இது தமிழினத்தைப் பிடித்திருக்கும் தலைவலி. இதை நிவர்த்தி செய்யவே பிரசங்கிகளான நீங்கள் நாம் இதுவரை பார்த்தபடி வேதத்தை ஆராய்ந்து குறிப்பெடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

# ஆன்மீகக் குழப்பம்

## முடியாத தொடர்கதை. . .

இந்தத் தலைப்பு ஒரு சிலருக்கு வித்தியாசமானதாக இருக்கலாம். ஆகவே, இந்தத் தலைப்பைக் குறித்து நான் விளக்கமளிக்க வேண்டியது அவசியம். இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் எல்லா நாடுகளிலுமே ஒரு ஆன்மீகக் குழப்ப நிலை உலவுவதை ஒருவரும் மறுக்க முடியாது. பரிசுத்த ஆவியின் பெயரில் பலர் நடத்திவரும் நகைச்சுவைக் கூட்டங்களையும், ஆராதனை வேளைகளில் சபை, சபையாக நடந்துவரும் கூத்துக்களையும், விசுவாசி யார்? அவிசுவாசி யார்? என்று அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு வித்தியாசமே இல்லாமல், இரண்டுங்கெட்ட நிலையில் சபை வாழ்க்கை அமைந்திருப்பையும் ஆன்மீகக் குழப்பம் என்றல்லாது வேறு எப்படி வர்ணிப்பது? வேதத்தின் அடிப்பையில் வளர வேண்டும், வாழ வேண்டும் என்ற இதயதாகமுள்ள விசுவாசிகளை இங்கும் அங்குமாக நாம் காண முடிந்தபோதும் பரவலாக தமிழினத்தின் மத்தியில் பொதுவாக ஓர் ஆன்மீகக் குழப்பநிலையையே நாம் காண்கிறோம். முடியாத தொடர்கதைபோல் இந்த ஆன்மீகக் குழப்பம் நம்மத்தியில் தொடர்ந்தும் நீடிக்கிறது. கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவ சபைகளும் இன்று எதிர்நோக்குகின்ற பலவேறு பிரச்சனைகளுக்கும் முடியாத தொடர்கதை போல் நம்மைச் சூழ்ந்துள்ள இவ்வான்மீகக் குழப்ப நிலையே காரணம்.

### சூழ்நிலையைப் புரிந்து கொள்ள வேண்டியதன் அவசியம்

நம்மைச் சூழ்ந்துள்ள இந்த ஆன்மீகக் குழப்ப நிலைக்கான காரணத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நாம் வாழ்கின்ற சூழ்நிலையையும் சரிவர புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். நாம் வாழ்கின்ற சூழ்நிலையை ஆராய்ந்து அறிந்து கொண்டால் மட்டுமே, நமது சூழ்நிலையைப் பாதிக்கும் காரணிகளின் ஆதிக்கத்தில் இருந்து விடுபடுவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுக்க முடியும். ஆகவே, நாம் நமது கிறிஸ்தவ வாழ்க்கையிலும், திருச்சபையிலும் இன்று எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளை வெற்றிகரமாக சமாளிக்கவும், அவற்றில் இருந்து விடுபடவும் நாம் வாழும் சூழ்நிலையைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இயேசு கிறிஸ்துகூட பரிசேயர்களையும், சதுசேயர்களையும் பார்த்து ஒரு முறை (மத்தேயு 16:1-4), மாயக்காரரே. . . காலங்களின் அடையாளங்களை நிதானிக்க உங்களால் கூடாதா? என்று கேட்டு கோபப்பட்டார். அதாவது, வீணாக அடையாளங்களை நாடித் திரிகிறீர்களே, அதைவிட்டு நீங்கள் வாழ்கிற காலத்தையும், அதன் நிகழ்ச்சிகளையும் விளங்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள் என்று இயேசு அவர்களைக் கண்டித்தார். தான் வாழ்கின்ற காலத்தையும், சூழ்நிலையையும் சரியாகப் புரிந்து கொள்ளாமல் எந்தவொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவ வாழ்க்கையை

*வெற்றிகரமாக வாழ்ந்துவிட முடியாது. சூழ்நிலையை அறிந்து கொள்ளுதல் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது என்று வேதம் தெளிவாகப் போதிக்கின்றது.*

*அப்படியானால், நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலை எப்படிப்பட்ட சூழ்நிலை என்ற கேள்வி எழுவதில் தவறில்லை. இதற்குப் பதில் அளிக்க நாம் வேறெங்கும் போக வேண்டிய அவசியமில்லாமல் வேதத்தையே நாடிவர வேண்டி இருக்கிறோம். ஏனெனில், 2 தீமோத்தேயு 3:14-17-ன்படி, வேதமே நாம் எல்லாவற்றையும் ஆராய்ந்து அறியப் பயன்படுத்தக்கூடிய பூரணமானதும், போதுமானதுமான அதிகாரபூர்வமான தேவ வார்த்தையாக இருக்கின்றது. வேதத்தை நாம் ஊன்றிப்படிக்கின்றபோது, நாம் வாழும் சூழ்நிலையைத் தெளிவாகவும், சந்தேகமற்றவகையிலும் படம்பிடித்துக் காட்டுகின்ற நூலாக பழைய ஏற்பாட்டின் நியாயாதிபதிகள் புத்தகம் அமைந்திருப்பதைக் காணலாம். நியாயாதிபதிகள் 21:25-ம் வசனம், "அந்நாட்களில் இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வந்தான்" என்று அறிவிக்கின்றது. நியாயாதிபதிகளின் புத்தகத்தில் பலமுறை காணப்படுகின்ற (17:6; 18:1; 19:1; 21:25) இவ்வசனம் நியாயாதிபதிகள் வாழ்ந்த காலப்பகுதியைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவதைக் காண்கிறோம்.*

## நியாயாதிபதிகளின் காலம் - ஒரு சுருக்கமான விளக்கம்

*நாம் வாழும் சூழ்நிலையை அறிந்து கொள்வதற்கு நியாயாதிபதிகள் வாழ்ந்த காலப்பகுதியைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியமாகின்றது. நியாயாதிபதிகள் நூலின் முதல் ஒன்றரை அதிகாரங்களும் யோசுவா இறப்பதற்கு முன்பாக இஸ்ரவேலர் கானான் தேசத்தவர்களுக்கு எதிராக அடைந்த ஆரம்ப வெற்றிகளைப்பற்றி விளக்குகின்றன. இவ்வெற்றிகளின் மத்தியில் இஸ்ரவேலர் தேவனைப் புறக்கணித்ததால் அவருடைய கோபத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இரண்டாம் அதிகாரத்தின் முதல் ஐந்து வசனங்களும், அவருடைய கட்டளையை மீறியதன் காரணமாக, தேவன் அவர்களுக்கு விதித்த சாபத்தை எடுத்துக்கூறுகின்றன. "நான் உங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் நான் உங்களைக் கொண்டு வந்துவிட்டு, உங்களோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் ஒருக்காலும் முறித்துப் போடுவதில்லை என்றும், நீங்கள் இந்தத் தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கை பண்ணாமல், அவர்கள் பலிபீடங்களை இடித்துவிடக்கடவீர்கள் என்றும் சொன்னேன்; ஆனாலும், என் சொல்லைக் கேளாது போனீர்கள்; ஏன் இப்படிச் செய்தீர்கள்? ஆகையால், நான் அவர்களை உங்கள் முகத்துக்கு முன்பாகத் துரத்துவதில்லை என்றேன்; அவர்கள் உங்களை நெருக்குவார்கள்; அவர்களுடைய தேவர்கள் உங்களுக்குக் கண்ணியாவார்கள்" என்றார். (நியாயாதிபதிகள் 2:1-4). நியாயாதிபதிகள் 2:6 முதல் 16:31 வரையிலான வேதப்பகுதிகள், இஸ்ரவேலரை நியாயம் விசாரித்த பல்வேறு நியாதிபதிகளின் காலத்தில், இஸ்ரவேலர்கள் தேவனை விட்டுப் பிரிந்து தங்கள் தங்கள் வழியில் போய்க் கொண்டிருந்த அவலத்தை எடுத்துக் கூறுகின்றன. இக்காலகட்டத்தில், இஸ்ரவேலர்*

கர்த்தரைப் புறக்கணித்ததால் அந்திய தேசத்தாரின் தாக்குதலுக்கும், ஆளுகைக்கும் உட்பட்டு, பின்பு நியாயாதிபதிகளின் மூலம் கர்த்தர் அவர்களை விடுவிப்பதையும் பார்க்கிறோம். இக்காலப்பகுதியில், ஒரு தொடர்கதைபோல், நான்குவிதமான ஆன்மீக சுழல்முறைச் சம்பவங்கள் நிகழ்வதைக் காணலாம்.

அ. இஸ்ரவேலர் அநீதியாக கர்த்தரைப் புறக்கணித்தல்.
ஆ. அவர்களைத் திருத்தும் பொருட்டு தேவன் அவர்களைத் தண்டித்தல்.
இ. இஸ்ரவேலர் தண்டனையைத் தாங்க முடியாது மறுபடியும் தேவனிடம் கதறி ஓடி வருதல்.
ஈ. அவர்களுடைய கூக்குரல் கேட்டு தேவனும் அவர்களைத் தண்டனையில் இருந்து விடுவித்தல்.

ஆனால், அந்நியரிடமிருந்து விடுதலை பெற்ற இஸ்ரவேலர்கள் குறுகிய காலம் மட்டும் மனம்மாறி வாழ்ந்து, மறுபடியும் தேவனை விட்டு விலகி ஓடினார்கள். இவ்வாறாக, ஒரு தொடர்கதைபோல் சுழல்முறையாக இச்சம்பவங்கள் மீண்டும், மீண்டும் தொடர்ந்து இஸ்ரவேலில் நிகழ்ந்து வந்தன.

நியாயாதிபதிகளின் கடைசி ஐந்து அதிகாரங்களும் (அதிகாரம் 17-21) இந்நிகழ்ச்சிகளை விளக்கும் உதாரணங்களாக இருக்கின்றன. இவ்வைந்து அதிகாரங்களிலும் காணப்படும் நிகழ்ச்சிகள், நியாயாதிபதிகளின் வரலாற்றின் இறுதிக் காலத்தில் நிகழ்ந்ததாக அல்லாமல் ஆரம்பகாலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளாய் உள்ளன. அதாவது, இவை சிம்சோனுடைய காலத்துக்குப் பிறகு நிகழ்ந்தவைகளாக அல்லாமல் யோசுவா இறந்தவுடன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளாக உள்ளன. இதை உணர்த்தும் இரண்டு காரணிகளை நாம் 17-21 வரையுள்ள அதிகாரங்களிலே பார்க்க முடிகின்றது.

முதலாவதாக, நியாயாதிபதிகள் 17, 18-ம் அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளபடி தாண் கோத்திரத்தார் தாம் குடியிருப்பதற்கு நாடு தேடி, கர்த்தர் தாம் சுதந்தரித்துக் கொள்வதற்காக கொடுத்திருந்த பகுதிகளை அடைவதற்கு கானான் தேசத்தின் வடபகுதியின் மலைப் பிரதேசத்திற்குப் போவது பற்றி ஏற்கனவே யோசுவாவின் புத்தகத்தில் கூறப்பட்டிருப்பதை வாசிக்கலாம். ஆகவே, இச்சம்பவம் நியாயாதிபதிகளின் வரலாற்றின் ஆரம்பகாலப்பகுதியில், அதாவது யோசுவா இறந்தபின் உடனடியாக நிகழ்ந்தவை என்பது தெளிவாகிறது.

இரண்டாவதாக, நியாயாதிபதிகள் 20:27-28-ல் பென்யமின் குலத்தாரோடு ஏற்பட்ட யுத்தத்தின்போது நிகழ்ந்த சம்பவமொன்றின் குறிப்பு காணப்படுகின்றது. இங்கே, எண்ணாகமத்தில் நாம் சந்திக்கின்ற, எலெயாசரின் மகன் பினெகாஸைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பினேகாஸ் இன்னும் உயிரோடிருந்திருப்பானேயானால், இச்சம்பவம் நியாயாதிபதிகளின் வரலாற்றின் ஆரம்ப காலத்தில் நிகழ்ந்தவை என்பதை நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றன. அத்தோடு, இச்சம்பவங்கள், யோசுவா இறந்த நினைவகலுமுன்பே இஸ்ரவேலர் ஆன்மீக, சமூக குழப்ப

நிலையை நோக்கித் துரித நடைபோடத் துவங்கிவிட்டதையும் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

இக்காலத்தில் இஸ்ரவேலர் மத்தியில் காணப்பட்ட ஆன்மீகக் குழப்பம், ஒழுக்கக்கேடுகள், தெய்வப்புறக்கணிப்பு ஆகியவற்றைப் படம்பிடித்துக் காட்டும் உதாரணங்களாக இக்கடைசி ஐந்து அதிகாரங்களும் உள்ளன. ஆகவேதான், நியாயாதிபதிகளின் புத்தகம், இக்காலத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது "அந்நாட்களில் இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வந்தான்" என்று கூறுவதைக் காண்கிறோம். இதற்குப் பொருளென்னவென்றால், அந்நாட்களில் இஸ்ரவேலில் ஒருவருமே கர்த்தரையோ அவருடைய வார்த்தையையோ மதிக்கவில்லை என்பதுதான். அதன் விளைவாக அவனவன் தன்தன் மனம் போனபடி நடந்துவந்தான் என்கிறது இந்த வசனம். இதை வேறுவிதமாகக் கூறப்போனால், எவரெவர், தேவனுடைய வார்த்தையை விட்டுவிலகிப் போகிறார்களோ, அவருடைய வார்த்தைக்குக் கட்டுப்பட மறுக்கிறார்களோ அவர்களுடைய இதயத்தில் சுய இயல்பே ஆட்சி செய்யும். ஆகவே, அவர்கள் தங்கள் இயல்பின்படியே செயல்பட்டு, கர்த்தரைப் புறக்கணிக்கிறார்கள்.

இவ்வசனம், இஸ்ரவேலர்களின் நடத்தையை மட்டுமல்லாமல் இக்காலத்தில் நாம் பார்க்கக்கூடியதாக இருக்கின்ற பல சபைகளின் நடத்தையையும், விசுவாசிகளினுடைய நடத்தையையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. இன்று விசுவாசிகள் என்று தங்களை அழைத்துக் கொள்கிறவர்களுடைய வாழ்க்கையில் மட்டுமல்லாது, சபைகளிலும் கர்த்தருடைய வார்த்தைக்கு மதிப்பில்லை. பலரும் பெயருக்கு வேதத்தைப் பயன்படுத்துவதைத்தான் பார்க்க முடிகின்றதே தவிர உண்மையோடும், அது மெய்யான தேவனின் சத்திய வசனம் என்ற உள்ளுணர்வோடும், தங்களுடைய வாழ்க்கை, சபை வாழ்க்கை மற்றும் உலக காரியங்கள் எல்லாவற்றிலும் அதன் வழியைப் பின்பற்றி நடக்க முயற்சிப்பவர்களைப் பார்ப்பது இன்று மிக அரிதாக இருக்கின்றது. இந்நாட்களில் நம் இராஜாவான கர்த்தருக்கு மதிப்பில்லை. அவனவன் தன் தன் மனம்போனபடி நடந்து வருகின்றான். நடைமுறையில் தமிழினத்தின் மத்தியில் காணப்படும் கிறிஸ்தவ சமுதாயத்தில் நாம் தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருக்கின்ற இந்த உண்மையை மேலும் விளங்கிக் கொள்ள நியாயாதிபதிகள் 17-வது அதிகாரத்தை சிறிது விளக்கமாகப் பார்ப்போம்.

## நியாயாதிபதிகள் 17 - கர்த்தருக்கு விரோதமாக எழுந்த ஆலயம்

இந்த வேதப்பகுதியை நாம் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டுமானால், இக்காலகட்டத்தில் இஸ்ரவேலில், ஏற்கனவே கர்த்தரால் அதிகாரபூர்வமாக இஸ்ரவேலரின் வழிபாட்டிற்கென்று நியமிக்கப்பட்ட ஓர் ஆலயம் இருந்ததென்ற உண்மையை மனதில் கொள்வது அவசியம். இவ்வாலயம், ஆரம்பத்தில் மோசேயினால் வனாந்தரத்தில் எழுப்பப்பட்டு, பின்பு கர்த்தருடைய தெய்வீக வழிநடத்தலின்படி சீலோ பட்டணத்தில்

*நிறுவப்பட்டது. அதுமட்டுமல்லாமல், தேவனால் நியமிக்கப்பட்ட இந்த இடத்திலுள்ள ஆலயத்தில் மட்டுமே இஸ்ரவேலர் கூடி வந்து, அவரை முறையாக, அவர் வழிப்படி வழிபட வேண்டுமென்று அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. உபாகமம் 12:1-14 வரையிலான வசனங்கள், இதற்கான ஏற்பாட்டைப் பற்றித் தெளிவாக விளக்குகின்றன. இவ்வசனங்களின்படி கர்த்தர் நியமித்த இடத்திலல்லாது வேறொரு இடத்தில் அவரை அவர்கள் வழிபட முடியாது. இதேபகுதியில் 8-ம் வசனத்தில் அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானதையெல்லாம் செய்கிறதுபோல் நீங்களும் செய்யாது இருங்கள் என்றும் தேவன் கூறியிருந்தார்.*

*இஸ்ரவேலரின் ஆரம்ப வெற்றிகளுக்குப்பின், கர்த்தர் எப்பிராயீம் மலைத்தேசத்தில் உள்ள சீலோவைத் தன் வழிபாட்டிற்காகத் தெரிவு செய்தார். இதன் நிறைவேற்றுதலைக் குறித்து யோசுவா 18:1-ம் வசனத்தில் இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் சீலோவில்கூடி, அங்கே ஆசரிப்புக்கூடாரத்தை நிறுத்தினார்கள் என்று கூறப்பட்டுள்ளது. உபாகமம் 12-ல் கூறப்பட்டபடி யோசுவாவின் காலத்தில், இது இவ்வாறாக நிறைவேறியது. ஆகவே, கர்த்தர் தாமே தன்னுடைய வழிபாட்டிற்கான இடத்தைத் தெரிவு செய்து நியமித்திருப்பதால் அதைமீறி வேறொரு இடத்தில் ஆலயம் எழுப்புவது அவருக்கு விரோதமான காரியம். ஆனால், நியாயாதிபதிகள் 17-ம் அதிகாரத்தில், மீகா கர்த்தருடைய கட்டளையை மீறித் தன்னுடைய இல்லத்திலேயே ஓர் ஆலயத்தை அமைத்ததைப் பார்க்கிறோம். நியாயாதிபதிகள் 18:31-ன்படி, பின்பு தாண்புத்திரர் கர்த்தருடைய ஆலயம் சீலோவில் இருந்த காலம் முழுவதும் மீகா உண்டுபண்ணின சுரூபத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள் என்று வாசிக்கிறோம்.*

*தேவனுக்கெதிராக ஆலயம் எழுப்பிய மீகாவின் செயலை நாம் எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது. ஏனெனில், கர்த்தருடைய ஆலயம் எப்பிராயீமில் இருந்தது மட்டுமல்லாமல், நியாயாதிபதிகள் 17:1-ன்படி, மீகாவும் எப்பிராயீமிலேயே வாழ்ந்து வந்தான். ஆகவே, கர்த்தருடைய ஆலயம் மீகா போய் வழிபட முடியாதளவுக்கு தூரத்தில் இருக்கவில்லை. அப்படியிருக்க அவன் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்து தன்வீட்டிலேயே அவருக்கு எதிராக ஆலயம் எழுப்பியது கர்த்தருக்கு விரோதமான செயல். இச்சம்பவங்களை மனதிலிருத்திக் கொண்டு நாம் நியாயாதிபதிகள் 17-ம் அதிகாரத்தை விபரமாகப் பார்ப்போம்.*

### ஆலயம் எழுப்பிய மீகாவின் அறிவற்ற செயல்

*மீகாவின் அறிவற்ற செயலை இவ்வாலயத்தின் ஆரம்பமே எடுத்துச் சொல்கிறது. கர்த்தர் இத்தகைய செயலுக்கு எதிராக எத்தனையோ போதனைகளை ஏற்கனவே கொடுத்திருக்கும்போது மீகா இந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டிய அவசியமேயில்லை. இது முற்றிலும் தெய்வபக்தியற்ற செயல். இங்கு நாம் மீகாவின் அறிவற்ற செயலை*

மட்டுமல்லாது, அவனுடைய செயல்களுக்குக்கெல்லாம் மூல காரண-மாயிருந்த, இஸ்ரவேலில் இக்காலகட்டத்தில் ஆன்மீக, சமூக, ஒழுக்கத்-துறைகளில் காணப்பட்ட குழப்ப நிலையையும் கவனிப்பது அவசியம். இஸ்ரவேலின் ஆன்மீக, சமூக, ஒழுக்கக் குழப்பநிலையை மீகாவின் ஆலயம் எழுப்பப்பட்டவிதத்தில் தெளிவாகக் காணமுடிகின்றது. இங்கே நாம் பார்க்கின்ற சிரிப்புக்கிடமான செயல் என்னவென்றால், மீகா இந்த ஆலயத்தை கர்த்தருக்காக கர்த்தருடைய பெயரில் கட்டியதுதான். ஆலய சம்பந்தமான அனைத்துக் காரியங்களையும் மீகா கர்த்தருடைய பெயரில், கர்த்தருக்காகவே செய்வதாக எண்ணினான். ஆனால், மீகாவினுடைய தெய்வ வழிபாடு, கர்த்தருடைய வார்த்தையில் போதிக்கப்படும் அத்தனை வழிபாட்டு முறைகளையும் மீறியதாக இருந்தது.

### அ. மீகாவின் திருட்டு

இவ்வதிகாரத்தின் ஆரம்ப வசனங்களில் மீகா தன் தாயிடமிருந்து ஆயிரத்து நூறு வெள்ளிக்காசுகளைத் திருடுவதைப் பார்க்கிறோம். ஆரம்பத்தில், யார் இந்தக்காரியத்தைச் செய்தது என்பதை அறியாத தாய் திருடனை வாயார சபிக்கிறாள். அச்சாபத்திற்கு அஞ்சிய மீகா கொஞ்சக் காலம் சென்ற பின் தன் தாயிடம் வந்து வெள்ளிக்காசுகளைத் தான்தான் திருடியதாக ஒப்புக் கொள்ளுகிறான். அதைக்கேட்ட அவனுடைய தாய் மகனை எந்தவிதத்திலும் திட்டாமலும், திருத்தாமலும் கர்த்தருடைய பெயரால் அவனை ஆசீர்வதிக்கிறாள். இங்கே நாம் எந்தவிதத்திலும் அந்தத் தாயின் செயலைப் பாராட்ட முடியாத நிலையில் இருக்கிறோம். வெள்ளிக்காசுகள் காணாமல் போனபோது திருடனைத் திட்டிச் சபித்த தாய், அதைத் தன்னுடைய மகனே செய்திருக்கிறான் என்று அறிந்தபின் சுயநலத்தால் அவனுடைய தவறுகளுக்கு தானே உடந்தையாக இருக்கிறாள். இந்தத் தாய் தன்னுடைய மகனுக்கு எந்தவிதத்திலும் முன்னுதாரணமாக இருக்கவில்லை. அவள் தன் மகன் செய்த தவறை தண்டிக்க மறுக்கும் தன்னலமுள்ள அன்னை. அவளுடைய பலவீனத்தை அறிந்து அதைத் தன்னுடைய தவறுகளுக்கு வாய்க்காலாக அமைத்து வாழ்கிறான் மகன். ஒரு குடும்பம் எப்படி அமையக்கூடாதென்பதற்கு இந்த இருவரும் நல்ல உதாரணங்கள். மீகா வெள்ளிக்காசுகளைத் திருடியதாக ஒப்புக்கொண்டாலும், அது உண்மையான மனமாற்றத்தினால் ஏற்பட்டதல்ல. தாயின் சாபம் தன்னைப் பாதித்துவிடக்கூடாது என்ற பயத்தாலேயே அவன் தான் செய்ததை ஒப்புக்கொண்டான். அதுவும் காலம் சென்றே அதைச் செய்தான். தாயின் கோபமும், எரிச்சலும் குறையட்டும், அதற்குப்பிறகு சொல்லிக்கொள்ளலாம் என்றிருந்தானோ என்னவோ. மீகாவில் நாம் இங்கே எந்தவிதமான மனந்திரும்புதலுக்கான மனமாற்றத்தையும் பார்க்கவில்லை.

### ஆ. தாய் தந்த மன்னிப்பு

மீகாவின் தாய் தனது வெள்ளிக்காசுகள் திருடுபோனதை அறிந்ததும் ஒரு நிமிடம்கூடத் தாமதிக்காமல் திருடனை வாயார சபிக்கிறாள். பின்பு அவ்வெள்ளிக்காசுகளைத் தன்னுடைய மகனே திருடினான் என்றறிந்ததும்

உடனடியாக அவனை ஆசீர்வதிக்கிறாள். தன்னுடைய சாபம் மகனைப்பாதித்து விடக்கூடாது என்று அவனை உடனடியாக மன்னித்து கர்த்தரின் பெயரால் ஆசீர்வதிக்கிறாள். இது பார்ப்பதற்கு பெருமிதப்-படக்கூடிய செயலாகத் தென்பட்டாலும், மீகாவின் தாயின் இருளடைந்த இருதயத்தின் தடுமாற்றத்தைத்தான் வெளிப்படுத்துகிறது. தாயும், மகனும் இங்கே சுயநலத்தின் ஆளுகையின் கீழ் ஒருவரையொருவர் ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். இருவருடைய வாழ்க்கையிலும் மெய்யான தெய்வ பயத்திற்கோ, கர்த்தருடைய கட்டளைகளுக்கோ எந்தவிதமான இடமும் இருக்கவில்லை. தெய்வ பக்தியுள்ளவர்களின் வாழ்க்கையில் இத்தகைய போலித்தனங்களுக்கு இடமிருக்காது.

### இ. மீகாவின் பாவம்

இந்த வேதப்பகுதியில் நாம் மீகாவின் பாவத்தை ஆராய்கிறபோது, அவன் கர்த்தரின் பெயரில் அவருக்கெதிராக எழுப்பிய ஆலயத்தைக் குறித்துத்தான் சிந்திக்கின்றோம். தன் மகனே திருடன் என்பதை உணர்ந்த மீகாவின் தாய் அதற்குப் பிராயச்சித்தம் செய்யத் தீர்மானித்தாள். மகனை அழைத்து கர்த்தரின் பெயரில் வெள்ளிக்காசுகளை அவன் கையில் கொடுத்து, வெட்டப்பட்ட ஒரு சுரூபத்தையும், வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் செய்யும்படியாகச் சொன்னாள். தாயினுடைய வேண்டுதலின்படி மீகாவும் சுரூபத்தையும், விக்கிரகத்தையும் மட்டுமல்லாமல், ஒரு ஏபோத்தையும் உண்டுபண்ணினான். ஏபோத்து ஆசாரியர்கள் அணியும் அலங்கரிக்கப்பட்ட ஒரு விசேட ஆடை. இஸ்ரவேலர் மத்தியில், அது கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ள உதவும் வல்லமையுடையது என்ற ஒரு நம்பிக்கை இருந்தது. தாயும் மகனுமாக சேர்ந்து ஆலயம் எழுப்பும் பணியில் ஈடுபட்டார்கள். எல்லாவற்றையும் செய்து முடித்த மீகாவுக்கு ஒன்று மட்டும் குறையாகத் தெரிந்தது. தன் வீட்டில் எழுப்பப்படுகிற ஆலயத்தில் ஆலய வழிபாட்டுக் காரியங்களைச் செய்ய ஒரு ஆசாரியன் இல்லையே என்ற குறைதான் அது. அந்தக் குறையையும் நிவர்த்தி செய்ய மீகா, தன் குமாரர்களில் ஒருவனையே ஆசாரியனாகப் பிரதிஷ்டை செய்தான். இப்படியாக செய்த பாவங்களுக்கு பிராயச்சித்தம் தேட தாயும் மகனும் கர்த்தருக்கென்று ஆலயமெழுப்பினார்கள். இவையனைத்திலும் நான்கு முக்கிய விடயங்களில் அவர்கள் கர்த்தருடைய தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்களை மீறினார்கள் என்பதை அறியலாம்.

*1. பத்துக் கட்டளைகளில் இரண்டாவது கட்டளையை மீகா மீறினான். (யாத்திராகமம் 20:4-6). கர்த்தருடைய இரண்டாவது கட்டளை, மேலே வானத்திலும் பூமியிலும், பூமியின் கீழ்த்-தண்ணீரிலும் உண்டாகியிருப்பவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும், நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் . . . என்று தெரிவிக்கின்றது. இதை மீகாவும், அவனுடைய தாயும் வெளிப்படையாகவே மீறினார்கள்.*

*2. கர்த்தர் ஏற்கனவே கட்டளையிட்டு பணித்திருந்த இடத்தில்*

*(சீலோ) அவரை வழிபடாமல், தன் இல்லத்திலேயே மீகா இவருக்கு ஆலயம் எழுப்பி அவருடைய வார்த்தையை வெளிப்படையாக மீறினான்.*

*3. கர்த்தருடைய ஆலயத்தில் ஆசாரியனாக இருக்கிறவன் லேவியரின் கோத்திரத்தில், அதுவும் ஆரோனின் குடும்பத்தில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற கர்த்தரின் கட்டளையை மீறி, மீகா, எப்பிராயீம் தேசத்தவனாகிய தன் சொந்த குமாரனையே தான் எழுப்பிய ஆலயத்தில் ஆசாரியனாக நியமித்து கர்த்தரின் வார்த்தையை மீறினான்.*

*4. இத்தனைக்கும் மேலாக அவர்களுடைய பாவத்தின் கோரத்தன்மையை இன்னொன்றில் நாம் பார்க்க முடிகின்றது. தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ள கர்த்தரின் வார்த்தையை வெளிப்படையாகிய மீறிய மீகாவும், அவனுடைய தாயும் தாம் செய்கின்ற அத்தனையையும் கர்த்தருக்காக, அவருடைய பெயரில் செய்ய முற்பட்ட ஆணவமே அந்தக் கோரத்தன்மையாகும்.*

இவ்வாறாக மீகா கர்த்தரின் பெயரில் தன் இல்லத்தில் ஓர் ஆலயத்தை அவருடைய வார்த்தைக்கு எதிராக ஏற்படுத்தினான். இருந்தபோதும் இவையனைத்திலும் ஒரேயொரு காரியம் மட்டும் மீகாவுக்குத் திருப்தியளிக்கவில்லை. அவனுடைய ஆலயத்தின் ஆசாரியனாக லேவியர் கோத்திரத்தில் இருந்து வந்த ஒருவன் இல்லாததே அந்தக் குறையாகும். அது அவனுடைய மனதை எப்போதும் உறுத்திக் கொண்டிருந்தது. ஆலயம் எழுப்பி தன் பாவத்தையும், சாபத்தையும் தீர்த்துக்கொள்ளும் காரியத்தில் ஈடுபட்டிருந்த மீகா லேவியன் ஒருவனை ஆசாரியனாக வைத்துக் கொண்டால் தன் பாவமெல்லாம் போய்விடும் என்று கனவு கண்டான். கர்த்தருடைய வழிகளை நாடி அவரை அடைய முயலாமல் இந்த உலகில் எத்தனை பேர் மீகாவையும், அவனுடைய தாயையும் போல் தங்களுடைய சொந்த வழிகளில் போய் கர்த்தருடைய சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளும் வீண் முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.

இனி மீகா எப்படி ஒரு லேவியனை ஆசாரியனாகத் தேடிக் கொண்டான் என்பதைப் பார்ப்போம்.

**மீகாவின் ஆலயத்தின் ஆசாரியன்**

**அ. லேவியனின் பரதேசித்தனம்**

இவ்வதிகாரத்தின் 7-ம் வசனம் பெத்லகேமைச் சேர்ந்த லேவியனாகிய ஒரு வாலிபனை நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறது. இவ்வாலிபன் தன் ஊரைவிட்டுப் புறப்பட்டு வேறிடத்திற்குப் போகும்படிப் பிரயாணம் செய்தான். அவனுடைய செயலில் இரு பெரும் தவறுகளை நாம் காண்கிறோம். முதலாவதாக, அவனுடைய பிரயாணத்தின் நோக்கம் சந்தேகத்திற்கிடமான நிலையிலிருப்பதை 8-ம் வசனம் எடுத்துச் சொல்கிறது. ஏனெனில், அவன் எங்கேயாகிலும் பரதேசியாகப்போய் தங்கும்படியாக யூதாவைவிட்டுப் புறப்பட்டுப் போனான் என்று

*வாசிக்கிறோம். அவன் தான் இருந்த இடத்தில், கர்த்தர் அளித்துள்ள பணியில் திருப்தி அடையாமல், சுயநலமுள்ளவனாய், பொருளாசை கொண்டு வேறிடம் தேடி அலைந்தான். இதைவிட வேறு ஏதாவது வசதியாகக் கிடைக்குமா என்று பரதேசி போல் அவன் அலையத் துடித்தான். இன்று இந்த லேவியனைப்போல, பரதேசிகள் போல் பெரிய ஊழியங்களையும், பணவசதியையும் பெயரையும் பெற்றுத்தரும் ஊழியங்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்ற ஊழியக்காரர்கள் அனேகர். கர்த்தர் கொடுத்திருக்கும் ஊழியத்தை செய்ய விருப்பமில்லாமல் இக்கரைக்கு அக்கரை பச்சை என்று அலைகிறவர்கள் இந்த லேவியனைப் போன்றவர்களே.*

*இரண்டாவதாக, லேவியன் கர்த்தருடைய வார்த்தையை மீறினான். யோசுவாவின் காலத்தில் லேவியர்கள் வசிப்பதற்குக் கொடுக்கப்பட்டிருந்த நகரங்களுக்கு வெளியில் அவர்கள் போகக்கூடாதென்று கர்த்தருடைய கட்டளை இருந்தபோது, லேவியனாகிய வாலிபன் தவறான எண்ணத்தோடு யூதாவின் பெத்லகேமைவிட்டுப் புறப்பட்டுப் போனான். கர்த்தர் நம்மை அழைத்துக் கொடுத்திருக்கின்ற இடத்தைவிட்டு வேதபூர்வமான காரணங்களில்லாமல் நாம் அகலக்கூடாது. லேவியனாகிய வாலிபனைப் பொறுத்தவரையில் அவன் தன் ஊரைவிட்டுப் போவதற்கு எந்தவிதமான வேதபூர்வமான நல்ல நோக்கங்களும் இருக்கவில்லை.*

### ஆ. லேவியனோடு மீகாவின் உடன்படிக்கை

*அப்படியாக யூதாவைவிட்டுப் புறப்பட்டுப்போன வாலிபன், எப்பிராயீம் மலைதேசத்தில் உள்ள மீகாவின் இல்லத்தை வந்தடைந்தான். அங்கே அவன் மீகாவைச் சந்தித்தபோது தான் தேடிக்கொண்டிருந்தபடி லேவியன் ஒருவன் வந்துவிட்டான் என்ற மகிழ்ச்சியில் மீகா அவனோடு ஒரு உடன்படிக்கையை செய்து கொண்டான். லேவியனான வாலிபனுடைய நோக்கங்கள் பக்திமார்க்கமானவையல்ல என்பதை அவன் மீகாவின் வீட்டு ஆலயத்தில் ஆசாரியனாக இருக்கச் சம்மதித்ததிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. மீகா லேவியனுக்கு கொடுக்கச் சம்மதித்த சம்பளத்திலிருந்து லேவியனுடைய இருதயத்தை ஆண்டு கொண்டிருந்த பொருளாசையைப் பார்க்க முடிகின்றது. கர்த்தருடைய கட்டளைகளுக்கு எதிரான செயல் என்றும் பாராமல் பணத்தாசையால் லேவியன் மீகாவின் வீட்டு ஆலய ஆசாரியனாக இருக்கச் சம்மதித்தான். கர்த்தர் லேவியப்பணிக்கு அளித்திருந்த மதிப்பையும், உயர்வையும் அவன் தன்னுடைய இழி செயலின் மூலம் வீதிக்குக் கொண்டு வந்தான். லேவியனின் சுயநலம் அவன் கண்களைக் குருடாக்கி தனது பணியின் மகத்துவத்தை உணரும் சக்தியையும் அவனில் இல்லாமலாக்கி இருந்தது.*

*இந்த லேவியனைப்போலவே பல ஊழியக்காரர்கள் கர்த்தரின் ஊழியத்தின் மகிமையை உணராது தங்களுடைய சுயநலப்போக்கினால் ஊழியத்திற்கு அவமரியாதையை ஏற்படுத்தி விடுகிறார்கள். சபையைச் சுரண்டி வாழ்ந்தும், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியும், ஆடுகளைத் துஷ்பிரயோகம் செய்தும் வாழ்ந்து வருகின்ற போதகர்கள் இந்த*

லேவியனைப் போன்றவர்களே. அவர்கள் உலகமே உயர்வாக மதிக்க வேண்டிய ஊழியத்திற்கு பேரிழுக்கைத் தேடித்தருகிறார்கள்.

லேவியனுடைய நோக்கங்களையும், எண்ணங்களையும் பற்றி எந்தக் கவலையும் கொள்ளாமல் அவனைத் தனது சுயநல நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்ட மீகாவின் நடத்தை அவனுடைய உலகப் பிரகாரமான ஆன்மீக ஆர்வத்தை எடுத்துக் காட்டுகின்றது. அவனுடைய செயல்களில் எதுவுமே மெய்யான தெய்வபக்திக்குரிய செயல்களாக இருக்கவில்லை.

**இ. மீகாவின் வீட்டு ஆலயத்தில் லேவியனின் பிரதிஷ்டை**

இவ்வதிகாரத்தின் 11-ம் வசனத்தில் மீகா லேவியனைத் தன் ஆலயத்தின் ஆசாரியனாகப் பிரதிஷ்டை செய்தான் என்று வாசிக்கிறோம். தன்னுடைய வழிபாட்டு முறையிலிருந்த குறையை இதன் மூலம் போக்கிக்கொண்டதாக மீகா சந்தோஷப்பட்டான். இக்குறையை நிவர்த்தி செய்தவுடன், "எனக்கு ஆசாரியனாக லேவியன் அகப்பட்டபடியால், கர்த்தர் எனக்கு நன்மை செய்வார் என்று அறிந்திருக்கிறேன்" என்று சொல்லி மீகா ஆனந்தப்பட்டான். தங்களுடைய சொந்த சுயநல எண்ணங்களின்படி கர்த்தருக்கு இலஞ்சம் கொடுத்தும், பூசைகள் நடத்தியும், மொட்டை அடித்தும், தான தருமங்களைச் செய்தும், கோயில் குளமெல்லாம் அலைந்தும் தங்களைத் தாங்களே திருப்தி செய்து கொண்டு நரக துன்பத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறவர்கள் அறியாமையால் அனுபவிக்கின்ற போலி ஆனந்தத்தைத்தான் மீகாவின் ஆனந்தம் நினைவுபடுத்துகிறது.

மீகாவின் செயல்கள் அனைத்தும் அவனுடைய இருளடைந்த இருதயத்தையும், சுயநல நோக்குக்கொண்ட வழிபாட்டுமுறைகளையும்தான் படம்பிடித்துக் காட்டுகின்றன. மீகாவின் செயல்களிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான உண்மையொன்றுண்டு— எந்தவொரு மனிதனும் உண்மையாக, தன்னுடைய பாவங்களுக்காக வருந்தி மனந்திருந்தாமல், தன்னுடைய சமய வழிபாட்டு முறைகளை மட்டும் நல்ல முறையில் சீர்படுத்திக்கொண்டு தன்னைத் தானே போலியாகத் திருப்திப்படுத்திக் கொள்ள முடியும் என்பதுதான். கர்த்தரை மதிக்காத, ஒழுக்கமற்ற, தெய்வ பக்தி என்பதே என்னவென்றறியாத, தீய நோக்கங்கொண்ட மீகாவிற்குக்கூட இந்தவகையில் போலியான ஆன்மீக ஆர்வம் இருந்தது. ஆரம்பத்தில், கர்த்தருடைய வார்த்தைக்கு விரோத-மாக தன்னுடைய சொந்தக் குமாரனையே ஆசாரியனாக நியமித்தபோதும், அதில் திருப்தி அடையாமல் ஒரு லேவியனைத் தேடிப்பிடித்து அவனை ஆசாரியனாக்கி, கர்த்தர் அப்போது தன்னோடிருக்கிறார் என்று தவறாக தனக்குள் எண்ணிக் கொண்டான் மீகா. இத்தனைக்கும் காரணம் மீகா-விற்கு தாயின் சாபத்தில் இருந்த பயம்தான். அது தன்னைத் தொட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் மீகா தன் தாயோடு சேர்ந்து ஆன்மீக அக்கறை என்ற பெயரில் இத்தனை போலி சமய வழிபாடுகளையும் நடத்தினான். ஆனால், பாவியாகிய மீகா தன் பாவ விடுதலைக்கு

அவசியமான கர்த்தரின் வழிமுறைகளை நாடவில்லை.

நியாயாதிபதிகள் 17-வது அதிகாரத்தின் சம்பவங்கள் நியாயாதிபதிகள் வாழ்ந்த காலத்தின் சமூக, ஒழுக்க, ஆன்மீகக் குறைவுடைய குழப்பமான சூழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. நியாயாதிபதிகள் புத்தகம் முழுவதிலும் இதைத்தான் நாம் அடிக்கடி பார்க்கிறோம். கர்த்தராகிய ராஜாவிற்கு அன்று மனிதன் மதிப்புத் தர மறுத்தது போலவே இன்றும் மனிதர்கள் அவரை நிராகரித்துவிட்டு தங்கள் வாழ்க்கையைத் தாமே நடத்த முயன்று வருகிறார்கள். அங்கே நாம் பார்க்கின்ற அதே ஆன்மீகக் குழப்பமான சூழ்நிலையின் மத்தியிலேயே நாமும் இன்று வாழ்ந்து வருகின்றோம். நாம் வாழும் சமுதாய சூழ்நிலையை ஆராய்ந்து புரிந்து கொள்ள மறுக்கின்ற, அலட்சியப்படுத்துகின்ற எவரும் இன்றைய சூழ்நிலையில் நேர்மையான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வது கடினமான காரியம்.

இதுவரை நியாயதிபதிகள் புத்தகத்திலிருந்து நாம் பார்த்த காரியங்களின் மூலம் மூன்று முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம்.

**1. கர்த்தருடைய வார்த்தையின் அதிகாரத்துக்கு நாம் எப்போதும் கட்டுப்பட வேண்டும்.**

இதுவே நாம் முதலாவதாக கற்றுக்கொள்கிற பாடம். இஸ்ரவேலர்கள் அந்தக்காலத்தில் கர்த்தரின் ஆளுகையை நிராகரித்தார்கள். “அக்காலத்தில் இஸ்ரவேலில் ராஜா இல்லை” என்ற வார்த்தைகள் அதையே சுட்டிக் காட்டுகின்றன. கர்த்தரை நிராகரித்து விட்டு நாம் இவ்வுலகில் காலம் தள்ளிவிட முடியாது. நமக்கு ஜீவனைக்கொடுத்த கர்த்தர் நம்மை ஆண்டு வருகிறார். கர்த்தருடைய வார்த்தையை உதாசீனம் செய்த மீகா அற்கான தண்டனையைத் தன் வாழ்க்கையில் அனுபவிக்க நேர்ந்தது. அவனும் அவனைப் போன்றோரும் செய்த பாவங்கள் இஸ்ரவேலைப் பிற்காலத்தில் தொடர்ந்தும் வாட்டியதை வரலாறு நமக்கு விளக்குகிறது. தன்னுடைய இல்லத்தில் மீகா எழுப்பிய ஆலயம்தான் பிற்காலத்தில் யெரபோவாம் தாணிலும், பெத்தேலிலும் ஆலயமெழுப்பி இஸ்ரவேலைப் பாவத்தில் வழிநடத்தவும் காரணமாக இருந்தது. இஸ்ரவேலில் இக்காலப்பகுதியில் காணப்பட்ட எல்லா வகை சமூக, கலாச்சார, ஒழுக்க, ஆன்மீகக் குழப்ப நிலைக்கும் கர்த்தருடைய வார்த்தைகளை சட்டை செய்யாமல் மக்கள் வாழ்ந்ததே காரணமாக அமைந்தது.

இதே சூழ்நிலையைத்தான் இன்று தமிழினத்திலும் பார்க்கிறோம். கர்த்தருடைய வார்த்தையை சபைகளும், கிறிஸ்தவர்களும் உதாசீனம் செய்து வருகிறார்கள். கர்த்தருடைய வார்த்தை அவசியம்தான் ஆனால், அதே நமக்கு ஜீவன் என்பதுபோல் எல்லாவற்றிற்கும் அதை நாடி ஓடவேண்டியதில்லை என்று சொல்லித் திரிகிற போதகர்கள், கிறிஸ்தவ தலைவர்கள்தான் எத்தனை பேர். எப்படியோ சுவிசேஷத்தை மட்டும் சொல்லி சபையை ஒருவிதமாக நடத்திக்கொண்டு போய்விட்டால் போதும் என்ற மனநிலையோடு சபை அமைப்பு, சபை ஒழுங்குக்

கட்டுப்பாடு, ஆராதனை முறைகள், பிரசங்க ஊழியம் ஆகியவற்றில் எல்லாம் அக்கறை செலுத்தாமல் காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கிற, சபை சீர்திருத்தத்திற்கே எதிரிகளான போதகர்கள்தான் எத்தனைபேர். சத்தியத்தையே மறைத்துவைத்து, ஆத்துமாக்கள் வளர்வதற்கு வழிவிடாமல் இருந்துவரும் இவர்கள் வேதத்தின் அதிகாரத்துக்கு கட்டுப்பட மறுக்கிறார்கள்.

வேதம் ஆட்சி செய்யாத இடத்தில் கர்த்தர் இருக்க மாட்டார் என்பது இவர்களுக்குத் தெரிவதில்லை. அரைகுறையாக வேதத்தைப் பயன்படுத்திக் கொண்டால் போதும், அதற்கு மேல் போகத் தேவையில்லை என்று தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக் கொள்ளும் இவர்கள் மீகாவும், லேவியனும் அப்படித்தான் வாழ்ந்தார்கள் என்பதை உணர்வதில்லை. "வாழ்ந்தால் என் வேதத்தின்படி, எனக்காக மட்டும் நீ வாழ வேண்டும், இல்லாவிட்டால் நீ வேத விரோதி" என்று கருதும் கர்த்தரின் எண்ணங்களுக்கு இவர்கள் தங்களுடைய இருதயங்களில் இடம் கொடுப்பதில்லை. சபை ஊழியம் என்ற பெயரில் வேத வைராக்கியமற்ற ஓநாய்க்கூட்டத்தை வளர்ப்பவர்களை கர்த்தர் ஓநாய்களாகத்தான் கருதுகிறார் என்பதை இவர்கள் அறிவதில்லை. "உன்பேரில் எனக்குக் குறையுண்டு, நீ மனந்திரும்பு, ஜெயங்கொள்ளு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து உன் விளக்குத் தண்டத்தை அதனிடத்தில் இருந்து நீக்கி விடுவேன். உன் கிரியைகளுக்கேற்ற பலனைத்தான் நீ அனுபவிப்பாய்." என்ற இராஜாவாகிய இயேசுவின் வார்த்தைகளை இவர்கள் வாசித்தாலும் (வெளிப்படுத்தல்) அவற்றின் உள்ளர்த்தங்களை விளங்கிக் கொள்ளும் பக்குவத்தை இழந்து நிற்கிறார்கள்.

பாரம்பரியத்திற்கு தூபம்போட்டு, சடங்காச்சாரியங்களுக்கு தலை வணங்கி வருடத்துக்கு ஒரு வருடாந்த விழா, வாலிபர் முகாம், பெண்கள் முகாம், ஊழியக்காரர் முகாம் என்று இவற்றை மட்டும் தொடர்ந்து நடத்துவதைத் தொழிலாகக் கொண்டிருக்கும் சபைகளும், சபைப்பிரிவினரும் வருடா வருடம் வேதபூர்வமாக சபை வளர்ந்திருக்கிறதா என்பதையே சிந்தித்துப் பார்ப்பதில்லை. அந்த வம்பெல்லாம் நமக்கெதுக்கு? யார் எப்படி இருந்தால் நமக்கென்ன? ஏதோ, சபை ஓடிக்கொண்டிருந்தால் போதும் என்ற அசட்டையாக காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் போதகர்கள் கர்த்தரின் வார்த்தையை துச்சமாக எண்ணுகிறவர்கள். இதை வாசித்துக்கொண்டிருக்கிறபோதும் உங்கள் உள்ளத்தை நீங்கள் செய்யும் தவறுகள் உறுத்தாவிட்டால் பரிசுத்த ஆவியின் எந்தக் கிரியையையும் உங்கள் ஊழியத்தில் நீங்கள் பார்க்க முடியாது என்பதை அறிவீர்களா?

மீகா, அவன் தாய், லேவியனான வாலிபன் என்று அனைவரும் ஒட்டு மொத்தமாக கர்த்தரின் வார்த்தையையும், அதிகாரத்தையும் நிராகரித்ததோடு தங்களுடைய சொந்த எண்ணங்களையே வேதமாகக் கருதினார்கள். இது இன்று தமிழினத்தின் மத்தியில் காணப்படும் கிறிஸ்தவத்தில் இல்லை என்று எவராவது மறுத்துப் பேசமுடியுமா? போதகரில் இருந்து சபையில் அனைவரும் இன்று கர்த்தரின் வார்த்தைக்கு

*கட்டுப்படுவதில்லை. சத்தியம் பெரிதல்ல, பேசுகிறவன்தான் முக்கியம் என்று, சத்தியம் வீசை என்ன விலை என்று கேட்கிற மனிதர்களையெல்லாம் சபை மேடையில் ஏற்றிக் கொண்டிருக்கிற சபைத் தலைவர்களை நாம் அறியாமலா இருக்கிறோம்? ஆராதனை செய்தால் போதும் அது எப்படி இருக்க வேண்டும் என்பதில் எல்லாம் அக்கறை செலுத்த வேண்டிய அவசியமில்லை என்று மீகாவைப் போல சபைகளில் கர்த்தருக்கு தங்கள் சொந்தக் கோவில்களை எழுப்பிக்கொண்டிருக்கிற போதகர்களும், சபைத் தலைவர்களும் இன்று நம்மத்தியில் இல்லாமலா போய்விட்டார்கள்? தமிழினத்தின் மத்தியில் சத்தான கிறிஸ்தவம் இல்லை என்று நமக்குத் தெரிகிறது. ஆனால், அதற்குக் காரணம் நம்மத்தியில் சார்ஸ் வைரஸ் போல் இருக்கும் வேதம் பற்றிய தறவான கருத்துக்களும், கர்த்தரின் அதிகாரத்தை நிராகரிக்கும் போலிக்கூட்டமும்தான் என்பதை அறிந்து கொள்ளாவிட்டால் எதிர்காலம் எப்படிச் சுடர்விட முடியும்?*

*நண்பர்களே! கர்த்தரின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுங்கள். எதையும் அவருடைய வார்த்தையை வைத்து ஆராய்ந்து பாருங்கள். இதுவும் சரி, அதுவும் சரி என்று மதில் மேல் இருக்கும் பூனையைப் போல் இருக்கப் பழகாமல் கர்த்தரின் வார்த்தை போதிக்கும் சத்தியங்களுக்காக உயிர் கொடுக்கப் பழகுங்கள். கர்த்தரின் வார்த்தைக்கு மதிப்புத் தராதவர்கள் அவருடைய மக்களாக இருக்க முடியாது. போதகர்களே! ஊழியத்தை வைத்து உங்களை வளர்ப்பதில் காலத்தைச் செலுத்தாமல், அந்த ஊழியத்தின் பெருமையைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். உங்களால் வளர முடியாமல் போகிற ஒவ்வொருவருக்காவும், உங்களால் சத்தியம் தெரியாமல் வீணாய்ப்போகிற ஒவ்வொருவருக்காகவும் நீங்கள் நியாயத்தீர்ப்பு நாளில் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள். சத்தியத்தை சத்தியமாகப் போதித்துப் பிரசங்கம் செய்யாமலும், சத்தியத்தின் அடிப்படையில் மட்டும் சபை நடத்தாமலும் போனால் உங்களுக்கும் பரதேசியாகத் திரிந்த லேவிய வாலிபனுக்கும் என்ன வித்தியாசம்?*

*வேதம் வேதமாகக் கருதப்பட்டு, கர்த்தரின் அதிகாரத்திற்கு கட்டுப்படுகின்ற சபைகளும், ஆத்துமாக்களும் வளர்கின்றபோதே தமிழினத்தின் மத்தியில் இன்று காணப்படும் ஆன்மீகக் குழப்பம் நீங்கும். நண்பர்களே! எல்லாம் நன்றாய்த்தான் போய்க்கொண்டிருக்கிறது என்று நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் நேரமல்ல இது. சத்தியத்திற்காக உழைக்கிறவர்கள் உருவாக வேண்டிய காலமிது. அந்தக்கூட்டத்தில் நீங்களும் சேர்வீர்களா?*

## 2. கட்டற்ற தன்னல நடத்தையுடையவன் (Rampant Individualism) கர்த்தருக்கு எப்போதுமே விரோதியாக இருப்பான்

*இஸ்ரவேலர் மத்தியில் காணப்பட்ட ஆன்மீக, சமூக, ஒழுக்கக் குழப்ப நிலைக்கு இஸ்ரவேலரின் கட்டற்ற தன்னலநடத்தையே காரணமாக இருந்தது. இதனை நாம் மீகாவிலும், அவனுடைய தாயிலும், லேவியனாகிய வாலிபனிலும் பார்க்கிறோம். கட்டற்ற தன்னல நடத்தை என்பது, கர்த்தரின் வார்த்தைக்குக் கட்டுப்படாது, தானே தனக்குத் தெய்வமாய்,*

தான்தோன்றித்தனமாய் நடப்பதுதான். இப்படி வாழ்கிறவர்கள் கர்த்தரையும் தங்களுடைய பாவத்திற்குத் துணை கொள்ளத் தயங்க மாட்டார்கள். எங்கெங்கு கர்த்தருடைய வார்த்தைக்கு மதிப்பில்லையோ அங்கெல்லாம் கட்டற்ற தன்னல நடத்தையின் ஆட்சியைத்தான் பார்க்க முடியும். மீகா கர்த்தருடைய வார்த்தையை மீறி ஆலயம் எழுப்பினான். லேவியன் கர்த்தருடைய வார்த்தையை மீறி பரதேசியாக அலைந்தான். இதற்கெல்லாம் காரணம் அவர்களுடைய கட்டற்ற தன்னல நடத்தைதான்.

இன்று இது தமிழினத்திலும் தாண்டவமாடிக் கொண்டிருப்பதை வெட்ட வெளிச்சமாகப் பார்க்கிறோம். விசுவாசியாக மாறி மூன்று மாதம் முடிவதற்குள் கர்த்தர் கனவில் பேசினார் என்று சொல்லி தன் வீட்டிலேயே ஒரு ஊழியத்தை ஆரம்பித்து நடத்துகிற மனிதன் இந்த இனத்தைச் சேர்ந்தவனே. ஊழியம் என்றால் என்னவென்றே தெரியாமல், வேதத்திலும் நல்லறிவு இல்லாமல் தனி ஊழியம் நடத்திக் கொண்டிருக்கின்ற ஒரு பெருங்கூட்டமே இன்று தமிழினத்தில் இருக்கிறது. தங்களுடைய இருதயத்தில் ஏற்படுகின்ற வெறும் குருட்டார்வத்தைக் கர்த்தரின் அழைப்பாகத் தவறாகக் கருதி ஊழியம் செய்யப் புறப்பட்டிருக்கின்ற இந்தக்கூட்டத்திற்கு தங்களுடைய செய்கை தவறானது, வேதபோதனைகளுக்கெல்லாம் முரணானது என்பது புரிவதில்லை. கர்த்தர் அழைத்தபோதும் தயங்கித் தாழ்மையை வெளிப்படுத்திய ஏசாயா, யெரே மியா போன்றோர் எங்கே, கர்த்தர் அழைப்பதற்கு முன்பே வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு முன்னால் நிற்கும் நம் மனிதர்கள் எங்கே.

இதற்கும் மேலாக பலர் எந்த இடத்திலும் நிலைத்து நிற்காமல் பரதேசி போல் அலைந்து கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு சபையென்றாலே அலர்ஜி. சபைத்தொடர்பில்லாமல், ஒருவருக்கும் கட்டுப்படாமல், லேவியனைப்போல அலைந்து கொண்டிருப்போரை நாம் அன்றாடம் சந்திக்கிறோம். அதுவும் சபையைக் காணாத விசுவாசிகள் கூட்டம் தமி ழினத்தில் பெரிய கூட்டம். இவர்களுக்கு கிறிஸ்தவத்தைப் பற்றிய அரிச்சுவடி கூடத்தெரியாது. கட்டற்ற தன்னல நடத்தையால் இந்தக்கூட்டம் எந்தச்சபைக்கும் தன்னை ஒப்புக் கொடுக்காது. கர்த்தரை விசுவாசித்தது ஒரு சபையில், ஞானஸ்நானம் வாங்குவது இன்னொரு சபையில், ஆன்மீக நன்மைகளைப் பெறுவது வேறொரு சபையில், திருமணத்தை முடிப்பது இன்னொரு சபையில் என்று சபை சபையாக அலைந்து கொண்டிருக்கும் இவர்களுக்கும் நியாயாதிபதிகள் புத்தகத்தில் நாம் சந்திக்கும் நபர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. இவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கட்டுப்பட மறுக்கும் மனநிலை கொண்டவர்களாக இருக்கிறார்கள். மீகாவின் சாயலைத்தான் இவர்களில் நாம் பார்க்கிறோம். லேவியனின் போக்கைத்தான் இவர்களில் காண்கிறோம்.

வேதம் போதிக்கும் விசுவாசிகள் கர்த்தரின் வார்த்தைக்கும், அவருடைய சபைக்கும் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் தாழ்மைக்கு முதலிடம் இருக்கும். யோவான் ஸ்நானனைப்போல அவர்கள் கிறிஸ்து உயர வேண்டும், நாம் சிறுக வேண்டும் என்ற மனநிலையைக் கொண்டிருப்பார்கள். நண்பர்களே!

*இதுவரை கட்டற்ற தன்னல வாழ்க்கையை நடத்தியிருந்தால் இன்றோடு அதற்கு முடிவுகட்டி கர்த்தருடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அவருடைய மெய்யான சபை வாழ்க்கைக்கு உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஒப்புக் கொடுங்கள்.*

### 3. மெய்யான தெய்வபக்தியில்லாத வெறும் ஆன்மீக உணர்ச்சிகள் கர்த்தருக்கு விரோதமானவை

*மீகாவின் வாழ்க்கையிலும் அவனுடைய தாயின் வாழ்க்கையிலும் இருந்தது தெய்வ பக்தியல்ல. அது ஆன்மீக உணர்ச்சி என்ற பெயரில் நடத்தப்பட்ட போலித்தனமான ஒரு நாடகம் மட்டுமே. இதற்கு இன்று உலகில் பல உதாரணங்களைக் காட்டலாம். பெனி ஹின் நடத்தி வரும் நாடகத்தை இன்று உலகம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. சிலவருடங்களுக்கு முன் இதே உலகம் சிரிப்பலை மோகத்தை சந்தித்தது. ஆன்மீக உணர்ச்சிப் பிரவாகம் என்ற பெயரில் நாயைப் போல் குரைத்த கூட்டத்தைப் பற்றியும் நம்மினம் கேள்விப்படாமலில்லை. நம்மினத்திலும் இதேவிதமான நாடகத்தை பட்டி தொட்டியெல்லாம் நடத்தி வருகிறவர்கள் அனேகர். பவுல் அப்போஸ்தலன் கூட கொரிந்து சபையில் அடக்கமில்லாமல், கர்த்தரின் வார்த்தைக்கு கட்டுப்படாமல் தான் தோன்றித்தனமாக அந்நிய பாஷை பேசவும், தீர்க்கதரிசனம் சொல்லவும் முயன்ற கூட்டத்தை அடக்க வேண்டியிருந்தது. ஆன்மீக உணர்ச்சி வெளிப்பாடு என்ற பெயரில் நடக்கும் இந்தக் காரியங்களுக்கும் மெய்க்கிறிஸ்தவத்திற்கும் எப்போதும் தொடர்பு இருந்ததில்லை. எங்கே உணர்ச்சிகள் வெள்ளம் போல் கட்டுப்படுத்த முடியாமல் தறிகெட்டு ஓடுகின்றதோ அங்கே ஆபத்து இருக்கின்றது என்றுதான் அர்த்தம். புதுப்படமொன்று வெளிவந்த நாளில் தியெட்டரில் மக்கள் போடுகிற ஆரவாரத்தை சபையில் பார்க்கும் நிலை ஏற்பட்டால் அங்கு கிறிஸ்தவத்திற்கு இடமில்லை என்றுதான் பொருள்.*

*மெய்யான தெய்வபக்தி வேதபோதனைகளுக்குக் கட்டுப்பட்டது. அது வேதத்திற்கு விரோதமாக நடக்காது. அதற்கும் உணர்ச்சிகளுக்கும் தொடர்பில்லை என்று கூறுவது தகாது. ஆனால், அங்கே உணர்ச்சிகள் வாய்க்காலில் ஓடும் தண்ணீரைப்போல கட்டுப்பாட்டோடு ஓடிக் கொண்டிருக்கும். வாய்க்காலுக்கு வெளியில் பாயப்பார்க்கும் தண்ணீர் கட்டுப்பாடில்லாதது. போலிச்சமய உணர்ச்சிகள் ஒரு மனிதனை பரலோகத்திற்கு அழைத்துப்போகும் வல்லமையைக் கொண்டிருக்காது. அவை பரிசுத்த ஆவியின் கிரியைகளினால் உண்டான உணர்ச்சிகள் அல்ல. பரிசுத்த ஆவியின் செயலினால் ஆத்துமாக்களில் ஏற்படும் மெய்யான ஆன்மீக உணர்வுகள் தேவையற்ற ஆரவாரத்தை நாடாது பாவத்திற்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி கர்த்தருடைய வார்த்தையின்படி பரிசுத்த வாழ்க்கையை இந்த உலகில் நடத்துவதை இலட்சியமாகக் கொண்டிருக்கும்.*

*மீகா, அவனுடைய தாய், லேவியன் போன்றவர்களை உதாரணங் காட்டித்தான் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில், "தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும்*

இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு" என்று உபதேசம் செய்தார் (2 தீமோத்தேயு 3:5). தேவ பக்திக்கு அவசியமான மனந்திரும்புதலை வலியுறுத்திய இயேசு, அவ்வாறாக மனந்திருந்தியவர்களிடமிருந்து அதற்குரிய கனிகளை எதிர்பார்க்கிறார் (மாற்கு 3:8). அக்கனிகள் ஒருவனுடைய தாலந்துகளாகவோ, அவன் செய்யும் அற்புதங்களோ அல்ல என்பதை விளக்கிய இயேசு, அந்நாளில் அனேகர் என்னை நோக்கி: "கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அனேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் உங்களை ஒருக்காலும் அறியவில்லை; அக்கிரம செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்கு சொல்லுவேன்" என்று கூறுகிறார். மனந்திரும்புதலுக்குரிய ஆவிக்குரிய வாழ்க்கையின் அடையாளங்கள் ஆவியின் வரங்களில் தங்கியிருப்பதாக தவறாக எண்ணிக் கொண்டிருப்பவர்கள் இயேசுவின் இந்த வார்த்தைகளை சிந்தித்து ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

வேத பக்தியின் வேஷத்தைத் தரிப்பவர்களைக் குறித்து எச்சரிக்கை செய்யும் ஆண்டவர், "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட் செடிகளில் திராட்சைப் பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப் பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ நல்ல கனிகளைக் கொடுக்க மாட்டாது. நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்றார். ஆனால், பரலோகத்தில் பிரவேசிக்கும் மெய்யான தெய்வபக்தியைக் கொண்டவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, "அவர்கள் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்பவர்களாயிருப்பார்கள்" என்று ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார்.

இத்தகைய தெய்வபக்தி இஸ்ரவேலர்கள் மத்தியில் இல்லாதிருந்ததோடு, இன்று நம்மினத்தின் மத்தியிலும் காண முடியாத அபூர்வப் பொருளாக இருக்கின்றது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே தன் ஆவியின் மூலமாக இத்தகைய தெய்வபக்தியைத் தரக்கூடியவராக இருக்கிறார். அவராலேயன்றி வேறொருவர் மூலமாகவும் தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் எவரும் பிரவேசிக்க முடியாது என்று வேதம் தெளிவாகச் சொல்லுகிறது. எவருடைய வாழ்க்கையில், தேவனால் கொடுக்கப்படும், மனந்திரும்புதலோடு கூடிய விசுவாசம் இருக்கிறதோ, அங்குதான் உண்மையான தெய்வபக்திக்கான எல்லா ஏதுக்களும் காணப்படும். ஆகவே, கர்த்தருடைய வார்த்தையின் அடிப்படையில் அமைந்த இத்தெய்வபக்தியை நாம் அனைவரும் நாடி வந்து இன்று எம்மைச் சூழ்ந்திருக்கும் ஆன்மீகக் குழப்பநிலையில் இருந்து விடுதலை பெறுவோமாக.

# உலகத்தில் அன்புகூராதிருங்கள் - 11

வேதத்தில் உலகம் என்ற வார்த்தை பலவிதங்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதையும், கர்த்தரால் படைக்கப்பட்டு, மனிதன் வாழ்வதற்காகவும், அனுபவிப்பதற்காவும் கொடுக்கப்பட்டிருக்கிற உலகத்தில், ஆதாமின் பாவத்திற்குப் பிறகும் மனிதனுக்கு நன்மை பயக்கக்கூடிய காரியங்கள் உண்டு என்பதையும் கடந்த இதழின் மூலம் அறிந்து கொண்டோம். அத்தோடு உலகம் என்ற வார்த்தை வேறொரு விதத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதையும் அறிந்து கொண்டோம். 1 யோவான் 2:15-ல் உலகத்தில் அன்பு கூறாதீர்கள் என்று யோவான் சொன்னபோது, நமக்கு உலக இச்சை இருக்கக்கூடாது என்ற பொருளில் சொன்னார். நாம் நியாயபூர்வமாக, நமது விசுவாசத்திற்கும், கர்த்தடைய பெயருக்கும், பங்கம் ஏற்படாதவகையிலும், பத்துக் கட்டளைகளை மீறாமலும் இந்த உலகத்தில் கர்த்தர் தந்திருப்பவைகளை அனுபவிக்கும் உரிமை உண்டு. அதை மீறுவதே உலக இச்சையாகும்.

உலக இச்சையைப் பற்றி பவுலும் ரோமர் 12-ல் "பிரபஞ்சத்திற்குரிய வேஷம்" என்று வர்ணிக்கிறார். இந்த உலகம் பாவத்தால் கறைபடிந்திருக்கிறது. பாவத்தால் கறைபடிந்து காணப்படும் இந்த உலகை சாத்தான் தனது கைங்கரியங்களுக்காகத் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறான். பாவத்தில் இருக்கும் மனிதர்கள் இந்த உலகத்தில் இருப்பவற்றைத் தங்களுடைய பாவத்தால் பாவகாரியங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். மனிதன் பல ஆராய்ச்சிகளைச் செய்து பேசும் படத்தைக் கண்டுபிடித்தான். பல நல்ல காரியங்களுக்கு அதைப் பயன்படுத்தலாம். விஞ்ஞான அறிவு, ஆன்மீக அறிவு வளரக்கூட அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் பாவத்திற்கு அடிமையாக இருக்கும் மனிதனால் அதை நன்மையான காரியங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளும் சிந்தனை வராது. தன்னுடைய இச்சைகளைத் தணித்துக் கொள்ள அதை எப்படிப்பயன்படுத்திக் கொள்ளலாம் என்றவிதத்திலேயே அவனுடைய சிந்தனை இருக்கும். இதன் விளைவைத்தான் இன்று தமிழினத்தின் சினிமா மோகத்தில் பார்க்கிறோம். ஒரு நாட்டை ஆளும் அளவுக்கு தமிழனின் பாவ சிந்தனைகள் பேசும்படத்தைக் கொண்டு போயிருக்கிறது. இதுவே உலக இச்சை. இந்த இச்சை விசுவாசிக்கு இருக்கக்கூடாது என்றுதான் யோவானும், பவுலும் சொல்லுகிறார்கள். இந்த இச்சை மாம்சத்திற்குரியது, ஆவிக்குரியதல்ல.

உலக இச்சைக்கு தன் வாழ்வில் விசுவாசி இடம் கொடுக்கக்கூடாது. அப்படி இடம் கொடுக்கும்போது அவன் உலக மனிதனின் அடையாளங்களைத் தன்னில் கொண்டவனாக கர்த்தருக்கு விசுவாசமில்லாதவனாக நடந்து கொள்ள நேரிடும். இந்த ஆபத்தைத்தான் 1 யோவான்

2:15 எச்சரிக்கையாக வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவை விசுவாசிக்கு முன்பு நாம் உலக இச்சையில் நம்மை மறந்து இருந்து வந்திருக்கின்றோம். அப்போது நமக்கு பிதாவில் எந்த அன்பும் இருக்கவில்லை. ஆனால், கிறிஸ்துவை விசுவாசித்த பின்பு நாம் கிறிஸ்துவுக்கு அடிமையாக மாறியிருக்கிறோம். பிதாவின் அன்பு நம்மில் இருக்கிறது. அதற்கு பங்கம் ஏற்படுத்தக் கூடிய உலக இச்சை நம்மில் இருக்கக்கூடாது. உலக இச்சை விசுவாச வாழ்க்கைக்கு எதிரி. கிறிஸ்துவுக்கு பரமவிரோதி.

பவுல் ரோமர் 12:2-ன் மூலம் உலக இச்சைபற்றி அருமையான விளக்கத்தைத் தந்திருக்கிறார். அந்த வசனத்தை முதலில் பார்ப்போம். "நீங்கள் பிரபஞ்சத்திற்குரிய வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்கிறார் பவுல். இதன் அடிப்படையில் உலக இச்சையைக்குறித்து மூன்று உண்மைகளை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

**1. வேதத்தின் போதனைகளுக்கு விரோதமான முறையில் சிந்திப்பது உலக இச்சையாகும்.**

இந்த உலகத்திற்குரிய வேஷத்தைப்போடாமல் இருப்பதற்கு முதலில் நாம் நம்முடைய மனதைக் காத்துக் கொள்ள வேண்டும் என்கிறார் பவுல். நமக்கு உலக இச்சை ஏற்படுவதற்கு உலகத்தில் இருக்கும் பொருட்கள் அல்ல மூல காரணம். நமக்குள் இருக்கும் பாவம் தான் காரணம். நமது இருதயத்தை நாம் காத்துக் கொள்ளாவிட்டால் அது பாவகரமான சிந்தனைகளுக்கு இடம் கொடுத்து உலகத்து பொருட்களைத் தன்னுடைய இச்சையைத் தணித்துக் கொள்ள பயன்படுத்திக் கொள்ளப்பார்க்கும். ஆகவேதான் பவுல் நமது மனதைக் காத்துக்கொள்ளும்படியாக நம்மை எச்சரிக்கிறார்.

நமது மனதில் பாவகரமான எண்ணங்களுக்கு இடம் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் வேதபூர்வமான சிந்தனைகளை நாம் எப்போதும் கொண்டிருப்பது அவசியம். வேதபூர்வமான சிந்தனைகளே நம்மைக் கர்த்தரின் வழியில் கொண்டு செல்லும். வேதத்திற்கு விரோதமான சிந்தனைகளும், வேதத்தில் காணப்படாத, வேதம்போதிக்காத எண்ணங்களும் நம்மை உலகத்தின் பாதையில்தான் வழிநடத்தும். உதாரணத்திற்கு கடந்த இதழில் நாம் பார்த்த அந்த "ஜிம்சக், ஜிம்சக்" பாட்டை நினைவுகூறுங்கள். பாட்டை எழுதிய மனிதனுக்கு அத்தகைய சிந்தனைகள் ஏற்படுவதற்குக் காரணமென்ன? சுத்தமான வேதசிந்தனைகளை அந்த மனிதன் தன்னுடைய இருதயத்தில் வளர்த்துக் கொள்ளாதுதான். இதற்காக அந்த மனிதனை நாம் கிறிஸ்தவரே அல்ல என்று சொல்லவரவில்லை. அவர் கிறிஸ்தவராக இருந்தால், வேதத்தின் தூய்மையான தேவ பக்திக்குரிய வழிபாட்டு முறைகளுக்கு தன்னுடைய இருதயத்தில் இடம் கொடுத்திருந்தால் இந்தவகையிலான டப்பாங்கூத்துப் பாடல்களுக்கும் கர்த்தருக்கும் தொடர்பு இல்லை என்பதை உணர்ந்திருப்பார். ஆனால், அதைச் செய்யத்தவறி தமிழனுக்கு இன்று

சினிமா பார்த்துப் பார்த்து ஓ! போடப் பிடிக்கிறது என்பதால் அந்தவிதத்தில் பாட்டெழுத ஆரம்பித்திருக்கிறார் இந்த மனிதர். வேத சிந்தனையைக் கொண்டிருந்து அதன் அடிப்படையில் நாட்டு மக்களின் போக்கை ஆராய்ந்து, அந்தப் போக்கு தவறு என்று உணர்ந்து அதைத் திருத்தும் வழியைப் பார்க்காமல் அதேபோக்கில் போகப்பார்ப்பது உலக இச்சையைத் தவிற வேறில்லை.

வேதபூர்வமான சிந்தனைகளை இருதயத்தில் வளர்த்துக் கொள்ளாமல், அதன் அடிப்படையில் எதையும் ஆராய்ந்து பார்த்து வாழப்பழகாமல் விட்டதால்தான் லோத்தும், தேமாவும் இந்த உலக ஆசையால் மண்ணாய்ப் போனார்கள். தங்களுடைய குடும்பங்களுக்கும் அவர்களால் எந்த நன்மையும் வாய்க்கவில்லை. உலக ஆசையால் வீணாய்ப்போனவர்களை அடையாளங் கண்டு கொள்ள வேதத்தில் இன்னும் பல உதாரணங்களை நாம் பார்க்க முடியும்.

இன்றைக்கு பெந்தகொஸ்தே சபைகளிலும், நவீன சுவிசேஷ போக்கைப் பின்பற்றும் சபைகளிலும் சபை வழிபாட்டு வேளைகளில் பயன்படுத்தப்-படும் இசைக்கருவிகளையும், பாடல்களில் வழி நடத்துபவர்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். சபை ஆராதனைவேளையில் இவைகளுக்கே இன்று முதலிடம் கொடுக்கப்படுகிறது. காது செவிடாகும் அளவுக்கு டிரம் அடித்தும், இலெக்டிரிக் கிட்டார் வாசித்தும் ஆத்துமாக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் வேடிக்கை நிகழ்ச்சி ஆராதனை வேளையில் நடந்து வருவதை நாம் அறிவோம். இது பக்தியை எப்படிக் கிளறிவிடும் என்று ஒருவரும் வேதத்தைத் திறந்து ஆராய்வதில்லை. கர்த்தருக்கு இது பிடித்தமானதாக இருக்குமா என்று கேள்வி எழுப்புவதில்லை. தாவீது ஆடினான், இசைக்கருவிகள் வாசித்தான் என்று ஏதோ தாவீதுக்குப் பக்கத்தில் இருந்து பார்த்ததுபோல் விதண்டாவாதம் செய்வார்களே தவிர, தேவ பயத்துடன் ஆராதனை வேளையில் இசை எப்படி இருக்க வேண்டும் என்று சிந்தித்துப் பார்ப்பதில்லை. கையையும், கால்களையும் ஆட்டுவது எப்படி ஆராதனையாகும்? நமக்கு அது உற்சாகத்தைக் கொடுக்கலாம், இனிக்கலாம்; ஆனால், கர்த்தர் அதை அனுமதித்திருக்கிறாரா? என்ற சிந்தனையே ஒருவருக்கும் எழுவதில்லை. மனித சிந்தனைகளுக்கு இடம் கொடுத்து இருதயம் மரத்துப்போனால் கர்த்தரின் வேத சிந்தனைகளுக்கு அது இடம் கொடுக்க வாஞ்சையாய் இருக்காது.

வேத போதனைகளுக்கு விரோதமான முறையில் சிந்திக்காமல் இருக்க இரண்டு காரியங்களை ஒவ்வொரு விசுவாசியும் அவசியம் செய்ய வேண்டும். முதலில், வேத போதனைகளில் மேலான அறிவைப் பெற்றுக்கொண்டு நமது சிந்தனைகள் அதன்படி இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். எகிப்து நாட்டின் தலைவனின் மனைவி தவறான உறவுகொள்ளத் தன்னை அழைத்தபோது, அந்த உறவு தவறு என்ற வேத சிந்தனை ஆணித்தரமாக இருதயத்தில் இருந்ததால்தான் யோசேப்பு அங்கிருந்து உடனடியாக ஓட்டம் பிடித்தான். ஆணும், ஆணும்,

பெண்ணும் பெண்ணும் சரீர உறவு கொண்டு சேர்ந்து வாழ்வது தப்பில்லை என்ற இக்காலத்து சிந்தனைகளையும், எந்தப் பெண்ணோடும் திருமணத்திற்கு முன் சரீர உறவு வைத்துக் கொள்வது அப்படி ஒன்றும் பெரிய பாவமில்லை என்று எண்ணுகின்ற இக்காலத்து மனிதர்களுடைய சிந்தனைகளையும் அவன் கொண்டிருந்தால் அன்று உலக இச்சைக்கு அவன் பலியாகியிருப்பான். யோசேப்பின் இருதயத்தில் கர்த்தரின் கட்டளைகளைத் தவிர வேறு சிந்தனைகளுக்கு இடமிருக்கவில்லை. இதுவும் சரி, அதுவும் சரி என்று வாதிடும் பிசாசுத்தனமான சிந்தனை-களுக்கு அவன் தன் வாழ்வில் இடம் கொடுக்கவில்லை. அவனுடைய இருதயம் கர்த்தரின் வேதத்தால் மட்டுமே நிரப்பப்பட்டிருந்தது.

இரண்டாவதாக, வேதவிரோதமான சிந்தனைகளுக்கும், வேதத்தால் அங்கீகரிக்கப்படாத எண்ணங்களுக்கும் நமது இருதயத்தில் இடம் கொடுக்கக் கூடாது. சாத்தான் நம்மைக் கெடுப்பதற்காக எதையும் செய்யப்பார்ப்பான். “வேதத்தில் அது பற்றி எதுவும் இல்லைதான். ஆனால், வேதம் எல்லாவற்றையும் பற்றி விளக்கங் கொடுக்கவில்லை. நாமே சில காரியங்களைப் பற்றி சொந்தமாகத் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும்” என்று அவன் நம்மோடு வாதாடுவான். உதாரணத்திற்கு இன்று விசுவாசி, விசுவாசியில்லாதவர்களோடு திருமண உறவு வைத்துக் கொள்ளக்கூடாது என்பதில் அனேக கிறிஸ்தவர்களுக்கு சரியான ஞான-மில்லாதிருக்கின்றது. அவள் விசுவாசி இல்லைதான். ஆனால், திருமணத்-திற்குப் பிறகு எப்படியாவது கர்த்தரிடம் வந்துவிடுவாள் பாஸ்டர், என்று என்னிடமே சொன்னவர்கள் இருக்கிறார்கள். இதைத்தான் பிசாசின் சிந்தனை என்று வேதம் சொல்கிறது. இதுபற்றி வேதம் மிகத் தெளிவாகப் போதிக்கிறது. விசுவாசி, விசுவாசியை மட்டுமே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது கர்த்தரின் தெளிவான கட்டளை. ஒரே சத்தியத்தையும், எண்ணங்களையும் கொண்டிராதவர்கள் சேர்ந்து வாழ முடியாது. இருட்டும், ஒளியும் இணைந்திருக்க முடியாது. இதற்கு எதிராக வாதாடுகிறவர்களுடைய இருதயம் உலக இச்சைக்குப் பறிபோயிருக்கிறது என்றுதான் அர்த்தம்.

எந்த விஷயமாக இருந்தாலும், அதைப்பற்றி வேதம் என்ன சொல்கிறது? என்று ஆராய்ந்து அறிந்து கொள்ளுகிற மனப்பான்மையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். வேதவிரோத எண்ணங்ளையும், வேதத்தால் அங்கீகரிக்கப்படாத சிந்தனைகளையும் நமது மனதில் நுழையவிடாமல் தடுக்க இதைத் தவிர வேறு வழியில்லை. வேதம் என்ன சொல்லுகிறது என்று அறிந்து கொள்வதில் அக்கறை இல்லாதவர்கள்தான் அசட்டையாக இருந்து தம்மை அறியாமலேயே உலக ஆசைக்குப் பலியாவார்கள். வேத ஞானம் வரண்டு போய்க்காணப்படும் தமிழினத்தில் உலக ஆசை உறுதியாய் பதிந்திருப்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. பெனிஹின், தினகரன், எசேக்கியா ஜோன்ஸ், சாம் ஜெபத்துரை என்று தனி மனிதர் களின் மோசமான போதனைகளுக்கு தங்களை ஒப்புக்கொடுத்து, அவர்களுடைய வலையில் இருந்து விடுபட முடியாமலும், சுயமாக சிந்திக்க முடியாமலும் அல்லாடிக்கொண்டிருக்க தமிழ் மக்களால்

வேதவிரோதமான சிந்தனைகள் தங்களுடைய இருதயத்தில் நுழையாமல் இருப்பதைத் தடுக்க முடியாமலிருக்கிறது.

வேத அறிவு இருந்தால் மட்டுமே எவர் சொல்வதையும் கேட்டு ஆராய்ந்து தவறானவைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும். ஆத்துமாக்கள் போலிப்பிரசங்கங்களைக் கேட்பதைத் தவிர்க்க வேண்டும். வேதம் போதிக்கப்படாத இடத்தில் காலடி எடுத்து வைக்கக்கூடாது. வாக்குத்தத்த வசனங்களைத் தந்து நம்மை ஏமாற்றப் பார்க்கும் மனிதர்களுடைய வலையில் வீழ்ந்து விடக்கூடாது. சமீபத்தில் நான் பார்த்த ஒரு கிறிஸ்தவ துண்டுப்பிரசுரத்தில், “கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்” என்ற வாக்குத்தத்த வசனம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வசனத்தை நம்பிப் பத்துத்தடவைகள் திரும்பத் திரும்பச் சொன்னால், கர்த்தர் உன்னை நிச்சயம் ஆசீர்வதிப்பார் என்று அதில் எழுதப்பட்டிருந்தது. இது பயித்தியக்காரத்தனம் என்பது எத்தனை பேருக்குப் புரிகிறது. அந்த வசனத்தை எந்த சந்தர்ப்பத்தில் எதற்காக கர்த்தர் சொன்னார் என்று ஆராய்ந்து பார்க்காமல் மெஜிக் போலத் திரும்பத் திரும்ப சொல்லிப் பார்ப்பதால் எந்தவிதமான ஆசீர்வாதமும் ஒருவருக்கும் கிடைக்காது. இது தெரியாமல் அந்தத்துண்டுப்பிரசுரத்தை விநியோகிக்கும் மனிதனை நம்பி அவனுக்கு பணத்தையும் அனுப்பி வீணாய்ப் போகிற தமிழ் மக்கள் அனேகர். இது வேதம் தெரியாததால் வருகின்ற வினை.

வேதத்தால் அங்கீகரிககப்படாத சிந்தனைகளுக்கு நம்முடைய இருதயத்தில் இடம் கொடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியம். அதாவது, வேதம் தெளிவாகப் போதிக்கின்றவற்றிற்கு எதிராகப் போகாமலிருப்பதும் அவசியம். அதேநேரம், வேதம் ஒரு காரியத்தைச் செய்யக்கூடாது என்று எங்கும் சொல்லவில்லை ஆகவே, அதைச் செய்தால் தப்பில்லை என்று சொல்லுகின்ற இருதயம் நமக்கிருக்காமலும் பார்த்துக் கொள்வது அவசியம். முதலாவதைச் செய்கிற பலர் இரண்டாவதில் கோட்டைவிட்டு விடுகிறார்கள். கர்த்தரைப் பொறுத்தவரையில் முதலாவதைப் போல இரண்டாவதும் மிக முக்கியமானது. ஒன்றை மட்டும் செய்துவிட்டு மற்றதை செய்யாமல் இருக்கப் பார்ப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். உதாரணத்திற்கு, தனி ஊழியம் செய்யக் கூடாதென்று வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை என்று ஒருவர் வாதாடுகிறார் என்று பார்த்துக் கொள்வோம். அப்படி நேரடியாக எழுதி வைக்கப்பட்டிருக்காவிட்டாலும், சபை எப்படி, யாரால் நிறுவப்பட வேண்டும், அந்த ஊழியத்தை யார் செய்ய வேண்டும் என்று விளக்கமாகப் போதிக்கின்ற பகுதிகளை நாம் ஆராய்ந்து பார்த்தால் மட்டுமே தனி ஊழியம் செய்யப் புறப்படுவது பரதேசித்தனமானது என்ற உண்மை கரன்ட் அடித்ததுபோல் புலப்படும். ஆகவே, நாமே ஒன்று வேதத்தில் இல்லை என்று அலட்சியமாக முடிவெடுத்து ஆபத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளாமல் கர்த்தருக்கும் பிடிக்காததை செய்யப் பயப்படும் இருதயம் நமக்கிருக்குமாறு பார்த்துக் கொள்வது அவசியம்.

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

திருச்சபை வரலாறு

# ஹிப்போவின் ஆகஸ்தீன்

## திறமை வாய்ந்த சில திருச்சபைத் தலைவர்கள் - 11

இதுவரை நாம் பார்த்துள்ள எல்லாத் திருச்சபைத் தலைவர்களையும் விட முக்கியமாகக் குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியவர் ஹிப்போவைச் சேர்ந்த அவுரேலியஸ் ஆகஸ்தீன். மேற்குப்பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் பவுலுக்குப் பிறகு தோன்றிய சிறந்த இறையியல் அறிஞராக ஆகஸ்தீனையே கருதினார்கள். ஆகஸ்தீன் உண்மையிலேயே அற்புதமான, சிறந்த வல்லமையுள்ள சிந்தனைவாதியாக இருந்தார். இந்த உலகில் வாழ்ந்து இலத்தீன் மொழியில் மிக அருமையாகவும், அழகாகவும் எழுதிய ஒரே மனிதர் ஆகஸ்தீன் மட்டுமே. ஆதி சபை வரலாற்றில் வாழ்ந்த மனிதர்கள் அனைவரிலும் ஆகஸ்தீனைப் பற்றி மட்டுமே நாம் அதிகளவுக்கு அறிந்து கொள்ளுவதற்கு, ஆகஸ்தீன் எழுதிய கொன்பெஷன்ஸ் (Confessions) என்ற நூல் நமக்கு உதவுகிறது. 354-ல் வட மேற்கு ஆபிரிக்காவைச் (இன்று அல்ஜீரியா) சேர்ந்த தாகேஸ்ட் என்ற இடத்தில் ஆகஸ்தீன் பிறந்தார். ஆகஸ்தீனின் தந்தை கிறிஸ்தவரல்ல. ஆனால், தாய் மொனீகா கிறிஸ்தவர். தன் மகனை மொனீகா நல்ல முறையில் தேவ பக்தியுடன் வளர்த்தார். ஜோன் கிரிஸஸ்தொம்மின் தாய் அந்தூசாவைப்போல கிறிஸ்தவ பெண்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக இருக்கும் வகையில் வாழ்ந்து, தன்னுடைய மகனை ஆதி சபை வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெற்ற ஒரு தலைவராக வருமளவுக்கு வளர்த்தார் மொனீகா. ஆகஸ்தீன் தேர்ந்த கல்வியைப் பெற்று வக்கீலாக வருமளவுக்கு திறமை வாய்ந்தவராக இருந்தார். ஆனால், 370-ல் தன் தந்தை மரணமானதால் ஆசிரியராக வேலையில் சேர்ந்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவர் தலையில் இறங்கியது. அத்தோடு, திருமணமாகாமலேயே ஒரு பெண்ணோடு வாழ்க்கை நடத்தி அடியோடாடஸ் என்ற மகனையும் அவர் உலகத்திற்குத் தந்தார். ஆகஸ்தீன் இக்காலத்தில் கிறிஸ்தவராக இருக்கவில்லை. 377-ல் ஆகஸ்தீன் கார்த்தேஜுக்கு இடம் மாறி அங்கே பேச்சுக்கலை போதிக்கும் பேராசிரியராகப் பதவியேற்றார். இங்கிருந்த காலத்தில் ஆகஸ்தீனுக்கு சீசரோவின் நூலொன்றைப் படித்ததன் காரணமாக தத்துவத்தில் பேரார்வம் ஏற்பட்டது. இதனால் வாழ்க்கையில் பல கேள்விகளுக்கு பதில் தேடும் ஆர்வமும் அவர் உள்ளத்தைக் கிளறியது. இக்காலத்தில் ஆகஸ்தீன் வேதத்தையும் வாசிக்க ஆரம்பித்தபோதும் பழைய ஏற்பாட்டுப் போதனைகள் அவருக்குப் புதிர்களாக இருந்தன. தத்துவ ஆர்வத்தில் காரண காரியங்களைக் கொண்டு ஆராயும் சிந்தனாவாதியாக இருந்த ஆகஸ்தீனுக்கு பழைய ஏற்பாடு ஒரு கொடூரமான, நடைமுறைக்குதவாத நூலாகப்பட்டது.

கிறிஸ்தவ போதனைகளில் வளர்க்கப்பட்டிருந்த ஆகஸ்தீன் இக்காலத்தில் கிறிஸ்தவத்திற்கு முழுக்குப்போட்டுவிட்டு நொஸ்டிஸிசத்தின் ஒரு அங்கமாக இருந்த மெனிக்கீஸ் (Manichees) என்ற பிரிவின் போதனைகளைப் பின்பற்ற ஆரம்பித்தார். இந்தப்பிரிவு பழைய ஏற்பாட்டை முற்றாக நிராகரித்து, காரண

காரியங்களை ஆராய்வதன் மூலம் தங்களுடைய போதனைகளனைத்தையும் நிரூபிக்க முடியும் என்று நம்பியது. அதேவேளையில் ஆகஸ்தீனின் தாய் மகனுடைய மனந்திரும்புதலுக்காக கண்ணீரோடு ஜெபித்தார். மகனின் மனமாற்றத்திற்காக பலருடைய உதவியையும் நாடினார். அவருடைய கண்ணீரோடு கலந்த ஜெபத்தைப் பார்த்த ஒரு பிசப், "போ! அம்மா, இத்தனைக் கண்ணீருக்கும் சொந்தமான மகன் வீணாய்ப் போகப் போவதில்லை" என்று மொனீகாவைப்பார்த்து கூறினார்.

383-ல் ஆகஸ்தீன் ரோமுக்கு இடம் மாறி அங்கே புதிதாக ஆசிரியர் பணியில் சேர்ந்தார். இக்காலத்தில் ஆகஸ்தீனுக்கு நொஸ்டிஸிச மெனிக்கீஸ் போதனைகளில் இருந்த நம்பிக்கை குறைய ஆரம்பித்தது. இதற்குக் காரணம் ஆகஸ்தீன் நியோபிளேட்டோனியனிசம் (Neoplatonianism) என்ற புதிய போதனையை நாட ஆரம்பித்ததுதான். மெனீக்கிசம் கடவுளை சரீர ரூபத்தில் மட்டுமே பார்த்தது. ஆனால், நியோபிளேட்டோனியனிசம் கடவுள் எல்லைகளற்று பரிபூரண ஆவியானவராய் இருப்பதாகவும் மனிதனால் அவரை அறிந்து கொள்ள முடியும் என்றும் போதித்தது. மெனீக்கீஸ் போதனைகளைப்பின்பற்றியபோது வாழ்க்கை பற்றிய தனது கேள்விகளுக்கு விடைகிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஆகஸ்தீன் இந்த புதிய போதனை தனக்கு உதவும் என்று நம்பினார். 384-ல் ஆகஸ்தீன் மிலானில் பேச்சுக்கலைப் பேராசிரியராக நியமனம் பெற்றார்.

நியோபிளேட்டோனியனிசத்தைப் பின்பற்ற ஆரம்பித்த காலத்தில் ஆகஸ்தீன் மிலானைச் சேர்ந்த பிசப் அம்பிரோசின் (Bishop Ambrose) போதனைகளையும் கேட்க ஆரம்பித்தார். அம்பிரோஸ் கிறிஸ்தவத்தைப் பற்றிக் கொடுத்த விளக்கங்கள் ஆகஸ்தீனைப் பெரிதும் கவர்ந்து கிறிஸ்தவத்தில் அவருக்கு மறுபடியும் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தின. அம்பிரோஸ் பழைய ஏற்பாட்டை விளக்கிய முறை எபிரேய வேதத்தில் ஆகஸ்தீனுக்கு இருந்த சந்தேகங்களைத் தெளிவு படுத்தின. கிறிஸ்தவம் மெய்யானது என்ற நம்பிக்கை ஆகஸ்தீனின் உள்ளத்தில் திவீரமடைய ஆரம்பித்தது. ஆனாலும், உலக ஆசை ஆகஸ்தீனை உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்தது. முழு இருதயத்தோடும் கிறிஸ்தவப் போதனைகளுக்கு தன்னை ஒப்புக்கொடுக்க ஆகஸ்தீன் போராட வேண்டியிருந்தது. இறுதியில் 386-ல் மிலானின் ஒரு பூந்தோட்டத்தில் தியானம் செய்து கொண்டிருந்த-வேளை புதிய ஏற்பாட்டின் ரோமர் 13:13-14 ஆகிய வசனங்கள் அவருடைய உள்ளத்தை இடியாகத் தாக்கி அவரில் மனந்திரும்புதலைக் கொண்டு வந்தன. இது பற்றி தன்னுடைய வாழ்க்கை சரிதத்தில் எழுதிய ஆகஸ்தீன், "அதற்கு மேல் அந்தப்பகுதியை என்னால் வாசிக்க முடியவில்லை. அந்த வசனங்களை வாசித்து முடித்த உடனேயே விசுவாசத்தின் ஒளி என்னுடைய இருதயத்தை நிறைத்தது. என்னுள் இதுவரை இருந்து வந்த சந்தேக இருள் முற்றுமாக அகன்றது" என்று எழுதினார்.

ஆகஸ்தீன் விசுவாசத்தைப் பெற்றுக்கொண்ட காலத்திலேயே அவருடைய மகன் அடியோடாடஸூம் மனந்திரும்புதலை அடைந்தார். இருவரும் 387-ல் ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று அம்பிரோஸிடமிருந்து ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அடுத்த வருடமே தந்தையும், மகனும் ஆபிரிக்காவிற்குத் திரும்பி அங்கே ஒரு மடத்தை ஆரம்பித்தார்கள்.

ஆகஸ்தீனின் இம்முயற்சி மடவாழ்க்கை முறையை வட மேற்கு ஆபிரிக்கா எங்கும் பரப்பியது. 391-ல் மேற்கு கார்த்தேஜிலுள்ள ஹிப்போவுக்கு ஆகஸ்தீன் போனபோது அங்குள்ள சபையாரின் அதிக வற்புறுத்தலின் காரணமாக அச்சபையின் மூப்பராக நியமிக்கப்பட்டார். ஹிப்போவின் பிசப்பாக இருந்த வெளேரியஸ் (Valerius), இலத்தீன் மொழியறியாத கிரேக்கராக இருந்தபடியால் தனக்குத் தகுந்த ஒரு உதவியாளைத் தேடிப் பல வருடங்களாக ஜெபித்துக் கொண்டிருந்தார். ஆகஸ்தீன் சபையில் இருப்பதைப் பார்த்த வெளேரியஸ் இதைக் குறித்து தனது பிரசங்கத்தில் குறிப்பிட்டபோது முழு சபையும் ஆகஸ்தீனைச் சூழ்ந்து நின்று வெளேரியஸ் தேடிக்கொண்டிருக்கும் மனிதர் இவர்தான் என்று சத்தமிட்டது. ஆகஸ்தீன் கண்ணீரோடு மக்களின் விருப்பத்தைக் கர்த்தரின் சித்தமாக எண்ணி வெளேரியசுக்கு துணையாக இருக்க ஒப்புக் கொண்டார். அன்றிலிருந்து ஆகஸ்தீனுக்கு ஹிப்போவுடனிருந்த 40-வருட காலத் தொடர்பு ஆரம்பித்தது. 396-ல் வெளேரியஸ் இறந்தபோது ஆகஸ்தீன் ஹிப்போவின் பிசப்பாக நியமனம் பெற்றார்.

ஹிப்போவில் ஆகஸ்தீனின் 34 வருட ஊழியம் இந்த உலகத்திலேயே ஓர் சிறந்த மனிதராக அவரை ஒளிவீச வைத்தது. ஒரு பிரசங்கியாகவும், சபை நிர்வாகியாகவும், இறையியல் அறிஞராகவும், கல்விமானாகவும், சிறந்த போதகராகவும், பல நூல்களை எழுதிய எழுத்தாளராகவும் ஆதி சபையில் ஒரு சில சபைப்பிதாக்களே ஆகஸ்தீனைப்போன்ற திறமை கொண்டவர்களாக இருந்தனர். அதுவும் இவையனைத்தையும் ஒட்டுமொத்தமாக் கொண்டிருந்தவர் ஒருவர்கூட இருக்கவில்லை. ஆகஸ்தீனுக்கு சமமாக கூர்மையான இறையியல் சிந்தனையையும், உணர்ச்சி மிகுந்த இறைபக்தியையும் ஒரே-நேரத்தில் கொண்டிருந்தவர்கள் ஆதி சபையில் இருக்கவில்லை. தீ போன்ற இருதயத்தோடும், பரலோக வாழ்க்கையின் தாபத்தோடும் இவ்வுலகில் வாழ்ந்த சிறந்த கிறிஸ்தவராக ஆகஸ்தீன் இருந்தார்.

தன் வாழ்நாளில் பல இறையியல் சச்சரவுகளில் ஆகஸ்தீன் ஈடுபட வேண்டியிருந்தது. அவற்றில் முக்கியமானது பெலேஜியனிசத்திற்கெதிரான (Pelagianism) அவருடைய போராட்டமே. பெலேஜியன் (Pelagian) ஒரு துறவி. பக்திவிருத்தியுள்ள வாழ்க்கையில் அதிக தீவிரம் காட்டி துறவியாக வாழ்ந்த பெலேஜியன் அந்தத் தீவிரத்தால் மனிதனுடைய தன்மையைக் குறித்த தவறான எண்ணங்களைக் கொண்டிருந்தான். கர்த்தரைப் பற்றிய போதனைகளில் நைசீன் விசுவாச அறிக்கையை பெலேஜியன் நம்பினாலும் மனிதனைப் பற்றிய போதனைகளில் பெருந்தவறான கருத்துக்களைக் கொண்டிருந்தான். ஆதாமின் வீழ்ச்சிக்குப் பிறகும் மனிதர்கள் பாவமற்றவர்களாகவே இந்த உலகத்தில் பிறப்பதாக பெலேஜியன் போதித்தான். ஆதாமின் பாவம் மனிதனுடைய பாவமற்ற தன்மையை மாற்றவில்லையென்றும், ஆதாம் தன்னுடைய பாவத்தால் மனித குலத்துக்கு மோசமான ஓர் உதாரணமாக மட்டுமே இருந்தான் என்றும் பெலேஜியனுடைய போதனை இருந்தது. இந்த உலகத்தில் பாவமற்ற மனிதர்களாக பிறந்து அனேகர் வாழ்ந்திருப்பதாகவும் அவர்களில் சிலருக்கு உதாரணமாக தானியேல் போன்றோர் இருந்திருக்கிறார்கள் என்றும் பெலேஜியன் விளக்கினான். 431-ல் எபேசிய சபைக் கவுன்சில் இறுதியில்

பெலேஜியனை போலிப் போதகனாக இனங்கண்டு சபை நீக்கம் செய்து நாடு கடத்தியது.

இந்தப் பெலேஜியன் இறையியல் சச்சரவு, மனிதனுடைய தன்மையைப் பற்றிய அருமையான இறையியல் ஆக்கங்களைப் படைக்க ஆகஸ்தீனுக்கு உதவியது. இந்த உலகில் எல்லா மனிதர்களும் பாவத்தோடு பிறப்பதாகவும், அந்தப்பாவத்தையே ஆரம்பப் பாவமென்று குறிப்பிடுகிறோம் என்றும் ஆகஸ்தீன் விளக்கினார். பாவம் மனிதனுடைய சுதந்திரத்தை இல்லாமலாக்கி அவன் பாவத்தை மட்டுமே செய்யக்கூடியவனாக ஆக்கியிருக்கிறது என்று விளக்கினார். நாம் செய்யத் தகுந்ததைச் செய்வதற்கு சுதந்திரம் கொண்டவர்களாக இல்லாமல், நமது பாவத்தன்மைக்கு உட்பட்டு பாவத்தை மட்டுமே சுதந்திரமாக செய்யக்கூடியவர்களாக இருப்பதாக ஆகஸ்தீன் விளக்கினார். ஒருவிதத்தில் பாவிகளாகிய மனிதர்களுக்கு சுயாதீனமான சித்தம் இருப்பதாகக் கூறிய ஆகஸ்தீன், பாவிகள் எவருடைய வற்புறுத்தலும் இல்லாமல் சுயாதீனமாகவே பாவத்தை விரும்பிச் செய்வதாக விளக்கினார். கிறிஸ்துவின் கிருபை நம்மை இரட்சித்தாலன்றி நாம் சுயமாக, சகல விருப்பத்தோடும், ஆர்வத்தோடும் பாவத்தையே செய்வோம் என்பது ஆகஸ்தீனின் போதனை.

மனிதன் பாவத்திற்கு அடிமையாக இருப்பதால், அவன் தன்னுடைய சுய சித்தத்தின்படி கிறிஸ்துவை விசுவாசிக்க முடியாது என்றும், கர்த்தருடைய வல்லமையினால் மட்டுமே அவன் விசுவாசியாக முடியும் என்றும் ஆகஸ்தீன் விளக்கினார். மனந்திரும்புதல் மனிதனுடைய சொந்த முயற்சியால் ஏற்படாமல், பரிசுத்த ஆவியானவர் இறையாண்மையுடன் பாவிகளின் இருதயத்தில் கிரியை செய்து, அவர்களை பாவத்தின் அடிமைத் தளையில் இருந்து விடுவித்து, அவர்களுடைய இருதயத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றக்கூடிய சித்தத்தை உருவாக்குவதனாலேயே ஏற்படுகின்றதென்று போதித்தார். ஆகவே, கிருபை மனிதனுடைய சுதந்திரமான சித்தமாக அல்லாமல் கர்த்தரின் ஈவாக, ஜீவனை அளிக்கும் பரிசுத்த ஆவியின் வல்லமையாக இருக்கிறது என்றார் ஆகஸ்தீன். ஆகஸ்தீனின் போதனைகளனைத்தையும் இங்கு விளக்குவதற்கு இடமில்லாமல் போனாலும், ஆகஸ்தீன் கிருபையின் போதனைகளை அற்புதமாக விளக்கியிருப்பதை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது.

சிந்தனாவாதியும், சிறந்த எழுத்தாளருமான ஆகஸ்தீன் பல அருமையான நூல்களைத் தன் வாழ்நாளில் படைத்தார். அவற்றில் குறிப்பிட்டுக் கூறக்கூடியவை கொன்பெஷன்ஸ் (Confessions), திரித்துவம் (On the Trinity), கர்த்தரின் நகரம் (The City of God) ஆகியவை.

430-ல் ஆகஸ்தீன் கர்த்தரை அடைந்தார். இருந்தபோதும் அவருடைய இறையியல் போதனைகள் மேற்குப்பகுதி சபையில் தொடர்ந்தும் நிலைத்திருந்தன. அந்தச்சபையின் இறை நம்பிக்கைகளையும், நடைமுறை வாழ்க்கையையும் ஆகஸ்தீனினுடைய எழுத்துக்களும், போதனைகளும் பாதித்ததைப் போல வேறெந்த மனிதருடைய எழுத்துக்களும் பாதிக்கவில்லை.

# "சீர்திருத்த விசுவாசம்" - மூவரின் கண்ணோட்டத்தில்

(இவ்வருடம் ஜனவரி மாதத்தில் ஸ்ரீ லங்காவில் வெளியிடப்பட்ட நமது புதிய வெளியீடான "சீர்திருத்த விசுவாசத்தை" மூவர் அலசி ஆராய்ந்திருக்கிறார்கள். சீர்திருத்த விசுவாசத்தைக்குறித்த இந்த முக்கியமான வெளியீட்டைப் பற்றிய அவர்களுடைய கண்ணோட்டத்தை வாசகர்களுக்கு உதவுமுகமாக இங்கே தந்திருக்கிறோம் - ஆசிரியர்)

## *பாஸ்டர் டி. ஸ்டீபன்சன், மதுரை, தமிழ்நாடு*

திருமறைத்தீபத்தின் ஆசிரியர் எழுதியுள்ள "சீர்திருத்த விசுவாசம்" என்னும் நூல் இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தினர் வாசிக்க வேண்டிய ஒரு முக்கியமான நூலாகும். இன்று பெரும்பாலான கிறிஸ்தவ சபைகள் மனித ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வேத சத்தியத்திலிருந்து விலகி தவறான போதனைகளைக் கைக்கொண்டு ஆராதனை செய்து வருவதைக் குறித்து ஆசிரியர் மிகத் தெளிவாக இந்நூலில் எழுதியுள்ளார். பெலேஜியனிசம், செமி-பெலேஜியனிசம் மற்றும் ஆர்மீனியனிசக் கோட்பாடுகளின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் விவரித்து அவை சத்தியத்திற்கு புறம்பான போதனைகள் என்பதை இந்நூல் மிக அழகாக விளக்குகிறது. அத்தோடு கிருபையின் போதனைகள் பற்றியும், சீர்திருத்த விசுவாசம் பற்றியும் மிக அருமையாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

கல்வினிசப் போதனையான ஐங்கோட்பாடுகள் ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்புடையதாக செயல்படுகின்றன என்பது தமிழ் கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய இன்றியமையாத சத்தியமாகும். தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஆராதனை வெறும் சடங்காக நடத்தப்பட்டு, மனித உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வரும் இந்தக் காலகட்டத்தில் சீர்திருத்த விசுவாசம் என்றால் என்ன? அது எந்தவகையில் கல்வினிச ஐங்கோட்பாடுகளைவிட மேலானது, விரிவானது, முழுமையானது என்பதை வேதபூர்வமான சத்தியங்களின் அடிப்படையில் இந்நூலின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. திருச்சபை சீர்திருத்தத்தின் அவசியத்தையும், விசுவாசிகளின் பரிசுத்த வாழ்க்கையின் அவசியத்தையும் விரிவாக விளக்கும் இந்நூல் வேதம் போதிக்கும் சத்தியங்களை சரியாகப் புரிந்து கொள்ள உதவுகின்றது. தமிழ் கிறிஸ்தவர்களின் விசுவாச வாழ்க்கைக்கும், சபை வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கக்கூடிய இந்நூல் தமிழ் கிறிஸ்தவர்கள் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டியதொன்றாகும்.

## *அருள்செல்வன், கிருபை இலக்கியம், ஸ்ரீ லங்கா*

நான் இந்து மார்க்கத்திலிருந்து கிறிஸ்துவின் கிருபையால் தேவனோடு

தனிப்பட்ட உறவிற்குள்ளும், சபை ஐக்கியத்திற்கும் வந்தவன். என்னுடைய ஆரம்ப கால கிறிஸ்தவ ஜீவியத்தில் உணர்வுகளால் மட்டும் கிறிஸ்துவைத் தேடியும் அதில் திருப்தி கொண்டும், அதிகம் கேள்விகள் கேட்காமல், 'உன் சுயபுத்தியில் சாயாதே' என்ற வசனத்தை தவறான வழியில் பயன்படுத்தி, தெளிந்த புத்தியோடு வேதவசனங்களை ஆராயாமல் துதி, உபவாச ஜெபம் என்று அவற்றில் மட்டும் அதிகமான நேரத்தை செலுத்தும்படி வழிநடத்தப்பட்டவன் நான். இவற்றைச் செய்தவர்களும் அறியாமையினாலேயே அப்படிச் செய்தார்கள் என்பதை நான் அறிவேன்.

இவ்வாறான நிலையில் சீர்திருத்தம் என்றால் என்ன? சீர்திருத்தவாதிகள் யார்? கல்வின் யார்? என்பதை நான் அறிந்திருக்கவில்லை. இன்றும் பல ஆரம்ப விசுவாசிகள் இவற்றை அறிந்திராதிருப்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஏனெனில், தமிழில் இவற்றை விளக்கும் ஆக்கங்கள் அரிது. ஆனால், கடந்த நான்கு வருடமாக ஒரு சீர்திருத்த சபையில் ஐக்கியம் கொண்டு, சீர்திருத்தப் போதனைகளைக் கேட்டு, அது சம்பந்தமான நூல்களை வாசித்து வருகிறேன். இக்காலங்களில், சிலர் சீர்திருத்தவாதத்தை தவறாக விமர்சித்து, சீர்திருத்தவாதிகள் மத்தியில் உள்ள பிரிவுகளையும், குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி ஏளனம் செய்வதைக் கவனித்தவேளையில்தான் நீங்கள் எழுதிய 'சீர்திருத்த விசுவாசம்' என்ற நூலை நான் வாசிக்க நேர்ந்தது. இது தேவனுடைய வழிநடத்தல் என்றுதான் விசுவாசிக்கிறேன். இன்று பல விசுவாசிகள், கிறிஸ்தவர்கள் மத்தியில் ஏன் இத்தனை சபைப்பிரிவுகள் என்று அங்கலாய்த்து குழம்புவதைக் காண்கிறபோது, தேவனை அறியாத மக்கள் மத்தியில் இந்தக் கேள்விகள் எழுவதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இந்த நூலில் போலிப் போதனைகள் உருவாகியவிதத்தையும், அவற்றிற்கெதிராக மெய்க்கிறிஸ்தவர்கள் எடுத்த நடவடிக்கைகளையும் வாசிக்கின்றபோது இன்று அத்தகைய போலிப்போதனைகளுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாதவர்களாய் நாம் வாழ்ந்து வருவதைக் குறித்து என்னால் சிந்தித்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. இன்றைய கிறிஸ்தவ உலகில் மெய்க்கிறிஸ்தவனை அடையாளம் காணவும், மெய்யான உபதேசத்தைக் கண்டு கொள்ளவும், போலிகளைக் குறித்து எச்சரிக்கை அடையவும் கிருபையின் கோட்பாடுகள் பயன்படுவதை இந்நூல் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. கல்வின் எழுதிய The Institute of Christian Religion என்ற நூல் கிருபையின் கோட்பாடுகளை மட்டுமன்றி, வேதபூர்வமான திருச்சபை சீர்திருத்தத்தையும் விளக்குவதை இந்நூலின் மூலமாக அறிந்து கொள்ள முடிந்தது.

மேலும், சீரான வேதபூர்வமான ஆராதனைக் கோட்பாடுகள் பற்றி முறையாக விளங்கிக் கொள்ள உதவுகின்ற இந்நூல் தமிழ் கிறிஸ்தவ உலகில் நல்ல ஆரோக்கியமான ஆராதனை முறையை தோற்றுவிக்க உதவும் என்று நம்புகிறேன். வேதம் கற்றுத்தருகின்ற ஊழியத்தையும், நற்செய்திப் பணியையும் இந்நூல் தெளிவாக விளக்குகின்றது. இந்த முறையில் இந்நாட்களில் ஊழியங்கள் நடைபெறுமானால் பல தேவையற்ற குற்றச் சாட்டுகளைக் கிறிஸ்தவ சபைகள் தவிர்த்துக் கொள்ள முடியும்.

இந்நூலை நான் மட்டுமன்றி என் மனைவியும் ஆர்வத்தோடு வாசித்தார்.

தேவனுடைய இரட்சிப்பு, இயேசு யாருக்காக மரித்தார்? என்பவை பற்றிய போதனைகளில் அவர் மேலும் தெளிவு பெறமுடிந்தது.

மொத்தத்தில் "சீர்திருத்த விசுவாசம்" என்ற இந்நூல் மனிதனுடைய நிலைமையையும், தேவனுடைய தெரிவையும் வேதபூர்வமாக எடுத்துக் காட்டி நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது. சத்தியத்தைத் தெளிவாக அறிந்து கொள்வதற்காக தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களின் வழிநடத்தல், தெளிந்த புத்தியோடு சத்தியத்தை நாம் கற்றுக்கொள்ளவும், போலிகளை இனம் காணவும் உதவும் என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது.

## *ஜேம்ஸ் சுப்பிரமணியன்* B. Eng, *சென்னை, தமிழ்நாடு*

இந்த நூலுக்கும் ஆசிரியர் எழுதியுள்ள ஏனைய நூல்களுக்கும் இடையில் ஓர் வேறுபாட்டைக் காண்கிறேன். அது பாதகமானதொரு வேறுபாடல்ல, சாதகமானதே. இந்த நூலைப்படித்தபோது ஆசிரியரின் நூலைப் படிக்கிறேன் என்ற எண்ணத்தைவிட அவரோடு உரையாடுவதைப் போன்ற எண்ணமே எனக்கு ஏற்பட்டது. அந்தளவுக்கு மொழிநடை நாம் நடைமுறையில் பயன்படுத்துகிற முறையில் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. உதாரணத்திற்கு, "கேட்டவர்களுக்கெல்லாம் இனிப்பு வழங்குவதுபோல ஞானஸ்நானம் கொடுத்து . . .", என்ற வரிகளைக் கூறலாம்.

கல்வினிச ஐங்கோட்பாட்டின் அவசியத்தையும், சபைகளில் தொடர்ந்து செயற்படுத்த வேண்டிய சீர்திருத்தத்தையும் விளக்குவதற்கு கவனத்தோடு இந்நூலில் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சீர்திருத்த விசுவாசத்தின் முக்கியத்துவத்தை விளக்குகின்ற அதேவேளை ஆசிரியர் கல்வினிச ஐங்கோட்பாட்டின் அவசியத்தையும் வலியுறுத்தத் தவறவில்லை.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள சபைகளின் நிலமைகளை ஆராய்ந்தறிந்து, எங்கெல்லாம் சீர்திருத்தம் காணப்பட வேண்டும் என்பதை ஆசிரியர் தெளிவாக விளக்கியிருக்கிறார். சீர்திருத்த சபையைச் சார்ந்தவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்கிற சிலர் கல்வினிச ஐங்கோட்பாட்டோடு நின்றுவிடுகிறார்கள். அதுவும் மனிதன் முழுமையான பாவி, என்ற பல்லவியை மட்டுமே பாடிக்கொண்டிருக்கிறார்கள். இரட்சிப்பை அடைய மனிதன் தன்னுடைய பாவநிலையை அறிய வேண்டியது அவசியமானதுதான். ஆனால், அவன் விசுவாசியான பிறகு எப்படி வாழ வேண்டுமென்பது இன்று அனேக சபைகளில் போதிக்கப்படுவதில்லை. இந்த அவல நிலையை ஆசிரியர் தெளிவாக விளக்கி எழுதியிருப்பது வரவேற்கத்தக்கது. சீர்திருத்தம் என்பது இரட்சிப்பின் போதனை, வாழ்க்கைநெறி, சபை ஆகிய அனைத்திலும் காணப்பட வேண்டும் என்று விளக்கியிருப்பது அவசியமானது. அதுமட்டுமல்லாமல், "பெந்தகொஸ்தேகாரர்களைத் திட்டிக்கொண்டிருப்பது மட்டும் சீர்திருத்தமாகிவிடாது" என்ற ஆசிரியரின் வார்த்தைகள் பொருள் பொதிந்தவை.

சீர்திருத்த போதகர்கள் தங்களுடைய பிரசங்க மேடைகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஆசிரியரின் வார்த்தைகளை நான் வரவேற்கிறேன். "இந்த உலகத்தில் நாம் பரிபூரண நிலையை எட்ட முடியாது ஆகவே, சபை சீர்திருத்தம்

பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை'' என்ற எண்ணத்தில் பலர் தங்களுடைய போதக ஊழியங்களை நடத்திவருகிறார்கள். ஆனால், சபை பரிபூரணத்தை இந்த உலகத்தில் அடைய முடியாவிட்டாலும் பரிபூரணமாகிய அந்த இலக்கை நோக்கி நடைபோடுவதையே தனது இலட்சியமாக எப்போதும் கொண்டிருக்க வேண்டும் என்ற கர்த்தரின் கட்டளை அவர்களுக்குத் தெரிவதில்லை.

சீர்திருத்த போதனைகளை அறியாதவர்களையெல்லாம் சபைகளில் பிரசங்கிக்க விடுவது சில கல்வினிசப் போதகர்களுக்கு தொழிலாக இருக்கின்றது. நாமே பிரசங்கித்துக்கொண்டிருந்தால் சபை விசுவாசிகள் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்ற தவறான எண்ணத்தில் இவர்கள் இதைச் செய்கிறார்கள். ''மனிதனுக்குப் பயப்படுவது என்பது சீர்திருத்தவாதிகளின் அகராதியில் எப்போதுமே இருக்கவில்லை'' என்ற ஆசிரியரின் வரிகள் இத்தகைய எண்ணம் கொண்டவர்களுக்கு சவுக்கடி போன்றது.

தமிழர்கள் மத்தியில் பெரும்பாலான சபைகளில் பெண்களின் ஆதிக்கம் ஓங்கி-யிருக்கிறது. ஒவ்வொரு சபைகளிலுமுள்ள குளருபடிகளை ஆராய்ந்து, பெண்கள் சபைகளில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார் ஆசிரியர். இதை வாசித்தும் சபைகள் சீர்பட முடியாவிட்டால் செய்வதற்கு வேறொன்றுமில்லை.

ஆராதனையின்போது சபைகளில் நாம் செய்ய வேண்டியது என்ன, என்பதை ஊசாவின் உதாரணம் தெளிவாக விளக்குகின்றது. பத்துக்கட்டளைகள் பற்றி இன்று அனேக தவறான கருத்துக்கள் உலவுகின்றன. அது பற்றி நூலில் விளக்கியிருப்பதும் நன்மையானது. நற்செய்தி ஊழியத்தில் சுவிசேஷப் பிரசங்கம் எத்தனை இன்றியமையாதது என்று சாதக பாதக உதாரணங்களோடு விளக்கியிருப்பது பயனுள்ளது. இரண்டாம் அதிகாரத்தில் கல்வினின் ஐங்கோட்பாட்டின் அவசியத்தை உணர்த்த முன்னோர்கள் பலரின் கூற்றை சுட்டிக்காட்டியிருப்பது, நாம் விசுவாசிப்பது வரலாற்றுபூர்வமான விசுவாசம் என்பதை நினைவுபடுத்துகிறது.

ஆசிரியர் ஏற்கனவே வெளியிட்டுள்ள ''திருச்சபை சீர்திருத்தம்'' என்ற நூலும், ''சீர்திருத்த விசுவாசம்'' என்ற இந்நூலும் திருச்சபைகளில் வழிகாட்டு நூல்களாக வைத்துப் பயன்படுத்த வேண்டியவை. இது என்னுடைய தனிப்பட்ட கருத்து.

என்னுடைய வாழ்க்கையில் நான் வழிதவறிவிடாமல் இருக்கவும், என்னுடைய விசுவாச வாழ்க்கையை அவ்வப்போது சீர்தூக்கிப்பார்க்கவும் இந்த நூல் மிக வும் துணையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தமிழ் மக்களுக்கு எது தேவையென்பதை அறிந்து இவ்விதமான படைப்புக்களைத் தந்து வரும் ஆசிரியருக்கும், வெளியீட்டாளர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த பாராட்டுக்கள்.

*நமது வெளியீடான ''சீர்திருத்த விசுவாசம்'' என்ற நூலை ஸ்ரீ லங்காவில் கிருபை இலக்கியம், 19. இராஜசிங்க வீதி, கொழும்பு-6 என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். நூலின் விலை ரூபாய் 65.00*

# கிறிஸ்தவ கோட்பாடுகள்

*கேள்வி: 76 எட்டாவது கட்டளை என்ன?*

*பதில்: "களவு செய்யாதிருப்பாயாக" என்பது எட்டாவது கட்டளையாகும்.*

*(யாத்திராகமம் 20:15)*

*கேள்வி: 77 எட்டாவது கட்டளை மூலம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது?*

*பதில்: நாம் நியாயமான முறையில் செல்வத்தையும், சொத்துக்களையும் சேர்ப்பதோடு மற்றவர்களும் அதேபோல் முன்னேறவும் உதவ வேண்டுமென்று எட்டாம் கட்டளை எதிர்பார்க்கிறது.*

*(1 தீமோத்தேயு 5:8; நீதிமொழிகள் 27:23; அப்போஸ்தலர் 20:33-35; பிலிப்பியர் 2:4; லேவியராகமம் 25:35; உபாகமம் 22:1-4; யாத்திராகமம் 23:4-5; யோபு 29:11-17)*

*கேள்வி: 78 எட்டாவது கட்டளை எதைத் தடை செய்கிறது?*

*பதில்: நம்முடையதும் அயலானுடையதும் செல்வத்தையோ அல்லது சொத்தையோ நீதியற்றமுறையில் கெடுப்பதை எட்டாம் கட்டளை தடை செய்கிறது.*

*நீதிமொழிகள் 21:17; 23:20-21; 28:19; எபேசியர் 4:28)*

**விளக்கக்குறிப்பு:** *அனைத்திற்கும் சொந்தக்காரராக கர்த்தரே இருக்கிறார். (சங். 89:11). மனிதன் கர்த்தருக்குப் பொறுப்புள்ளவனாக இருந்து சேவை செய்வதற்காகவே அவன் சொத்துக்களுக்கு உரிமையுள்ளவனாக இருக்க கர்த்தர் அனுமதித்திருக்கிறார். ஆதியாகமம் 1-ம் அதிகாரத்தில் கர்த்தர் அனைத்தையும் படைத்து மனிதன் அனுபவிப்பதற்காக வழங்கியதாக வாசிக்கிறோம் (ஆதி. 1:29). மனிதன் பாவத்தில் வீழ்ந்த பிறகும் கர்த்தரின் படைப்புகளை அனுபவிக்கும் உரிமையை இழக்கவில்லை. கர்த்தரே ஒவ்வொரு நாட்டிற்கும் சொந்தமான இடங்களைத் தீர்மானித்திருக்கிறார் (அப். 17:26). கர்த்தரே ஒவ்வொரு மனிதனுக்கும் வெவ்வேறான தாலந்து-களை வழங்கி அவர்கள் சொத்துக்களை சேர்த்துக் கொள்ளும் வசதியை செய்து தந்திருக்கிறார். ஒவ்வொரு மனிதனும் கர்த்தரால் தனக்களிக்கப்-பட்டிருக்கும் தாலந்துகளையும், வாய்ப்புகளையும் நல்ல முறையில் பயன்-படுத்திக் கொள்ள வேண்டுமென்று வேதம் எதிர்பார்க்கிறது (நீதி. 6:6-8).*

*சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை மனிதனுக்கில்லாமலிருக்கு-மானால் வேதம், களவு செய்யாதிருப்பாயாக என்ற கட்டளையைத் தந்திருக்காது. சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை மனிதனுக்கு இல்லாமலிருந்தால் அவனிடமிருந்து ஒருவரும் எதையும் திருட முடியாது. இந்தக் காரணத்தால்தான் பொருளுடமைவாதம் மற்றும் சமூகவியல்வாதம் ஆகிய கோட்பாடுகளை கிறிஸ்தவர்கள் நிராகரிக்க வேண்டும். இந்த இரு கோட்பாடுகளும் தனி மனிதன் சொந்தமாக சொத்துக்களை வைத்திருக்-காமல் எல்லோரும் பொதுவாக சொத்துக்களுக்கு உரிமையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று போதிக்கின்றன. எல்லாமே எல்லோருக்கும் சொந்தமாக இருக்குமானால் தனியொருவன் எதையும் சொந்தமாக*

வைத்திருக்க முடியாது.

முதலாளித்துவ அமைப்பு முறையில் சில நடைமுறைக் குறைபாடுகளைப் பார்த்ததாலும், ஆதி சபையின் கிறிஸ்தவர்கள் பின்பற்றிய சொத்துப் பகிர்தல் முறையினாலும் (அப். 2:44, 45) கிறிஸ்தவர்கள், பொருளுடமை வாதமும், சமூகவியல்வாதமும் தப்பானவைகளாக இருக்காது என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அப். 2-ஐயும், 5:1-5-ஐயும் கவனமாக வாசித்துப் பார்த்தால் ஆதி சபை கிறிஸ்தவர்களால் சில காலம் பின்பற்றப்பட்டு வந்த சொத்துப் பகிர்தல் முறைக்கும் பொருளுடமை-வாதத்திற்கும் பெரும் வித்தியாசம் இருப்பதைப் பார்க்கலாம். ஆதி சபைக் கிறிஸ்தவர்கள் தாங்களாகவே விரும்பி தங்களுடைய சொத்தைப் பகிர்ந்து கொண்டார்களே தவிர பொருளுடமைவாதக் கோட்பாடு போதிப்பது போல் பிறரின் வற்புறுத்தலின் காரணமாக அப்படிச் செய்யவில்லை. ஆதி சபைத் தலைவர்களான அப்போஸ்தலர்கள் தனி மனிதனின் சொத்து சேர்க்கும் உரிமையை எப்போதுமே அங்கீகரித்துள்ளார்கள் (அப். 5). தன் நிலத்தை விற்ற பணத்திற்கு சொந்தம் கொண்டாடியதல்ல அனனியாவின் தவறு. முழுப்பணத்தையும் அனுபவிக்க அவனுக்கு உரிமை இருந்தது. ஆனால், அவன் விற்ற பணத்தைக் கர்த்தருக்கு கொடுப்பேன் என்று உறுதி எடுத்திருந்து பின்பு மனம் மாறி சொன்னதைச் செய்யாததே அவன் விட்ட தவறு. அதற்காகவே கர்த்தர் அவனையும், அவன் மனைவியையும் தண்டித்தார்.

நியாயமான இருவழிகள் மூலம் நாம் எப்போதுமே செல்வத்தை சேர்க்க வேண்டும் என்று வேதம் போதிக்கின்றது. (1) பாரம்பரியமாக நியாயமாக நமக்குக் கிடைக்கும் குடும்பச் சொத்தை அனுபவிக்க நமக்கு உரிமை உண்டு (எண். 36:7-9; 2 கொரி. 12:14; எபே. 4:28; பிலி. 4:18). இந்த வகையில் நமது பெற்றோர்களிடம் இருந்து நமக்கு வரும் முதற்பலன் நம்மைச் சார்ந்தது. (2) அடுத்ததாக, நாம் உழைத்துச் சம்பாதித்த சொத்தை அனுபவிக்கும் உரிமை நமக்கு உண்டு. பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில், இதுவரை திருடியவன் இனித் தொடர்ந்து திருடக்கூடாது என்று எழுதியதோடு தன் சொந்தக் கையைப் பயன்படுத்தி அவன் உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்றும் எழுதியிருக்கிறார் (எபே. 4:28). இந்த இரண்டு வழிகளின் மூலமும் சம்பாதித்த சொத்தில் எந்தத் தீமையும் இல்லை. தீமைகளுக்கு மூலகாரணம் பணமோ, சொத்தோ அல்ல. வேதம் சொல்லுகிறது, பண ஆசையும், சொத்தாசையும் தான் எல்லாத் தீமைகளுக்கும் மூல காரணம் என்று. மேலே நாம் பார்த்த இரண்டு நியாயமான வழிகளின் மூலம் நாம் செல்வத்தை அடைவதோடு, கர்த்தருக்குப் பணி செய்வதற்காக அதைப் பயன்படுத்தும் நோக்கத்தோடு வாழ்ந்தால் செல்வமும், சொத்தும் நமக்கு ஆசீர்வாதமாகத்தான் இருக்கும். நமது கரங்களைக் கொண்டு உழைத்து தேவையான பணத்தை சேர்த்துக் கொள்ளும்போதுதான் நமது கடமைகளை நாம் முறையாக செய்ய முடியும் (நீதி. 27:23, 27). "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விஷேசமாக தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாய் இருப்பான்" (1

தீமோ. 5:8). இவ்வசனத்தின்படி உழைத்து, சம்பாதித்து தன்னுடைய குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றாத விசுவாசி அவிசுவாசியைவிட மோசமானவன்.

நியாயமற்ற வகையில் சொத்தைச் சேர்ப்பதையே திருட்டாகக் கருதுகிறது வேதம். அதாவது, (1) முதலாவதாக, நமக்கு யாராலும் நன்கொடையாக கொடுக்கப்படாத எதுவும் நம்மைச் சேர்ந்ததல்ல. (2) நமது சொந்த உழைப்பின் மூலம் பெறப்படாத எதுவும் நமக்கு சொந்தமானதல்ல. திருட்டில் சூதாடுதலும் அடங்கும். ஏனெனில், உழைக்காமல் இலகுவாக பணம் சேர்க்க வழி செய்வதே சூதாடுதல். பணம் சேர்க்கும் ஒரே நோக்கத்திற்காக, அதுவும் உழைக்காமல் இலகுவாக பணம் சேர்க்கும் நோக்கத்தில்தான் அனேகர் சூதாடுகிறார்கள். நியாயமான வகையில் பணம் சேர்ப்பதற்கு நாம் மேலே பார்த்த இரண்டு வழிகளுக்குள்ளும் சூதாடுதல் அடங்கவில்லை. ஆகவே, அது ஒருவகைத் திருட்டே.

திருட்டில் இன்னொரு வகை சோம்பேரித்தனம். வேலைத்தளத்தில் உழைக்க வேண்டிய ஒருவன் வேலை நேரத்தை உறங்குவதற்காகப் பயன்படுத்திக் கொண்டால் அது ஒருவகைத் திருட்டு. ஏனெனில், நாம் வேலையில் சேரும்போது ஒத்துக்கொண்டவிதத்தில் கவனத்தோடு வேலை நேரத்தை வேலை செய்வதற்கு பயன்படுத்தாமல் உறங்குவதால் நமக்கு ஊதியம் கொடுப்பவர்களின் நேரத்தை நாம் திருடுகிறோம். அத்தோடு, அவர்களுக்கு கொடுக்க வேண்டிய உழைப்பையும் அந்த நேரத்தில் கொடுக்காததால் திருட்டு இருமடங்காகிறது. தமிழினத்தில் இத்தகைய திருட்டு அதிகம். வேலை செய்ய வேண்டியவர்களில் எத்தனையோ பேர் சோம்பேரித்தனத்தால் உழைக்காமல் இருந்து கையேந்தி வாழப்பார்க்கிறார்கள். இத்தகையோருக்கு கிறிஸ்தவ ஊழியம் இன்று வாய்க்காலாக இருந்துவிடுகிறது. கிறிஸ்தவ ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் அனேகர், போதகர்களும்கூட இந்த விதத்தில் உழைக்காமல் கையேந்தி வாழும் அவலம் நம்மினத்தில் அதிகம். ஊழியக்காரன் உடலை வருத்தி உழைத்துச் சம்பாதித்தால் மக்கள் மதிக்கமாட்டார்கள் என்று சொன்ன ஒரு ஊழியக்காரரையும் நான் அறிவேன். இது பெருந்தவறான ஓர் எண்ணம். வேதம் எல்லோரையும் உழைத்துச் சம்பாதிக்கவே வற்புறுத்துகிறது. உழைக்காமல் பணம் சேர்க்கப் பார்க்கிற அனைவரும் திருடர்களே. உழைக்க மறுக்கிறவன் உணவருந்தத் தகுதியில்லாதவன் என்று பவுல் சொல்லியிருக்கிறார் (2 தெசலோ. 3:10). பிரசங்கத்தை உழைத்துத் தயாரித்து வாரா வாரம் பிரசங்கிக்காத பிரசங்கிகள் சபையில் ஊதியம் வாங்குவதற்கு வெட்கப்பட வேண்டும். ஊதியம் கொடுக்கும் அளவுக்கு தன்னுடைய ஐக்கியத்தில் ஆத்துமாக்கள் இல்லாமல் இருந்தாலோ, சபை சிறிதாக இருந்தாலோ ஊழியக்காரன் தன்னையும், தன் குடும்பத்தையும் போஷிக்க ஒரு தொழிலைச் செய்வது நேர்மையானது.

திருட்டில் இன்னொருவகை எதையும் வீணாக்குதல். எதையும் வீணாக்குகிறவன் சோம்பேரிக்கு ஒப்பானவன் என்று வேதம் சொல்லுகிறது (நீதி. 18:9). வேலைத்தளத்தில் நாம் அக்கறையில்லாமல்

வேலைச் சொந்தக்காரருக்குரிய பொருட்களை வீணாக்கக்கூடாது. நமது சொந்தப் பொருட்களைப்போல அங்கிருக்கும் பொருட்களை அக்கறையோடு பயன்படுத்த வேண்டும். அவற்றை நாம் வீணாக்கினால் வேலைச் சொந்தகாரருக்கு செலவு அதிகமாகும். அந்த செலவை அவர் தன்னுடைய பொருட்களைத் தயாரிக்கும் செலவில்தான் இறுதியில் சேர்க்க நேரும். இதனால் நம்முடைய அக்கறையற்ற செயல்களால் பொருட்களின் விலை அதிகரித்து அனேகருக்கு துன்பமும் நேரிடலாம். தமிழ்நாட்டில் பஸ், லாரி, ஆட்டோக்களை எரிக்கும் கலாச்சாரத்தால் நாட்டிற்கு எத்தனை செலவு ஏற்படுகின்றது என்று ஒருவருமே எண்ணிப்பார்ப்பதில்லை. அதேபோல் ஊரெல்லாம் புகையிலை எச்சிலைத் துப்பி, ஒருவரும் நடைபாதையில் நடக்க முடியாதபடி செய்தும், எல்லோருடைய சுகாதாரத்துக்கும் ஆபத்து விளைவிப்பவர்களும் இந்தக் கூட்டத்துக்குள்ளேயே அடங்குகிறார்கள்.

இறுதியாக, ஏமாற்றுதல் ஒரு பெருந்திருட்டு. மனிதர்களுடைய தேவைகளைப் பயன்படுத்தி, தேவைக்கு மேல் ஒரு பொருளுக்கு விலை கூறிப் பணத்தை வாங்கினால் அது திருட்டு. இன்று மக்களை எப்படியாவது பொருட்களை வாங்க வைத்துவிட வேண்டும் என்பதற்காக அநியாயமாக அந்தப் பொருட்களை அளவுக்கு மீறிய விதத்தில் விளம்பரப்படுத்தி, பொய்களைச் சொல்லி விற்பது ஏமாற்றுதலே. அதுவும் ஒருவகைத் திருட்டு என்கிறது வேதம். இயேசுவின் பெயரைச் சொல்லி மக்களை ஏமாற்றிப் பணம் சேர்க்கிற ஊழியக்காரர்களும் திருடர்களே.

திருட்டு என்னென்ன விதத்தில் எல்லாம் உருவமெடுத்து நாம் எட்டாம் கட்டளையை மீற வைக்கிறது என்பதை சொல்லி முடியாது. கர்த்தருக்கு கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமலும், நேர்மையாக சபை ஊழியம் செய்து வரும் போதகர்களுடைய தேவைகளை நிறைவேற்றாமலும் இருப்பதும் திருட்டே. இந்தத் திருட்டைப்பற்றித்தான் பழைய ஏற்பாட்டு மல்கியா புத்தகம் பேசுகிறது. அதேநேரம், வேதபூர்வமாக சபை அமைத்து போதக ஊழியத்தைச் செய்யாமலும், ஒருவருக்கும் கட்டுப்படாமலும் ஊழிய நாடகம் நடத்துபவர்களுக்கு பணம் கொடுப்பதையும் கர்த்தர் திருட்டாகத்தான் கருதுகிறார். ஏனெனில், கொடுக்கக் கூடாதவர்களுக்கு நாம் பணம் கொடுத்தால் அது அநியாயம், பணத்தை விரயம் செய்யும் செயலாகும். நியாயமான முறையில் கர்த்தருடைய நேர்மையான ஊழியங்களுக்கு கொடுத்தால் மட்டுமே அது கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படுகிற கிறிஸ்தவ சேவையாக இருக்கிறது.

பவுல் கூறுவதுபோல், நமக்கு மேலிருப்பவர்களுக்கு நாம் கட்டுப்பட்டு, மனித பயமில்லாமல், கர்த்தருக்கென்று ஒரே இருதயத்தோடு உழைக்க வேண்டும். கர்த்தருடைய சித்தத்தின் ஒருபகுதியாக அதை எண்ணி நாம் நேர்மையாக உழைக்கும்போதே நாம் கர்த்தரின் சித்தத்தை நிறைவேற்று-கிறோம் (எபே. 6:5-8). அதேபோல, வேலை வாங்குபவர்களும் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். உழைப்பின் உயர்வை உணர்ந்து ஒவ்வொரு-வரும் செயல்பட்டால் திருட்டுக்கு எங்கும், எப்போதும் இடமிருக்காது. நம் இனத்தை இன்று வாட்டும் இலஞ்சத்திற்கும் இடமிருக்காது.

# எண்ணங்கள்!

நீங்கள் வெளியிட்ட சிறுவர்களுக்கான உபதேசத்தை வாசித்தேன். எங்களுடைய சபை சிறுவர் பாடசாலையை நடத்துவதற்கு மிகவும் பயனுள்ளதாகவும், ஆசீர்வாதமாகவும் இருந்தது. இதை வாசித்தபிறகு எங்கள் சபையிலுள்ள பிள்ளைகளின் வாழ்க்கையில் பெருமாற்றம் ஏற்பட்டது. விசுவாச அறிக்கை நூலையும் சபைக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறேன். உங்கள் வேத உபதேசங்களைக் கற்றுக்கொள்ள மிகவும் வாஞ்சையாக இருக்கிறோம்.
- *பாஸ்டர் ஆசீர்வாதம், ஸ்ரீ லங்கா*

அன்மையில் நோர்வேயில் வாழ்ந்துவரும் என்னுடைய சகோதரி மூலம் உங்களுடைய திருமறைத்தீபத்தின் படைப்புகளைப் பெற்று வாசித்து அகமகிழ்ந்தேன். அவைகளில் ஓர் இதழில் காணப்பட்ட திரித்துவம் (விசுவாச அறிக்கை) பற்றிய போதனைகளின் மூலம் என்னுடைய நீண்ட கால ஆவலை என் ஆண்டவர் தீர்த்து வைத்தார். திரித்துவப் போதனைகளைத் தெளிவாக அறிந்து கொள்ள பல வேதாகமக் கல்லூரி ஆசிரியர், விரிவுரையாளர்களிடம் மன்றாடிக் கேட்டிருக்கிறேன். ஒருவராலும் இதுவரை எனக்கு உதவமுடியவில்லை. உங்கள் மூலம் அந்தக்குறையை என் தேவன் பூர்த்தி செய்ததையிட்டு பூரிப்படைந்தேன். திரித்துவம் பற்றிய மேலும் விளக்கங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் அனுப்பி என்னுடைய ஆத்மீகத் தேவைகளை தயவு செய்து நிறைவேற்றி வையுங்கள்.
- *திரு. அருட்பிரகாசம், டென்மார்க்*

தங்களுடைய வெளியீடுகளில் சிலவற்றைப் பெற்று நான் அதிகமாய் விரும்பிப் படித்து வருகின்றேன். சென்னையில் நான்கு வருடங்கள் இறையியல் கல்லூரி ஒன்றில் படித்தேன். அந்த நான்கு வருடங்களில் அறிந்து கொண்டிராத பல வேத விளக்கங்களை உங்களுடைய படைப்புகள் மூலம் அறிந்து வருகிறேன். பலருடைய ஆக்கங்களைப் படிக்கின்ற எனக்கு உங்களுடைய படைப்புகளும், விளக்கங்களும் மிகவும் பிடித்திருக்கிறது. இன்று தமிழ் மக்கள் மத்தியில் குருட்டாட்டமான பக்தியும், எதையும் தீர்க்கமாக ஆராயாது கூட்டம், கூட்டமாக ஒடி ஏற்றுக்கொள்கின்ற நிலையும் அதிகரித்து வருகின்றது. இவைகளை உணர்ந்த நீங்கள் சத்திய வசனங்களை சரியாக உணரும்படியாக விளக்கமளிப்பது பாராட்டுக்குரியது. பிரசங்கம் என்றால் என்னவென்று தெரியாத நிலையில் பிரசங்கிக்கும் பிரசங்கிகள் பெருகி வருகிறார்கள். அவர்களுக்கு ‘எது பிரசங்கம்’, ஆக்கம் நல்ல பாடம்! ‘பக்தி இயக்கமும், கிறிஸ்தவமும்’ என்ற தலைப்பில் பூர்வீக சபைகளின் தவறான போக்கு, ஆதிக்கம் என்பவற்றை விளக்கி பல சரித்திர உண்மைகளை விளக்கியிருப்பது சிறந்தது. ‘அப்போஸ்தல வரம்’ அருமையான விளக்கம். ‘ஊழியக்காரர்களின் ஒழுக்கக் கேட்டை அசட்டை செய்லாமா?’ அபாரம். இவற்றை இன்றைய தமிழ் நாட்டு சபைப்பிரிவினர், ஊழியர்கள் உணர வேண்டியது அவசியம். நான் 30 ஆண்டுகாலமாக ஊழியம் செய்து வருகிறேன். திருறைத்தீபம் என் சுவிசேஷப்பணிக்கு வெளிச்சமாய் இருந்து வருகிறது. - *என். எஸ். அருமைநாதன், தமிழ்நாடு*

நான் 25 வயதில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தேன். இப்போது இறையியல் கல்லூரி ஒன்றில் படித்து வருகிறேன். உங்களுடைய திருமறைத்தீபம் மூலம் அனேக காரியங்களைக் கற்றுக் கொண்டேன். பத்திரிகையின் இறையியல் கோட்பாடுகள் என்னை அதிகம் சிந்திக்க வைத்தது. பிரசங்கத்திற்கும் மிகவும் உதவியாக இருக்கின்றது. எனக்கு பத்திரிகையை தயவு செய்து அனுப்பி உதவுங்கள். என்னுடைய நிகழ்கால, எதிர்கால ஆத்மீக வாழ்க்கையின் விருத்திக்கும், ஊழியத்திற்கும் அது துணையாக இருக்கும் - *ஜே. நவீன், தமிழ்நாடு*


நமது ஜூலை 2003 வெளியீடு

## ஏன் பிரசங்கம் !

விலை ரூ. 12/-

பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி:

சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள்
22 டீ. பி. கே மெயின் வீதி
பைகாரா
மதுரை 625004




*சீர்திருத்த போதனைகளைத் தரும் நமது வெளியீடுகள்*

## 1689 விசுவாச அறிக்கை

## சிறுவர்களுக்கான வேத உபதேசம்

## பரிசுத்த வேதாகமம்

எழுதியவர்கள்: ஆர். பாலா, ஜோன் ரூத்தர்

## சீர்திருத்த விசுவாசம்

எழுதியவர்: ஆர். பாலா

இந்தியாவில் இருப்பவர்கள் இந்நூல்களையும் நமது ஏனைய வெளியீடுகளையும் கீழ்வரும் இந்திய முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

*Reformed Baptist Publications*
*22 T. P. K . Main Road*
*Pykara, Madurai 625004, Tamil Nadu. S. India*
*Phone: (452) 2371659*

ஸ்ரீ லங்காவில் இந்நூல்களையும் நமது ஏனைய வெளியீடுகளையும் வாசகர்கள் கீழ்வரும் முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

*Diakrisis Book Service*
*19 Rajasinghe Road, Colombo 6, Sri Lanka*




மலர் 9 அக்டோபர் - டிசெம்பர் 2003 இதழ் 4

1. ஊழியம் குடும்பச் சொத்தாகலாமா?

2. பிரசங்கம் தயாரித்தல் - II

3. ஆன்மீகக் குழப்பம் - முடியாத தொடர்கதை . . .

4. உலகத்தில் அன்புகூராதிருங்கள் - II

5. ஹிப்போவின் ஆகஸ்தீன்

6. "சீர்திருத்த விசுவாசம்" - மூவரின் கண்ணோட்டத்தில்

7. கிறிஸ்தவ கோட்பாடுகள்

8. எண்ணங்கள்!

Te Rau Print